# அனைவருக்கும் அறிக்கையிடல்

## இலங்கையில் பொதுமக்கள் சேவை ஊடகத்துறை கலாசாரத்தினை விருத்தி செய்தல்



## ஊடகவியலாளர் கையேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**
24/2 28th Lane, Flower Road,
Colombo - 07
Sri Lanka
Phone : +94 11 2573439
Fax : + 94 11 4714460
Email : cpa@cpalanka.org

**ஐ.எவ்.ஜே. மத்திய நிலையம்**
International Federation of Journalists
Residence Palace, Block C
155 Rue de la Loi
B-1040 Brussels, Belgium
Telephone : +32 2 235 22 00
Telefax : +32 2 235 22 19
Email : ifj@ifj.org
Website : www.ifj.org

**ஐ.எவ்.ஜே. தெற்காசிய பசுபிக்**
245 Chalmers Street
Redfern NSW 2016 Australia
Telephone : +61 2 9333 0999
Fax : +61 2 9333 0933
Email : ifj@ifj-asia.org

**ஐ.எவ்.ஜே. தெற்காசிய அலுவலகம்**
New Delhi
Mobile : +91 9818 383 669
Email : ifjsouthasia@hotmail.com
Website: www.ifj-asia.org


**இலங்கை அமைப்புக்கள்**


**இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் SLWJA**
276/3 Pradeepa Mawatha, Maligawatthe
Colombo 10
Phone : +94 1 429248
Fax : +94 1 429240

**ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் FMETU**
Lake House, Colombo 10
Phone : +94 1472407
Fax : +94 1472704
Email : fmetu@sltnet.lk

**இலங்கை தமிழ் ஊடகவியலளார் ஒன்றியம் SLTMA**
113/6, Eli HOuse Road,
Colombo 15, Sri Lanka
Email : tamilmedia@hotmail.com
Website : www.sltma.com

**ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் SLMMF**
A3, 1/1, Manning town,
Colombo 08, Sri Lanka
Phone : +94 0112688293
Fax : +94 0114204765

**சுதந்திர ஊடக இயக்கம் FMM**
237/22, Wijaya Kumaratunga Mawatha,
Colombo 05, Sri Lanka
Phone : + 94 777 312457 or +94 777 394959


**அனைவருக்கும் அறிக்கையிடல்**

**இலங்கையில் பொதுமக்கள் சேவை ஊடகத்துறை கலாசாரத்தினை விருத்தி செய்தல்
ஊடகவியலாளர்களுக்கான கையேடு**


| | |
|---|---|
| **பதிப்பாசிரியர்கள்** | - ஜெக்குலின் பார்க், சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் |
| **எழுத்தாளர்கள்** | - மைக் டொபி, சுனந்த தேசப்பிரிய, ஜெக்குலின் பார்க் |
| **நன்றி** | - பீ ஜேம்ஸ், சில்வியா கிரேஷியா |
| **வடிவமைப்பு** | - லூசி சமடோன், கெட்பிலய் மீடியா |
| **நிழற்படங்கள்** | - புத்திக வீரசிங்க |
| **கேலிச் சித்திரங்கள்** | - கெதி வில்கொர்ஸ் |

இலங்கையில் நல்லிணக்கத்திற்காக குரல் கொடுப்பவர்களின் கருத்திட்டத்தில் (Sri Lanka Voices of Reconcillation project) ஓர் அங்கமாக இவ் ஆவணமானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (Centre for Policy Alternatives), சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் (IFJ) ஆகியவற்றினால் இணைந்து வெளியிடப்பட்டது. இதற்கான நிதியுதவிகளை அவுஸ்திரேலியன் எய்ட் (AUSAID), கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் (CIDA) ஆகியன வழங்கின. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்கள் கண்டறிதல்கள், தீர்மானங்கள், விதப்புரைகள் ஆகியன IFJஇற்கு உரியதாகும். இவை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், AUSAID, CIDA ஆகியவற்றின் கருத்துக்களைப் பிரதிபலிக்க வேண்டுமென்ற அவசியமில்லை.



இப்பிரசுரத்தின் எந்தவொரு பகுதியும் வெளியீட்டாளரின் எழுத்துமூல அனுமதியின்றி எந்த உருவத்திலும் மீள் பிரசுரம் செய்யப்படக்கூடாது. இப்புத்தகத்தின் பதிப்புரிமை ஆசிரியருக்குரியது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பயன்படுத்தும் உரிமை அவற்றை ஆக்கியவர்களுக்குரியது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்







1. அறிமுகம் ....4
2. சமூகப் பெறுமானங்களுடன் கூடிய சிறப்பான ஊடகத்துறை ....5
3. இலங்கையில் பொதுமக்கள் சேவை ஊடகத்துறை ....
   - ஓர் அவசியமான சமூகச் சேவை ....9
4. இலங்கையில் ஊடகங்கள் எவ்வாறு செயலாற்றுகின்றன ....10
5. ஊடக சாசனம் 2005 ....13
6. ஒழுக்கநெறி, பன்முகத்தன்மை மற்றும் சமூக
   அக்கறையுள்ள ஊடகத்துறை ....14
7. பதிப்பாசிரியர் சுதந்திரம் ....20
8. பொதுமக்களை ஈடுபடுத்தல் ....22
9. பயிற்சிகள் ....25

அனுபந்தம் I ராவய ....28

அனுபந்தம் II ஊடக சாசனம் ....29

வளங்களும் உசாத்துணையும் ....31




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. அறிமுகம்

சமூகத்தின் கண்களாகவும், காதுகளாகவும் ஊடகவியலாளர்கள் திகழ்கின்றனர். இவர்கள் களத்தில் இருந்து நிகழ்வுகளையும், ஏனைய விடயங்களையும் பகுப்பாய்வு செய்து எமக்குத் தருகின்றனர். நாம் வாழ்கின்ற உலகில் நடைபெறும் பெரும்பாலான விடயங்கள் இவர்கள் மூலமாகவே காட்டி உணர்த்தப்படுகின்றன.

ஊடகங்களில் கிடைக்கும் தகவல்களின் நன்னடத்தை தன்மை துறையிலுள்ள ஊடகவியலாளர்களின் தொழில்வாண்மை ஒழுக்கநெறி மற்றும் துணிச்சல் ஆகியன அவர்கள் பணிபுரியும் ஊடகக் கலாசாரத்திற்கமையவே தீர்மானிக்கப்படுகிறது.

சனநாயக நிறுவனங்களை கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகள், இனப்பிரச்சினையை இல்லாதொழித்தல், பொது மக்களது பங்கு பற்றுதலை மேம்படுத்துதல் போன்றன தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகள் இலங்கையில் வெற்றிகரமாக அமைவதற்கு காத்திரமிக்க சுயாதீனமான ஊடகத்துறையை வலுப் படுத்தவது முக்கியமானதாகும்.

நாட்டில் நீண்ட காலமாக நடைபெற்றுவரும் யுத்தத்தின் காரணமாக மக்கள் இன ரீதியாகவும், கலாசார ரீதியாகவும், மொழி, சமய ரீதியாகவும் பிரிக்கப்பட்டுள்ளனர். ஊடகங்களில் சமகாலத்தில் வெளிவருகின்ற விடயங்களை ஒரு பக்கச்சார்புள்ளதாகவே பலர் கருதுகின்றனர். இதன் பின்விளைவு என்னவெனில் இலங்கையில் வாழ்கின்ற சகல சமூகங்களதும் தேவையை ஊடகங்கள் பிரதிபலிக்கவில்லை.

2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆய்வொன்றின் பிரகாரம், துல்லியமான, சமநிலையான, நேர்மையான தகவல்களை வழங்குவதற்கு இலங்கையிலுள்ள ஊடகங்கள் தவறிவிட்டன என 87 வீதமான ஊடகவியலாளர்கள் நம்புகின்றனர். மேலும் ஏதோ ஒரு இனக்குழுவிற்கு மற்றையதிலும் பார்க்க பக்கச்சார்புடன் ஊடகங்கள் நடந்து கொள்கின்றன என ஐந்து ஊடகவியலாளர்களில் நான்கு பேர் நம்புகின்றனர். (பார்க் மற்றும் தேசப்பிரிய 2005)

ஊடகவியலாளர்கள் என்ற முறையில் எமது பணிகள் மீது நாம் நம்பிக்கை இழந்திருக்கிறோம் என மேற்படி புள்ளிவிபரங்கள் உணர்த்துகின்றன. நாமே எம்மீது நம்பிக்கையில்லாத போது சமூகம் எம்மை நம்பும் என எவ்வாறு எதிர்பார்ப்பது?

இனரீதியாகவும், சமயரீதியாகவும், அரசியல் மயப்படுத்தப்பட்ட சமூகத்திலேயே இலங்கையிலுள்ள ஊடகவியலாளர்கள் வாழ்கின்றனர். ஊடகவியலாளர் என்ற முறையில் ஏதோ ஒரு பக்கத்தை சார்ந்து நிற்க, குறிப்பிட்டவர்களுடன் அதாவது இந்தப்பக்கமோ அல்லது மற்ற பக்கமோ உறவை ஏற்படுத்த நாம் நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறோம்.

ஆனால், ஊடகவியலாளர்கள் என்ற முறையில் நாம் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு பல அடிப்படைக் காரணங்கள் உண்டு. ஊடகவியலாளர்களின் பாரிய அமைப்பு என்ற முறையில் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம் திகழ்கிறது. ஊடகத்துறையைச் சார்ந்த சகலரதும் உரிமைகளை பேணுவதற்காக ஊடகத்துறை ஊழியர்களின் தொழிற்சங்க சம்மேளத்தின் கூட்டிணைத்த தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. ஊடக சுதந்திரத்தை பாதுகாத்துக் கொள்வதற்கும் அதனை மேம்படுத்துவதற்கும் சுதந்திர ஊடக இயக்கம் ஆர்ப்பாட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது. சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்காக தமிழ் மற்றும் முஸ்லிம் ஊடக அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன.

இவ் அமைப்புகள் யாவும் 2005ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்ட ஊடக சாசனத்தின் கீழ் ஒன்றிணைந்து இருப்பது, இலங்கை ஊடகத்துறை வரலாற்றில் ஓர் முக்கிய நிகழ்வாகும்.

தொழில்வாண்மைக் கூட்டொருமைகளுடன் ஊடகவியலாளர்கள் பணியாற்றி, சுதந்திர ஊடகத்திற்கான கலாசாரத்தை கட்டியெழுப்புகின்ற பொழுது, ஊடகத்துறை மறுசீரமைப்புப் பிரசார பணிகளில் முக்கிய வகிபாகத்தை இது வகிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

நாம் அனைவரும் பணியாற்றக்கூடிய விதத்தில், ஊடகத்துறையின் பெறுமானங்களை பேணக் கூடிய சூழ்நிலையை தோற்றுவித்து, சுதந்திர நன்நடத்தை ஊடக கலாசாரங்களை, அதனோடு தொடர்புடைய செயற்பாடுகளை மேம்படுத்தி, பொதுமக்களுக்கு சேவையாற்றக் கூடிய பெறுமானங்களை தன்னகத்தே உடைய ஊடகத்துறையை தோற்றுவிப்பதே நாம் எதிர்கொள்ளும் சவாலாகும்.

நாம் வாழ்கின்ற சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்குத் தகவல்களை வழங்கி, அவர்களை அறிவூட்டி, பொது வாழ்க்கையில் அவர்களையும் ஈடுபடச் செய்கின்றபோது மாத்திரமே ஊடகவியலாளர் என்ற முறையில் நாம் கோருகின்ற சிறப்புரிமைகளும் ஏனைய நன்மைகளும் அர்த்தம் பெறுகின்றன.

பொதுமக்கள் சேவை ஊடகத்துறை கொள்கைகளை பின்பற்றுவது என்பது அரசியலை விட ஊடகத்துறைக் கொள்கைகளை உயர்வாகப் பேணுவதாகும். இக்கொள்கைகளை ஒரே சொல்லில் தெளிவுப்படுத்தலாம். அதாவது உண்மைக்கு மதிப்பளித்தல், அறிந்து கொள்வதற்கான பொது மக்களது உரிமைக்கு மதிப்பளித்தல், மற்றவர்களது கருத்துக்கு மதிப்பளித்தலாகும்.

ஊடகவியலாளர்கள் என்ற முறையில் எம் அனைவருக்கும் தனிப்பட்ட முறையில் தொழில்சார்ந்த பின்வரும் பொறுப்புகள் உள்ளன என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

- சனநாயகம், பல்லினத்தன்மை மற்றும் பொறுமைத் தன்மை ஆகியவற்றிற்கு மதிப்பளித்தல்.
- சிறந்த தராதரத்தைப் பேணுதல் - எம்மால் இயலுமானவரை சிறப்பாக பணியாற்றுதல்
- எல்லா சந்தர்ப்பங்களிலும் சரியாகவும், நீதியாகவும், நேர்மையாகவும் செயற்படல்

உயர் தராதரமுள்ள ஊடகத்துறையை உருவாக்கி அதைப் பேணுதல், எப்போதும் ஒழுக்க நெறிமுறையுடன் செயற்படுதல், தரமான ஊடகத்துறைக்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல், மேலும் எமது பணிகளுக்கும், நாம் உருவாக்குகின்ற ஆக்கங்களுக்கும் பொறுப்புக் கூறுபவர்களாக செயற்படுதல் போன்றவற்றை நாம் மேற்கொள்ள வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நாடு மிக முக்கியமான கட்டத்தையும் திருப்பு முனையையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற இத்தருணத்திலே, சுயாதீனமான ஒழுக்கநெறிகளைக் கொண்ட ஊடகத்துறையை தோற்றுவிப்பது முக்கியமானது. இரண்டு தசாப்தங்களுக்கு மேற்பட்ட சிவில் யுத்தம், 2004, டிசம்பர் 26ஆம் திகதி சுனாமி ஏற்படுத்திய பேரழிவுகள் ஆகியவற்றின் பின்னர் ஊடகங்களின் வகிபாகம் தொடர்பாக இலங்கை மக்கள் கூர்ந்தாராயத் தலைப்பட்டனர். முரண்பாடுகளுக்கு சமாதானத் தீர்வை காண்பதற்கும், பொதுக்கள் தமது வாழ்வை கட்டியெழுப்புவதற்கும் தேவையான தகவல்கள், விழிப்பூட்டல்கள், அறிவூட்டல் செயற்பாடுகள், ஏனைய உதவிகளை வழங்குவதில் ஊடகங்களுக்கு தனித்துவமான பொறுப்புள்ளது என்பதை ஊடகவியலாளர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

நல்லாட்சியுடன் கூடிய, முழுமையான மக்களுக்கு அறிவிக்கப்பட்ட சனநாயக சமூகமொன்றை தோற்றுவிப்பதற்கு நீதியானதும், சமனிலையுடையதும், சுயாதீனமிக்கதுமான ஊடகம் தேவையான அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும். உயர் தராதரமுடைய, ஒழுக்கம் சார்ந்த ஊடகத்துறையை உருவாக்கும் வகையில் தொழில்வாண்மையுடன் ஊடகங்கள் இயங்க வேண்டும். இது அவசியமான ஓர் சமூக சேவையாகும். ஏனெனில் அறிவிக்கப்பட்ட தீர்மானங்களை மக்கள் மேற்கொள்வதற்கான வாய்ப்பை மட்டுமல்ல, அக்கறையுள்ள சமூகப் பாதுகாவலன் என்ற வகிபாகத்தையும் ஊடகங்கள் வகிக்கின்றன.

அரசியல் சக்திகளினால், பயங்கரவாதம், வன்முறைகள் போன்றவற்றினால் பிரிந்து வாழ்கின்ற சமூகத்தில், குறிப்பாக ஊடகவியலாளர்கள் அடிக்கடி தாக்கப்பட்டும், துஷ்பிரயோகத்திற்கும் உள்ளாக்கப்படுகின்றதோடு, கொலையும் செய்யப்படுகின்ற சூழ்நிலையில் ஊடகவியலாளர்கள் மீது கசப்புணர்வை ஏற்படுத்துவது ஒன்றும் கடினமான விடயமல்ல.

ஊடகவியலாளர்கள் என்ற முறையில் இவ்வகையான சவால்களே, சுயாதீனமான, காத்திரமான, சுதந்திரமான ஊடகத்திற்கான தேவையை ஏற்படுத்துகிறது என்பதை நாம் அறிவோம். எனவே, இலங்கையில் தற்போது சுயாதீனமான, துணிவுமிக்க, காத்திரமான ஊடகம் அவசியம் என்பதை நாம் அறிவோம்.

மாற்றம் எம்மிலிருந்தே உதயமாகிறது.

**ஜெக்குலின் பார்க்**

*ஐ.எவ்.ஜே. ஆசிய பசுபிக் பணிப்பாளர் மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் - இம்பெக்ஸ், மீள் நல்லிணக்கத்திற்கான குரல் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடக ஆலோசகர்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இக்கையேட்டினை எவ்வாறு பயன்படுத்துவது?

சமூகத் தேவைகளுக்கு பதிலளிக்கக்கூடிய ஒழுக்கநெறி சார்ந்த உயர் தராதரமுடைய பத்திரிகைத் துறையை ஒரு சட்டத்திற்குட்பட்ட விதத்தில் தோற்றுவிக்கக் கூடியவாறு பத்திரிகையாளர்கள் எவ்வாறு தமது கடமையை நிறைவேற்ற முடியும் என்பதை ஆராய்வதே இக்கையேட்டின் நோக்கமாகும். இலங்கை பத்திரிகையாளர்கள் சமூகத்தில் வகித்த வகிபாகம் தொடர்பில் அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கின்ற அதேவேளை பொதுமக்கள் சேவை பெறுமானங்களிலிருந்து விடுபட்ட பத்திரிகைத் துறை தொடர்பில் விசேட கவனத்தினை செலுத்துவதற்கும் இக்கையேடு முனைகிறது.

இலங்கையில் சமாதானத்தினை கட்டியெழுப்புதல் மற்றும் சமூகத்தை மேம்பாடடையச் செய்தல் ஆகிய செயற்பாடுகளின் ஓர் அம்சமாக மேற்படி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தனிப்பட்ட ஒவ்வொரு பத்திரிகையாளரும் தமது பங்களிப்புகளை நல்குவதற்கான வழிமுறைகளை ஆராய்வதும் இவ் அறிக்கையின் நோக்கமாகும். மிக முக்கியமாக, அறிவிக்கப்பட்ட சனநாயக சமூகத்தின் அக்கறையுள்ள சமூகப் பாதுகாவலன் என்ற முறையில் ஊடகம் தனது வகிபாகத்தினை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பளிக்கிறது. உயர் தொழில்வாண்மைக்காகப் போராடுகின்ற ஊடகவியலாளர்கள் மாற்றத்திற்கான அடிப்படையாக பொதுமக்கள் சேவை ஊடகத்துறை மாதிரியை தமது பிரச்சினைகளுக்கான தீர்வாக பயன்படுத்தலாம் என பிரேரிக்கப்படுகிறது.

பொதுமக்களுக்கு அறிவிக்கக்கூடிய, அவர்களையும் ஈடுபடுத்தக்கூடிய உயர் தராதரமுடைய ஒழுக்கநெறி சார்ந்த ஊடகத்துறையை உருவாக்குவது தொடர்பில் ஊடகவியலாளர்களின் வகிபாகம் பற்றிய விடயங்களையும் இக்கையேடு தெளிவுபடுத்துகிறது. காத்திரமான சனநாயகத்தை தோற்றுவிப்பதற்கு இது ஓர் முக்கிய அம்சமாகும்.

பணிகளை புதிய நடைமுறைசார்ந்த வழிமுறைகளுடன் அமுல்படுத்துவதற்கு தேவையான நடத்தை மாற்றங்களை மேற்கொள்வதற்கு சரிபார்ப்பதற்கான பட்டியல் துணை புரியும். இக்கையேட்டின் பல இடங்களில் இடம்பெற்றிருக்கின்ற சரிபார்ப்பதற்கான பட்டியல் மூலமாக பொதுமக்கள் சேவை ஊடகத்துறையின் பெறுமானங்களை நிறைவேற்றக் கூடிய விதத்தில் உயர் தராதரமுடைய ஒழுக்கநெறி சார்ந்த ஊடகத்துறை முறைகள் இடம்பெற்றிருக்கிறதா என்பதை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன.

இக்கையேடு சமூகத்தவர்களின் முழுமையான ஒத்துழைப்புடன் இலங்கையின் ஊடகவியலை புரட்சிப்படுத்துவதற்கு ஊடகவியலாளர்களின், ஆசிரியர்களின் மற்றும் ஊடக உரிமையாளர்களின் ஒத்துழைப்பை மேம்பாடடையச் செய்யும் உபாய முறைகளில் ஒரு அம்சமாகும்.

# 2. சமூகப் பெறுமானங்களுடன் கூடிய சிறப்பான ஊடகத்துறை

### ஊடகவியலாளரொருவரின் வகிபாகம்

ஊடகவியலாளர்கள் என்ற முறையில் சமூகத்தை அறிவூட்டுவதே எமது வகிபாகமாகும். இச்செயற்பாட்டை மேற்கொள்வதொன்றும் இலகுவான விடயமல்ல, அதேவேளை இப்பணியினை சிறப்பாக மேற்கொள்ள வேண்டுமெனில் இதனோடு தொடர்புடைய முக்கிய தொழில்வாண்மைப் பெறுமானங்களை நாம் பின்பற்ற வேண்டுமென நம்மில் பலர் நம்புகின்றனர்.

இப்பெறுமானங்களாவன : தகவலை முதலில் பெற்றுக்கொள்ளல், தகவல்களை சரியாகப் பெற்றுக்கொள்ளல், உண்மையை நேர்மையுடன் தெரிவித்தல், சுயாதீனமாகவும் நடுநிலையாகவும் திகழ்தல், குறிப்பிட்ட சம்பவத்தின் சகல பக்கங்களையும் கண்டறிதல் (நேர்மையானதும் சமனிலையானதுமான செய்திகளின் நிமித்தம்), எமது சம்பவங்களுடன் தொடர்புடைய விடயங்களை திரட்டுவதற்கு நேர்மையான வழிமுறைகளை பின்பற்றுதல், பிழைகளை திருத்துதல், வதந்திகளை வெளியிடாமை ஆகக் குறைந்தது இரண்டு மூலங்களிலிருந்தாவது தகவல்களை உறுதி செய்தல், ரகசியமாக வழங்கப்பட்ட தகவல்களை மதித்தல் போன்றன.

சிறந்த ஊடகவியலுக்கான முக்கிய பெறுமானங்களாக பின்வருவனவும் உள்ளடங்கும் : முரண்நலனை வெளியிடல், வீணான பிரச்சினைகளை தோற்றுவிக்கக் கூடிய விடயங்களைத் தவிர்த்தல், தனிப்பட்ட ரகசியத்தையும் துன்பத்தையும் மதித்தல், அறிக்கையிடலின் பொழுது வியாபார ரீதியான செல்வாக்குகளை அனுமதிக்காது இருத்தல், இலஞ்சம் அல்லது பரிசுகளை பெறாமலிருத்தல் போன்றன.

நாம் எமது பணிகளின் நிமித்தம் செல்கின்ற பொழுது உண்மையில் இம் முக்கிய பிரச்சினைகள் எதனை அர்த்தப்படுத்துகின்றன. பத்திரிகைத்துறை (ஊடகத்துறை) தொடர்பான இரண்டு கூற்றுகள் இங்கே தரப்பட்டுள்ளன.

- பிரச்சினைகள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் அறிக்கையிட வேண்டும். அவற்றைத் தீர்ப்பதற்கு முயற்சிக்கக் கூடாது. அதனை தீர்ப்பதற்கு வேறு நபர்கள் இருக்கின்றனர்.
- பிரச்சினைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதற்கு மேலதிகமாக அவற்றைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடும் பொறுப்பும் ஊடகவியலாளர்களுக்கு உண்டு.

மேற்படி இரண்டு கூற்றுகளும் ஒன்றுடன் ஒன்று முரண்பட்டதாக காணப்படுகிறது ஆனால் இவை இரண்டில் எது உண்மையானது? இவை இரண்டும் சரியானவையாக திகழ்வதற்குரிய சில சந்தர்ப்பங்கள் உண்டா? ஊடகங்களிடமிருந்து மக்கள் எதனை எதிர்பார்க்கின்றனர்? ஊடகங்கள் சமூகப் பிரச்சினைகளை அறிக்கையிடுவதற்கு மேலதிகமாக ஒரு படிசென்று அவற்றை தீர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்ற பொழுது, ஊடகத்தின் வகிபாகம் தொடர்பாக அதிக பாராட்டுதலை மக்கள் தெரிவிப்பார்களா?

### பிரஜைகளுக்குத் தேவையான சரியான முடிவுகளை எடுப்பதற்கு உதவும் தகவல்கள்

சனநாயகத்தின் தூண் என்ற முறையில் ஊடகங்கள் முக்கிய பாத்திரத்தை சமூகத்தில் வகிப்பதனால், மக்களை அறிவூட்டுவதற்கும் அவர்களுக்கு அறிவிப்பதற்குமான பாரிய பொறுப்புகள் ஊடகவியலாளர்களுக்குண்டு. நான்கு சமூகங்களைச் சார்ந்த மக்களது பிரச்சினைகளை அறிக்கையிடுவதற்கு மேலதிகமாக வேறு ஏதாவதை ஆக்கபூர்வமாக செய்வதற்கான முயற்சிகளிலும் அவர்கள் ஈடுபட வேண்டும்.

### எமது ஊடகங்கங்களிலிருந்து எமது சமூகத்திற்கு தேவையானது என்ன?

முரண்பாடுகளின் பொழுது அல்லது பேரழிவின் பொழுது எமது சமூகத்திற்கு ஊடகங்களிலிருந்து என்ன தேவை? தாம் சோகத்தில் ஆழ்ந்திருக்கின்ற பொழுது அல்லது தேர்தல் பிரசார காலப்பகுதியினுள் ஊடகங்களிடமிருந்து எதனை எமது மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

நேர்மையான தீர்மானங்களை மேற்கொள்ளும் நிமித்தம் சமூகத்திற்கு தகவல்கள் அவசியம்.

அவர்களுக்கு முக்கியமான பிரச்சனைகள் ஊடகங்கள் மூலமாக வெளிப்படுத்தப்படல் வேண்டும். மேலும் ஊடகங்கள் மூலமாக அவர்களது குரல் ஒலிக்கப்படல் வேண்டும். எமது சமூகத்திற்கு மதிப்பு, பொறுமை, புரிந்துணர்வு போன்றன அவசியப்படுகின்றன. மேலும் தமது பிரச்சினைகளுக்கு தீர்வும் அவசியப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*மறக்கப்பட்ட அகதிகள் : பொதுமக்கள் சேவை ஊடகவியல் பிரஜைகளின் முக்கிய விடயங்களை வெளிக்கொணர்வதுடன் பிரஜைகளின் தேவைகளுக்கும் முக்கியத்துவமளிக்கின்றது. பொதுமக்கள் சேவை துறையிலுள்ள ஊடகவியலாளரொருவருக்கு கல்வி, சுகாதாரம், சமூக சேவை போன்று சமூக செயற்பாடுகளும் சிறந்ததொரு சந்தர்ப்பமாகும்.*

உதாரணமாக சுனாமியின் பின்பு ஊடகங்களிடமிருந்து மக்கள் எதனை எதிர்பார்த்தனர்? என்ன நடைபெற்றது என்பதை அறிய முற்பட்டனர் - "பிரச்சினை",- அதேவேளை இதற்கு என்ன செய்யலாம் என்பதையும் அறிவதற்கு ஆவலாக இருந்தனர். - 'தீர்வு'

பத்திரிகை வாசகர்கள் ஊடகங்களிடமிருந்து பின்வரும் விடயங்களை எதிர்பார்ப்பதாக நோர்த் வெஸ்டன் (North Western) பல்கலைக்கழகத்தின் வாசகர் நிறுவனம் நடத்திய ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது.

- நாட்டு மக்களது நலனை மையமாகக் கொண்டு இடம்பெறுகின்ற செய்திகளை வாசிக்கும் பொழுது நானும் ஓர் உறுப்பினர் என்ற உணர்வை மேம்படுத்துகின்றது.
- நான் திறமையானவராக இருப்பது போல் உணரச்செய்யும் செய்திகள்.
- எனது ஏதாவது விடயத்தை கதைப்பதற்கு வாய்ப்பளிக்கின்ற செய்திகளை படிக்கின்றபொழுது, எனது சமூக சேவைப்பணியில் முக்கிய இடத்தை நான் வகிப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

## பொதுமக்கள் சேவை ஊடகவியல்

எமது செய்திகள் பார்வையாளர்கள் அல்லது வாசகர்கள் மத்தியில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தவல்லன. நாம் பாரிய சக்தியினை பயன்படுத்துகின்றோம். எதனை தெரிவிப்பது, எதனை தெரிவிக்காமல் விட்டு விடுவது? மேலும் யாரைப் பேட்டி காண்பது, ஒரு சம்பவத்தை எந்த இடத்தில் குறிப்பிடுவது, சம்பவம் தோற்றுவிக்கும் கருத்துருவம், தலைப்பு. போன்றவற்றையும் தீர்மானிக்கின்றோம். நாம் நடுநிலையுடனும், அகவயத்தன்மையற்றவர்களாகத் திகழ்வதுடன் செய்தியை நெறிப்படுத்துகிறோம்.

இவ்விதமான சக்திகள் எமக்கு கிடைக்கின்ற அதேவேளை, ஊடகவியலின் முக்கிய பெறுமானங்கள் பின்பற்றப்படுகின்றன என்பதிலும் நாம் அவதானமாக இருக்க வேண்டும்.

இதனை அடைவதற்கான சட்டமொன்று 1920ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவில் விருத்தி செய்யப்பட்டது. இது 1980ஆம் ஆண்டு முதல் பல துரித மாற்றங்களுக்கு உள்ளானது இது பொதுமக்கள் சேவை ஊடகவியல் என அழைக்கப்பட்டது. இதனை 'பிரஜைகள் ஊடகவியல்', 'சமுதாய ஊடகத்துறை' எனவும் அழைத்தனர். இக்கட்டமைப்புடன் துணைபுரிகின்ற பெறுமானங்கள் "ஊடகங்களில் பொதுமக்கள் சேவை பெறுமானங்கள்" என அழைக்கப்படுகின்றன.

"பொதுமக்கள் சேவை ஊடகவியல்" தொடர்பான இச்சட்டத்திற்கு பல வரைவிலக்கணங்கள் உண்டு.

*'மக்களது அதிகாரமற்றநிலை. ஓரங்கட்டப்படுதல் போன்ற பிரச்சினைகளில் இருந்து மீளுவதற்கு துணைபுரியும் ஊடகத்துறை' (ட்ரோன் மற்றும் ஸோபெர் 2001)*

*'சமூகச் செழிப்பினை பிரதிபலிக்கின்ற ஊடகத்துறை மற்றும் வர்த்தகம் பக்கச்சார்பற்ற நிலை, அரசாங்கத்தின் நலனை மாத்திரம் கருத்திற்கொள்ளாமல் அனைத்து சமூகங்களுக்கும் சுயாதீனமாக சேவையாற்றி, சமூகத்தின் சகல தரப்பினரதும் குரல் ஒலிப்பதற்கு வாய்ப்பளிக்கும் ஊடகவியல்' (ஊடக சாசனம் 2005, பின்னிணைப்பு1 பார்க்க)*

*"சமூகத்தின் பல்லினத்தன்மை, வேற்றுமைகள், மனித உரிமைகளுக்கான சர்வதேச மேன்மை ஆகிய கொள்கைகளை மதிக்கின்ற அதேவேளை நீதியானதும், சமனிலையானதும், சுதந்திரமிக்கதுமான வாய்ப்புகளை பிரசைகளுக்கு வழங்குகின்ற ஊடகவியல்" (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், பொதுமக்கள் சேவை பெறுமானங்கள் துண்டுப்பிரசுரம்)*

இன்னொருவிதமாகச் சொன்னால் சமூகத்தின் பல்லினத்தன்மை, வேற்றுமைகள், மனித உரிமைகளுக்கான சர்வதேச மதிப்பு ஆகிய கொள்கைகளை மதிக்கின்ற, நீதியானதும், சமனிலையானதும், சுதந்திரமிக்கதுமான வாய்ப்புகளை பிரஜைகளுக்கு வழங்குகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகத்துறையிலேயே பொறுமையான, சமாதானமான, நீதியான சமூகம் தங்கியுள்ளது என்பதை பொதுமக்கள் சேவை ஊடகவியல் ஏற்றுக்கொள்கிறது.

சகல மக்களுக்கும் உயர் தராதரமுடைய சமனிலையான, பல்வேறு தன்மைமிக்க பூரணமான ஊடகத்தை வழங்குவதே பொதுமக்கள் சேவை ஊடகவியலின் இறுதி இலக்காகும். சமூக அக்கறையுள்ள இவ்வகையான ஊடகவியல் இலங்கை போன்ற நாடுகளில் ஆற்ற வேண்டிய பாரிய பிரதான பணிகள் உள்ளன. அவையாவன :

- கல்வி, கலாசார வாய்ப்புகளை மேம்படுத்துதல்
- அறிவை விருத்தி செய்வதுடன், தேசிய கலாசாரம், தனித்துவம் போன்றவற்றை மேம்பாடடையச் செய்தல்
- பிரஜைகளுக்கு மத்தியில் புரிந்துணர்வை மேம்படுத்தி பாதுகாத்தல்.

அதாவது, ஊடகமானது சமூகங்களுக்கு மத்தியில் நல் உறவையும், நம்பிக்கையையும் விருத்திசெய்து மேம்படுத்துவதன் மூலம் தனது கடப்பாடுகளை நிறைவேற்ற முடியும். சமூகத்தின் நம்பிக்கையை வென்று தனது பொறுப்பினை நிறைவேற்றுவதன் நிமித்தம் ஊடகமானது திறமையுடனும், ஒழுக்கநெறியுடனும், சுயாதீனமாகவும், அர்ப்பணிப்புடனும் செயற்படுவதை வெளிப்படுத்த வேண்டும். பொதுமக்களது நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளாமல் ஊடகமானது தனது சிறப்பான வகிபாகத்தை சனநாயகத்தில் வகிக்க முடியாது.

## முக்கிய பெறுமானங்கள்

பின்வரும் முக்கிய பெறுமானங்களைக் கருத்திற்கொண்டு பல்வேறு நோக்கங்களை அடைவதை மையமாகக் கொண்டு பொதுமக்கள் சேவை ஊடகத்துறை செயற்படுகிறது :

- சனநாயகம், பல்லினத்தன்மை, பொறுமை ஆகியவற்றை மேம்படுத்தல்
- சிறந்த தரத்திற்காக பாடுபடுதல்
- மிகச்சரியாக, சமனிலையாக, நேர்மையாக மேற்கொள்ளல்
- பிரச்சினைகளுக்கு தீர்வை எதிர்பார்த்தல்
- பல்வேறு கருத்துக்களையும் அங்கீகரித்தல்
- சமூகம் தன்னை நன்றாக புரிந்துகொள்வதற்கு துணைபுரிதல்
- பொதுமக்கள் நலன்சார்ந்த விடயங்களை ஆராய்தல்

### ஊடகவியலாளர்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணல்

சமூக ஊடகவியல் இலகுவான விளக்கங்களை நிராகரிக்கின்றது. அதன் பிரதான உதவியாளர்கள் தெரிவிப்பதாவது அது தாம் முகம் கொடுக்கும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு தேடுகையில் மேலும் செயற்பாடாக அமைவதற்கும் தமது வாழ்க்கை மற்றும் சமூகத்தவரை நிர்வகிக்கும் நிறுவனங்களை செயற்படுத்துவதற்கும் தயாரான பிரஜைகளாக்குவதற்கு பொதுமக்களை நிலைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியை தொடர்ந்து கொண்டு செல்லும் ஆய்வின் ஒரு அங்கமாகும்.

இவ் இலக்கை வெற்றிகரமாக அடைவதற்கு, சமூகமாற்றத்திற்கான இலகுபடுத்துனர்கள் என்ற முறையில் பொதுமக்கள் நலன்சார்ந்த ஊடகவியலாளர்கள் மிகவும் காத்திரமான நிலையை வகிப்பதற்கு உற்சாகப்படுத்தப்படுகிறார்கள்.

ஊடகவியலாளர்கள் தொடர்பில் காணப்படுகின்ற பாரம்பரிய ரீதியான வரைவிலக்கணங்களுக்கு அப்பால் இச்செயற்பாடுகள் அமைகின்றன. பாரம்பரிய ரீதியாக ஒரு செய்தியாளர் பெரும்பாலும் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவே கருதப்பட்டார். அதாவது, தகவல்களை இவர் வழங்குவார், அத்தகவல்களைக் கொண்டு என்ன செய்யலாம், என்ன தீர்மானங்களை மேற்கொள்ளலாம் போன்ற விடயங்களை மக்களிடம் விட்டுவிடுவார்.

பொதுமக்கள் சேவை ஊடகவியல், ஆதரவாளர்களின் கருத்துப்படி பொதுமக்கள் சேவை ஊடகவியலாளர்கள் தம்மை செயற்பாட்டாளர்களாகவே கருதவேண்டும். இவர்கள் குறிப்பிட்ட கருத்தையோ அல்லது அபிப்பிராயத்தையோ பரிந்துரைப்பவர்களாக திகழக்கூடாது. ஆனால், மக்கள் எதிர்கொள்கின்ற பொதுவான பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு அவசியம் என்ற முறையில் அவற்றை வினைத்திறனுடன் அடையக்கூடிய விதத்திலான கலந்தாராய்வுகளை ஏற்படுத்தி தீர்வைக் காணக்கூடிய விதத்தில் மக்களை வலுப்படுத்த வேண்டும்.

- பொதுமக்களுக்கு முக்கியமான விடயங்களை மேம்படுத்துதல்
- பிரஜைகளது (மக்களது) தேவைகளுக்கு பதிலளித்தல்
- வாசகர்கள் / பார்வையாளர்கள்/ நேயர்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டி யெழுப்புதல்

சனநாயகத்தைப் பேணுகின்ற, பல்லினத்தன்மையை அங்கீகரிக்கின்ற, பொறுமையையும் புரிந்துணர்வையும் மேம்படுத்துகின்ற சமூகத்தில் பொதுமக்கள் சேவை ஊடகவியலின் இடம் அங்கீகரிக்கப்படுகிறது. பல தசாப்தங்களாக நடைபெறும் சிவில் யுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அடிக்கடி ஏற்பட்ட முறிவுகள், மீண்டும் நாடு முரண்பாடு என்ற இருளில் மூழ்கியுள்ள இன்றையச் சூழ்நிலையில் இலங்கை போன்ற ஒரு நாட்டிற்கு இது அவசியமானதாகும்.

செம்மையான, சமனிலையுடைய, நேர்மையான உயர்தராதரமுடைய ஊடகவியலை உருவாக்குவதற்கான முயற்சிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். இதனை அடைவதற்கு பத்திரிகையாளர்களும், ஊடகவியலாளர்களும் தமது படைப்புகளின் உயர் தராதரத்தின் நிமித்தம் பாரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரையில் செய்தி சேகரித்தல், அறிக்கையிடல் உள்ளடங்களாக எல்லா சந்தர்ப்பங்களிலும் நெறிமுறை சார்ந்த அணுகுமுறையை பின்பற்ற வேண்டும்.

(சமூக அக்கறையுள்ள பத்திரிகைத்துறை, நெறிமுறை - 6 பார்க்க) ஏனைய ஊடகங்களைப் பொறுத்த வரையில் எவ்வாறு தகவல்களைப் பெறுகின்றது அவற்றைக் கொண்டு செய்திகளைத் தயாரித்து எவ்வாறு மீளாய்வு செய்கிறது போன்ற விடயங்கள் தங்கியுள்ளன.

(பின்னிணைப்பு 1இல் சுயாதீன பத்திரிகையான 'ராவய' பற்றிய உதாரணக் குறிப்பை பார்வையிடவும். ஊடகத்துறையின் அன்றாட நடைமுறையில் மாற்றமேற்படுத்துவதில் ராவயவின் அர்ப்பணிப்பு போன்ற விடயங்களையும் பார்வையிடவும்) பத்திரிகைத்துறையின் தராதரத்தை மேம்படுத்துவதற்கு துணைபுரியும் விதத்தில், பத்திரிகை ஆசிரியர், பணியாட்கள் உள்ளடங்கலாக அனைவருக்கும் பயிற்சிகள் அவசியம்.

## பல குரல் பத்திரிகைத்துறை

பல்லினத்தன்மையை அங்கீகரிக்கின்ற அதேவேளை பொதுமக்கள் சேவை பத்திரிகைத்துறையானது (ஊடகவியல்) சமூகத்தில் உள்ள பல்வேறுபட்டவர்களது குரலையும் உள்ளடக்க எதிர்பார்க்கின்றது. (இலங்கையில் ஊடகங்கள் எவ்வாறு செயலாற்றுகின்றன - பார்க்க 4) பல்வேறு விதமான சம்பவங்களின் பொழுது அவற்றிற்கான மூலம் தொடர்பான விடயங்கள் மிகக் குறைவாகவே பயன்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை ஊடக மேற்பார்வை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் பல்வேறு விதமான சம்பவங்களின் பொழுது ஒரு மூலம் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு மூலத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் பிழையானது என்பது மாத்திரமல்ல (தற்செயலாகவோ அல்லது திட்டமிட்டோ) ஊடகவியலாளர்கள் தாம் பெற்றுக்கொண்ட தகவல்களின் நம்பகத்தன்மையை அவற்றை வெளியிடுவதற்கு முன்னர் உறுதிசெய்து கொள்வதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. செய்திகளின் உண்மைத் தன்மையையும், சமனிலையையும் பேணுவதற்காக ஆகக் குறைந்தது இரண்டு மூலங்களாவது குறிப்பிடப்படல் வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

ஒரு சம்பவத்தின் அல்லது செய்தியின் பல்வேறு பக்கங்களைத் தெரிவிப்பது பொதுமக்கள் சேவை ஊடகவியலின் சிறப்பம்சமாகும். "சமூகமானது பல்வேறு விதமான கருத்துக்களையும், கண்ணோட்டங்களையும் கொண்ட பல குரல்களினால் கட்டிபெழுப்பப்பட்டுள்ளது. சிறந்த ஊடகத்துறையானது குறிப்பிட்ட ஒரு கருத்தை மாத்திரமல்லாது முழு செய்தியையும் பிரதிபலிக்க முன்வர வேண்டும்." ஒரு செய்தியில் பல குரல்களை ஒலிக்கச் செய்வதன் மூலமும் பல்வேறு விதமான கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் உள்ளடக்குவதன் மூலமும், பொதுமக்களையும் இவற்றில் வினைத்திறனுடன் ஈடுபடச் செய்வதன் மூலமும் உயர் தராதரமுடைய சிறப்பான செய்திகளை பத்திரிகையாளர்களினால் எழுதமுடியும். (பொதுமக்களை ஈடுபடுத்தல் பிரிவு 8. 9 பார்க்க), (பயிற்சிகள்)

ஒரு செய்தியில் பல குரல்களை பிரயோகிப்பதன் மூலம் மேலதிகமாக பல நன்மைகள் உண்டு. அறிக்கையிடலில் பல்லினத்தன்மையை மேம்படுத்துவதற்கு மேலதிகமாக சமூகத்தின் மாறுபட்ட குணாம்சங்களையும் பிரதிபலிப்பதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. மேலும் பொதுமக்களது தேவைகளுக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலளிக்கக்கூடிய, வாசகர்களுக்கு மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்பக்கூடிய மற்றும் சமூகத்திற்கு முக்கியமான விடயங்களை கண்டறிந்து, ஆராய்ந்து மேம்படுத்தக்கூடிய பொதுமக்கள் சேவை ஊடகவியலை பல குரல்கள் ஒலிக்கச் செய்வதன் மூலம் சிறப்பாக மாற்றியமைக்க முடியும்.

சமூகம் தன்னை சிறப்பாக உணர்ந்து கொள்வதற்குத் தேவையான உதவிகளை நல்குவதை நோக்கமாகக் கொண்டு பொதுமக்கள் சேவை ஊடகவியல் செயற்படுகிறது. சமூகத்தை அமைதியாக செவிமடுத்து அவர்கள் விரும்புகின்ற விடயத்தை இது அறிக்கையிடுகிறது மேலும் ஊடகத்துறை (பத்திரிகைத்துறை) செயற்பாட்டில் பொதுமக்களையும் ஈடுபடுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. இறுதியாக சமூக ஈடுபாட்டுடன், உயர்தராதரமுடைய நெறிமுறைகளை ஊடகவியலாளர்கள் பேணுவார்கள் எனில் அது நம்பிக்கையையும், புரிந்துணர்வையும் கட்டியெழுப்புவதற்குத் துணைபுரியும்.

உதாரணமாக இலங்கையை தாக்கிய சுனாமித் தொடர்பாக, பொதுமக்கள் சேவை ஊடகவியலைச் சார்ந்த நிருபர் ஒருவர் அறிக்கையிடுகின்ற பொழுது இவர் அரசியல்வாதிகளது கருத்தை மாத்திரமல்லாது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள், உள்ளூர் சமூகம், உதவித் தொழிலாளர்கள், அவசரகாலப் பணியாட்கள் போன்ற சகலரது கருத்துக்களையும் உள்ளடக்குவார். சுனாமியால் எந்த மக்களது வாழ்க்கை பாதிக்கப்பட்டதோ, அம்மக்கள் பற்றிய பிரச்சினைகளையும், அவற்றிற்கான தீர்வுகளையும் கருத்திற்கொண்டே இவ்வகையான நிருபர்கள் செயற்படுவார்கள்.



*என் குரலை கேளுங்கள் : எமது ஊடகவியலில் அனைத்து குரல்களும் கேட்கப்படுதலும் பிரதிநிதித்துவப்படுத்தலும் முக்கியமானதாகும். பெண்கள், பிள்ளைகளின், வயது வந்தோர்களின் அடிப்படையினாலாகும். ஊடகவியலாளர்கள் பல மூலங்களை தேடிக் கொள்ளல் வேண்டும். அனைவரும் ஆண்களாக இருத்தலாகாது.*

## பொதுமக்கள் சேவை அல்லது குடிமக்கள் சேவை ஊடகவியலின் பண்புகள்

பொதுமக்கள் சேவை ஊடகவியலை, சில நேரங்களில் குடிமக்கள் சேவை ஊடகவியல் எனவும் அழைக்கலாம் என்பதை நீங்கள் ஏற்கனவே அறிவீர்கள். குடிமக்கள் ஊடகவியல் நிலையத்தின் (The pew center for Civil Journalism) நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜேன் ஸ்காபர் (Jan Schafler) குடிமக்கள் ஊடகவியலின் பண்புகளை பின்வருமாறு பட்டியலிட்டுள்ளார்.

- 'செய்திகள்' என்ற விடயத்தை ஒட்டிய வரைவிலக்கணத்தை விரிவாக்கும் முயற்சியின் பொழுது ..... இங்கு கருத்தொருண்மை மட்டுமல்ல முரண்பாடுகளும் தெரிவிக்கப்பட வேண்டும். மேலும் வெற்றிகரமான சம்பவங்களும், அதேவேளை தோல்விகளும் தெரிவிக்கப்படல் வேண்டும்.
- மக்களுக்கு மிகப் பொருத்தமான முறையிலேயே செய்திகள் தொகுக்கப்படல் வேண்டும்.
- அலங்கோலமான காட்சியொன்றின் வெறும் பார்வையாளர்கள் போல் பொதுமக்களை நடத்தாமல் அவர்களையும் சுய ஆட்சிச் சமூகத்தின் உறுப்பினர்கள் என்ற முறையில் நடத்தவேண்டும்.
- தமது சமூகம் சார்ந்த விடயங்களை மக்கள் ஏற்றுக்கொண்டு அவற்றில் ஈடுபடுவதற்கான வாய்ப்பினை வழங்க முயற்சிக்க வேண்டும்.

(நெல்சன், 2000)

## ஊடகவியலாளர்களுக்கான சரிபார்த்தல் படிவம்

நீங்கள் ஒரு செய்தியை எழுதுகின்ற பொழுது அதன் சமனிலை, துல்லியம், நேர்மை, சுயாதீனம், மதிப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பின்வரும் கேள்விகளுக்கு விடையளிக்கவும்.

1. பல்வேறுபட்ட இனக்குழுக்களை இப்பிரச்சினை எவ்வாறு தாக்கியது என்பதை குறிப்பிட்டீர்களா?
2. இவ்விடயத்தின் சகல பக்கங்களையும் தெரிவிப்பதற்கு பல்வேறு வகையான மூலங்களை பயன்படுத்தினீர்களா?
3. ஆகக்குறைந்தது இரண்டு மூலங்களையாவது பெயரிட்டீர்களா?
4. பலமுறை பயன்படுத்திய நபர்களை (குரல்களை) மீண்டும் மீண்டும் பயன்படுத்தாமல், புதியவர்களை கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டீர்களா?
5. மாறா உருப்படிநிலை அல்லது அடையாளக் குறியீடு போன்றவற்றை தவிர்த்துள்ளீர்களா?
6. ஆண், பெண் இருபாலருக்குமான சமனிலை பேணப்பட்டதா?
7. பிரச்சினைக்கு தீர்வை எதிர்பார்த்தீர்களா?
8. வாசகர்கள் மேலதிக தகவல்களை எங்கே பெற்றுக் கொள்ளலாம் போன்ற விபரங்களை குறிப்பிட்டீர்களா?
9. பிரச்சினையின் பின்புலம் ஆழமைவு போன்றவற்றை தெளிவுபடுத்தினீர்களா?
10. சாதாரண மக்களது குரலை உள்ளடக்கினீர்களா?
11. உங்களது சொந்த கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் எழுதுவதை தவிர்த்துக் கொண்டீர்களா?
12. உங்களது பணியின் பொழுது ஒழுக்கநெறிக்கோவையை பின்பற்றினீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. இலங்கையில் பொதுமக்கள் சேவை ஊடகத்துறை - ஓர் அவசியமான சமூகச் சேவை

நாட்டிலுள்ள ஊடகத்தில் தமது தேவைகள் தொடர்பான விடயத்தில் மாற்றமேற்படுத்தப்படல் வேண்டுமென இலங்கையைச் சேர்ந்த பல ஊடகவியலாளர்கள் நம்புகின்றனர். இலங்கையைப் போன்ற பல்லின சமூகங்கள் வாழ்கின்ற நாடொன்றில், அன்றாட பிரச்சினைகள் தொடர்பான சிறு அறிக்கையிடல் கூட எந்த அளவிற்கு பதற்றத்தை அதிகரிக்கலாம் அல்லது தணிக்கலாம் என்பதை ஊடகவியலாளர்கள் உணரவேண்டும். வன்முறை சார்ந்த முரண்பாடுகள், அரசியல் கிளர்ச்சிகள் போன்றவை பதற்றத்தை அதிகரிக்கச் செய்கின்றன. இவை பரஸ்பர புரிந்துணர்விற்குத் தடையாக அமைகின்றன.

முரண்பாடுகள், பேரழிவுகள், தலைவர்களை தெரிவு செய்வதற்காக தேர்தல்கள் நடைபெறுகின்ற காலப்பகுதிகள் போன்றவற்றின் பொழுது எமது மக்களுக்கு துல்லியமான, உண்மையான, நேர்மையான, சுயாதீனமான, பக்கச்சார்பற்ற தகவல்கள் அவசியப்படுகின்றன. ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில் ஊடகங்கள் இனத்துவத்தின் அடிப்படையில் பிரிந்து செயற்படுகின்றன என்பது உண்மை.

அதாவது, எமது ஊடகங்கள் சமூகத்தின் குறிப்பிட்ட ஒரு சாராருடைய விடயங்களுக்கு மாத்திரமே முன்னுரிமை அளிக்கின்றன. பொதுமக்கள் சேவை ஊடகவியலுக்குத் தேவையான பல அம்சங்கள் இங்கு குறைவாகவே காணப்படுகின்றன. தகவல்கள் தேவையான பல சந்தர்ப்பங்களில் பக்கச்சார்புடனேயே வழங்கப்படுகின்றன.

பிரச்சினைகள் அல்லது விடயங்கள் தொடர்பாக அறிக்கையிடுவதும், உண்மையை வெளிப்படுத்துவதும் ஒரு தரப்பினருடைய கலாசாரம், சமயம், இனம் போன்ற விடயங்களை அவற்றின் வேற்றுமைகளை மற்றவர்கள் அறிந்துகொள்வதற்கு துணை புரிவது ஊடகவியலாளர்களின் முக்கிய வகிபாகமாகும். இவ்வகையான பிரச்சினைகளை ஊடகவியலாளர்கள் மறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ கூடாது. ஆனால், இவற்றின் சிக்கல் தன்மையைப் புரிந்துகொண்டு செயற்படவேண்டும். குறிப்பிட்ட சம்பவத்தை (செய்தியை) வெறுமனே மேலோட்டமாக மாத்திரம் அணுகாமல் அதன் ஆழ அகலத்தை ஆராயவேண்டும். அதாவது, புதிய மூலங்களை கண்டறிந்து, புதிய விடயங்களைத் தேடி, தமது வாசகர்களுக்கு புதிய வாய்ப்பினை வழங்கவேண்டும். இவ்வகையான செயற்பாடுகள் சிறப்பான சமனிலையான அறிக்கையிடலை மாத்திரமல்ல சிறந்த தராதரமுள்ள ஊடகவியலை தோற்றுவிப்பதற்கும் வழிவகுக்கின்றன.

முரண்பாடுகள் மற்றும் இனவேற்றுமைகள் தொடர்பாக அறிக்கையிடல் பற்றிய (சமாதானத்திற்கான வழி) நூலில் IFJ இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. தனிப்பட்ட ஒவ்வொரு ஊடகவியலாளரும் மாற்றத்தின் நிமித்தம் பங்குபற்றுவது இலங்கை ஊடகத்துறைக்கு அவசியமான வகிபாகமாகும்.

எமது கடமையை செய்வதே மிக முக்கியமானதாகும். இதனை தொழில்வாண்மையுடன், துல்லியமான, நெறிமுறை சார்ந்து மேற்கொள்ள வேண்டும். அடிப்படை உரிமைகளை நாம் பெறவேண்டும். இரண்டாவதாக எமது பொறுப்புகளையும், உரிமைகளையும் நிறைவேற்ற வேண்டும். முரண்பாடுகளின் பொழுது சுதந்திரமான சமூகமொன்றை பேணுவது சிரமமானதாகும். நாம் சேவையாற்றுகின்ற சமூகத்தின் சார்பாகவே இவ் உரிமைகளைப் பயன்படுத்துகின்றோம், எனவே நீதியாகவும், நேர்மையாகவும், சரியாகவும் அறிக்கையிடுகின்ற பாரிய பொறுப்பு எமக்குள்ளது. ஊடகவியலாளர்களுக்கு மத்தியில் கூட்டொருமையையும், உதவி செய்யும் மனப்பாங்கையும் ஏற்படுத்துவது எமது மூன்றாவது பணியாகும். கூட்டொருமை என்பதன் அர்த்தம் அரசியல் ரீதியாக ஒரே விதமான கருத்தை நாம் அனைவரும் கொண்டிருக்க வேண்டுமென்பதல்ல. அதேவேளை, அந்த ஊடகவியலாளர்கள் வேறு நாட்டைச் சேர்ந்தவர் அல்லது வேறு குழுவைச் சேர்ந்தவர் அல்லது வேறு நிறுவனத்தைச் சேர்ந்தவர். ஆகவே, அவருடன் நாம் போட்டிபோட முடியாது என்பதும் இதன் அர்த்தமல்ல. கூட்டொருமை என்பது எமது தொழிலின் அடிப்படையில் புரிந்துணர்வின் அடிப்படையில் அமைந்துள்ளது. நல்லெண்ணத்தின் பால் அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடியது. சில விடயங்களில் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பதை அங்கீகரிக்கின்றது. பேச்சுச் சுதந்திரத்தில் ஒரு விடயத்தை மறுப்பதற்கான உரிமையும் உள்ளடங்குகிறது.

தமது கடமையைச் சிறப்பாகவும், பாதுகாப்பாகவும் மேற்கொள்வதற்கு ஊடகவியலாளர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவிசெய்ய வேண்டும். அதேவேளையில் ஒழுக்க நெறிக்கோவையை பின்பற்றுவதற்கும், பேணுவதற்கும் உடன்பட வேண்டும். ஒழுக்கநெறிக் கோவையை பின்பற்றுகின்ற தொழில்வாண்மை மிக்க ஊடகவியலாளர் கள் பிரிவினைப் போராட்டங்களின் பொழுது கூட சண்டையிடுபவர்கள் அல்ல. (பார்க் மற்றும் தேசப்பிரிய 2005)

## இனத்துவ சரிபார்த்தல் பட்டியல்

- ஒரு நபரது இனம், சாதி, சமயம் போன்றவற்றை குறிப்பிடுவதை தவிர்க்கவும்.
- ஒரு நபரது சாதி, சமயம், இனம் போன்றவற்றை குறிப்பிடுவதற்கான தேவை ஏற்படின் குறிப்பிட்ட நபருடன் தொடர்பு கொண்டு சரியான முறையில் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- ஏனைய செய்தி மூலங்கள் இனத்துவத்தை தேவையற்ற விதத்தில் ஒரு காரணி என குறிப்பிடுகின்ற பொழுது இனத்துவம் ஓர் தேவையற்ற விடயம் என்பதை குறிப்பிடுவதுடன் அதன் உண்மையான தாக்கம் பற்றிய விடயங்களில் வாசகர்களை அறிவூட்டவும்.
- உங்களிடம் காணப்படும் பக்கச்சார்புகளை உணர்ந்து கொள்வது முக்கியமானதாகும். செய்திகளை தயாரிக்கின்ற பொழுது அல்லது தெரிவுசெய்கின்ற பொழுது இதனைக் கருத்திற் கொண்டு செயற்படுவது முக்கியமானதாகும்.
- படங்களைப் பாவிப்பதன் மூலம் தாக்கமேற்படுத்தக்கூடிய விளக்கங்களை தவிர்க்கலாம்.
- தனது சாதி, சமயம், இனத்துவம் போன்ற விடயங்கள் எவ்வாறு தெளிவுபடுத்தப்படல் வேண்டும் போன்ற விடயங்களை சம்பந்தப்பட்ட மூலங்களில் இருந்து கேட்டறியவும்.



*வீதியில் : பொதுவான சட்டத்தினடிப்படையில் ஊடகவியலாளர் நபரொருவரின் இனம், இனப்பிரிவு, மதம் போன்றவற்றை அறிக்கையிடலை தவிர்த்தல் வேண்டும். அது அவ் அறிக்கையுடன் தொடர்புபடின் அதனை எவ்வாறு குறிப்பிடுதல் வேண்டுமென அந்நபரிடம் கலந்தாலோசிக்கவும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. இலங்கையில் ஊடகங்கள் எவ்வாறு செயலாற்றுகின்றன?



*சமூகமொன்றின் மேம்பாட்டுத் தன்மை : 2005 செப்டெம்பரில் தோலங்கமுவில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடு, இலங்கையில் ஜனநாயக மற்றும் பல்வினத் தன்மை ஊடக கலாசாரமொன்றை கட்டியெழுப்புவதற்கு உறுதிபூண்ட வரலாற்று மிக்க சாசனத்திற்கு உடன்பட்டனர். "எமது சமூகத்தின் பெறுமானங்கள் வெளிக் கொணரப்படும் வகையில் சக்திமிக்க மற்றும் ஜனநாயக ஊடக கலாசாரமொன்று தேவையென" கூறியிருந்தனர்.*

பொதுமக்கள் சேவைப் பெருமானங்கள் ஊடகத்துறையை இலங்கையிலுள்ள ஊடகங்கள் பயன்படுத்துகின்றனவா? பல்வேறு மூலங்களைப் பயன்படுத்தி, பிழைகளைத் திருத்தி, ஒரு சம்பவத்தின் செய்தி பல பக்கங்களை எந்தளவிற்கு சிறப்பாக அவை அறிக்கையிடுகின்றன? இக்கேள்விக்கான சில விடைகளை ஊடக மேற்பார்வை ஆய்வு தெரிவிக்கிறது.

2005ஆம் ஆண்டு மத்தியில் எட்டு நாட்களாக இலங்கையிலுள்ள பதினொரு தேசியப் பத்திரிகைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. இதனடிப்படையில் இலங்கையிலுள்ள பத்திரிகைகள் தமது செய்திக்காக ஒரு மூலத்தில் மாத்திரமே தங்கியிருந்ததை இனம்காண முடிந்தது. அதேவேளை, மூன்றில் ஒரு சம்பவங்கள் (செய்தி) தமது செய்திக்கான மூலத்தை பெரும்பாலும் இனம் காணவில்லை. நாட்டில் உள்ள பத்திரிகைகள் மிக அரிதாகவே திருத்தமொன்றை பிரசுரிக்கின்றன.

சிங்கள, தமிழ் பத்திரிகைகளில் வெளிவருகின்ற பெரும்பாலான சம்பவங்களின் பொழுது ஒரு மூலம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டதாக மேற்பார்வையின் பொழுது கண்டறியப்பட்டது. ஆனால், ஆங்கிலப் பத்திரிகைகளில் இந்நிலைமை சற்று சிறப்பாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. இதில் இடம் பெற்ற ஆக்கங்களில் சுமார் முப்பது வீதமானவை மாத்திரமே ஒரு மூலத்தில் தங்கியிருந்தன.

பதில் அளிப்பதற்கான உரிமை தொடர்பான விடயங்களை ஆங்கிலப் பத்திரிகைள் மூன்று முறையும் (இது ஒரு பத்திரிகையில் இடம் பெற்றது), சிங்களப் பத்திரிகைகள் 15 முறையும், தமிழ் ஊடகங்கள் ஆறு முறையும் மாத்திரமே பிரசுரித்திருந்ததை ஆய்வு கண்டறிந்தது.

மேற்பார்வை காலப்பகுதியின் பொழுது ஆங்கிலப் பத்திரிகைகள் இரண்டு திருத்தங்களையும், சிங்களப் பத்திரிகைகள் 13 திருத்தங்களையும், தமிழ் பத்திரிகைகள் ஒரேயொரு திருத்தத்தை மாத்திரம் மேற்கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

***சமூகத்தில் காணப்படுகின்ற பொதுவான பிரச்சினைகளை போக்குவரத்து, சுகாதாரம், சுற்றாடல் போன்ற விடயங்களிலேயே தமது ஊடகவியலாளர்கள் அதிகமாக எழுதவேண்டுமென பல பிரதம ஆசிரியர்கள் எதிர்பார்க்கிறார்கள்.***

## உயர்மட்ட கருத்துக்கள்

2006ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களின் பொழுது இலங்கை பத்திரிகைத் துறையைச் சார்ந்த பிரதம ஆசிரியர்களை (chicf cditors) நேருக்கு நேர் பேட்டி காணப்பட்டது. இவர்களுள் பலர் தமது பத்திரிகைத் துறையைச் சார்ந்த ஊடகவியலாளர்கள் சராசரிக்கு அதிகமான அளவு ஒழுக்கநெறிமுறைச் சார்ந்த அறிவைக் கொண்டிருக்கிறார்கள் என நம்பினர். இது 2004ஆம் ஆண்டு IFJ மேற்கொண்ட ஆய்வுடன் ஒப்புநோக்கப்பட்டது. இதனடிப்படையில் சகல விதமான ஊடகவியலாளர்களில் சுமார் ஐம்பது சத வீதத்தினர் மாத்திரமே தொழில்வாண்மை ஒழுக்கநெறிக் கோவை என்பன பற்றி அறிந்திருந்தனர். மேலும் 10% குறைவானவர்கள் மாத்திரமே ஒழுக்கநெறிக்கோவைப் பிரதியை வைத்திருந்தனர் அல்லது இது தொடர்பான பயிற்சிகளை பெற்றிருந்தனர்.

தாம் பணியாற்றுகின்ற நிறுவன உரிமையாளர்களிடமிருந்து அரசியல், வர்த்தகரீதியான அழுத்தங்களைத் தவிர்ந்த சுயாதீனமாக பணியாற்றுவதை உறுதிப்படுத்துவதற்கு ஆசிரிய சாசனம் ஊடக அமைப்புகளுக்கு அவசியமென்பதை ஆய்வுக்குட்பட்ட 14 பிரதம ஆசிரியர்களில் 12 பேர் நம்பினர்.

அரசியல் தலையீடுகள், ஊடக உரித்துகள், வர்த்தகமயம் ஆகியவையே இலங்கையில் பொதுமக்கள் சேவைப் பெறுமானங்கள் குறைவதற்கான முதல் காரணம் என கண்டறியப்பட்டது. ஊடகங்களில் பொதுமக்கள் சேவை ஊடகவியலுக்கு முன்னுரிமை அளிப்பதற்கான சிறப்பான மூன்று வழிமுறைகளை பொதுமக்களுக்கு பயிற்சியளித்தல் ஆசிரியர் கொள்கையில் மாற்றம், பொதுமக்கள் மத்தியில் காத்திர மான விவாதங்களை ஏற்படுத்துதல் போன்றவற்றை பிரதம ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

பொதுமக்கள் சேவை ஊடகவியல் பெறுமானங்கள் தொடர்பாக தமது ஊடகவியலாளர்களுக்கு பயிற்சியளிக்க முடியுமெனில் சிறப்பானது என ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 14 பிரதம ஆசிரியர்களில் 13 பேர் தெரிவித்திருந்தனர். மேலும் பயிற்சி தொழிற்துறை சார்ந்த வழிகாட்டிகள், ஒழுக்கநெறிக் கோவை ஆகியவற்றின் மூலம் தொழில் வாண்மையை மேம்படுத்துவதற்கான தேவையுள்ளதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

சமூகத்தில் காணப்படுகின்ற பொதுவான பிரச்சினைகளை போக்குவரத்து, சுகாதாரம், சுற்றாடல் போன்ற விடயங்களிலேயே தமது பணியாட்கள் அதிகமாக எழுத வேண்டுமென பல பிரதம ஆசிரியர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

## செய்தி ஆசிரியர்கள் எதனை நினைக்கிறார்கள்?

2005ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதமளவில் இலங்கை ஊடகங்களைச் சேர்ந்த செய்தி ஆசிரியர்கள் 28 பேர் நேருக்கு நேரான கலந்துரையாடல் மூலம் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். இவர்களுள் அரச கட்டுப்பாட்டு ஊடகங்களைச் சேர்ந்தவர்கள் 10 பேர் ஏனைய ஊடகங்களைச் சேர்ந்தவர்கள் 18 பேர் சிங்கள ஊடகத்துறையைச் சேர்ந்தவர்கள் 18 பேர், 10 பேர் ஆங்கில ஊடகத்தையும், 4 பேர் தமிழ் ஊடகத்தையும் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் தமது செய்திகளை உயர்வாக தரப்படுத்திய பொழுதிலும் செய்திகளை பெரும்பாலும் பாதுகாப்புப் படையினர், அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்கள், பொலிஸார் போன்றவர்களிடமிருந்தே பெற்றுக் கொண்டதாக பல நிருபர்கள் தெரிவித்தனர்.

ஏனைய சில ஆக்கங்களைப் பொறுத்தவரையில் பெரும்பாலான ஆசிரியர்கள் தமது நிருபர்கள் (பணியாட்கள்), போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, சுற்றாடல் போன்ற பொதுவான சமூகப் பிரச்சினைகளை எழுதுவதையே விரும்பினர். மேலும் அரசியல், சமாதானப் பேச்சுவார்த்தைகள், விபத்துகள், குற்றம், துஷ்பிரயோகம் போன்ற தொனிப் பொருள்களில் எழுதுவதையும் விரும்பினர். பொதுமக்களுக்கு பொருத்தமான ஆர்வமுள்ள சம்பவமொன்றை, சகல பக்கங்களையும் உள்ளடக்கி, மூலங்களை உறுதிப்படுத்தி சிறப்பாக எழுதப்படுமாயின் அதற்கு முன்னுரிமை அளிக்கத் தயார் என சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர். மேலும் நிறுவன ரீதியான கொள்கைகள், வளப்பற்றாக்குறை, அரசியல் மற்றும் வியாபார ரீதியான அழுத்தங்கள் போன்றனவே ஊடகத்துறையின் சுதந்திரத்திற்கான பாரிய தடைகளாக் காணப்படுகின்றன என இவர்கள் தெரிவித்தனர்.

பொதுமக்கள் சேவை ஊடகவியலை மேம்படுத்துவது தொடர்பாக இவர்களிடம் கேட்கப்பட்டபொழுது, உயர் தராதரமுடைய ஊடகவியல் அவசியம் என்றும், மேலும் அரசியல், வர்த்தகம், கட்சிசார்பற்ற ஊடகத்துறையை உருவாக்குவதற்கு தாங்கள் முயற்சிப்பதாகவும், இவை பக்கச்சார்பற்ற முறையில் சமூகநீதியை கருத்திற்கொண்டு செயற்பட வேண்டுமெனவும் பதிப்பாசிரியர்கள் தெரிவித்தனர். மேலும் இலங்கையிலுள்ள ஊடகங்களில் பொதுமக்கள் சேவைப் பெறுமானங்கள் குறைவதற்கான காரணம் என்னவென இவர்களிடம் வினவிய பொழுது, அரசியல் தலையீடுகள், வர்த்தக மயப்படுத்தல், அரச மற்றும் தனியார் துறையைச் சார்ந்த உரிமையாளர்களின் தலையீடுகள் போன்றனவே இதற்கான பிரதான காரணம் எனக் குறிப்பிட்டனர்.

ஊடகங்களில் பொதுமக்கள் சேவைப் பெறுமானங்களை மேம்படுத்துவதற்கு தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்ற கருத்தை ஐம்பது வீதத்திற்கும் அதிகமான செய்தி ஆசிரியர்கள் கொண்டிருந்தனர். மேலும் தமது அமைப்பினுள் பொதுமக்கள் சேவைக்கு ஊடகத்துறையை அறிமுகப்படுத்துவதற்கு அல்லது மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமெனில் தமது பூரண ஒத்துழைப்பை தாங்கள் நல்குவதாகவும் தெரிவித்தனர்.

## பிராந்திய ஊடகவியலாளர்களின் பிரச்சினைகள்

பிராந்திய ஊடகவியலாளர்களின் வகிபாகத்தையும், பொறுப்பு-களையும் அங்கீகரிப்பது இலங்கை ஊடகத்துறை மறுசீரமைப்பின் முக்கிய பணியாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவர்களுக்கு போதிய ஊதியம், தேவையான உதவிகள் போன்றன வழங்கப்படாமல் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மொத்தம் 4000 பேர் உள்ளனர் என்று மதிப்பிடப்பட்டுள்ள ஊடகவியலாளர்களுள் கிட்டத்தட்ட ஐம்பது வீதமானவர்கள் மாகாண ரீதியான, சுயாதீன ஊடகவியலாளர்கள் (Freelance) என்ற அடிப்படையில் பணியாற்றுகின்றனர். இம்மாகாண ஊடகவியலாளர்கள் பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இவர்கள் சுயாதீன ஊடகவியலாளர்கள் என்ற முறையில் தமது தொழில், அந்தஸ்து, தனிமைப்படுத்தல், தாங்கள் பணியாற்றுகின்ற நிறுவனங்களில் இவர்களது செய்திகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் போன்ற பல பிரச்சினைகளை எதிர்த்து நிற்கவேண்டியுள்ளது. அத்துடன், இலங்கையிலுள்ள பெரும்பாலான ஊடகங்கள் கொழும்பை மையமாகக் கொண்டு செயற்படுகின்றன. இதனால், பிராந்திய ரீதியாக பணியாற்றுகின்ற பெரும்பாலான ஊடகவியலாளர்கள் பிரதான நீரோட்டத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர், மேலும் தமது சகபாடிகளது நம்பிக்கையையும், தொழில்ரீதியான நட்பையும் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்வதுடன், சிறப்பான ஊடகத்துறையின் நிமித்தம் கொழும்பில் உள்ள பதிப்பாசிரியரின் உதவி அவசியப்படுகிறது.

இலங்கையில் சவாலுடன் எதிர்கொள்ளக்கூடிய பல முக்கிய நிகழ்வுகள் நாடெங்கிலும் நடைபெறுகின்றன. இவற்றுள் அதிகமானவை தலைநகருக்கு வெளியில் இடம்பெறுகின்றன. இவை தொடர்பான விடயங்களை கண்டறிந்து, தெளிவினைப் பெற்றுக்கொள்வதற்கு பிராந்திய ரீதியாக பணியாற்றும் ஊடகவியலாளர்களின் தியாகமும், அர்ப்பணிப்பும் அவசியப்படுகின்றன.

பிராந்திய ஊடகவியலாளர்கள் 205 பேர் 2005ஆம் ஆண்டு செப்டம்பரில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். இவ் ஆய்வின் பொழுது பிராந்திய ஊடகவியலாளர்களின் தகவல் மூலம் பற்றி கேட்கப்பட்டது. இவர்களுள் 53 வீதமானவர்கள் தங்களுக்குரிய தகவல்களை தாங்கள் அரச நிறுவனங்களிடமிருந்து (பொலிஸ், அரச முகவர்கள், அரசியல்வாதிகள்) பெற்றுக் கொள்கிறார்கள் எனத் தெரிவித்தனர். மேலும் 16% சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ் ஆய்வின் பொழுது பொதுமக்கள் சேவைப் பெறுமானங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இலங்கை ஊடகங்களில் இவ்வகையான பெறுமானங்கள் புறக்கணிக்கப்பட்டமைக்கான காரணம் என்னவென ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களிடம் வினவப்பட்டதுடன் அதனைத் தரப்படுத்தும் படியும் கோரப்பட்டது. இதற்குரிய முதல் காரணம் “அரசியல் காரணிகள்” என 36 வீதமானவர்கள் தெரிவித்தனர். அதற்கடுத்தபடியாக “வர்த்தகரீதியான நலன்கள்” எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த இரண்டு வகையான பதில்களும் தரப்படுத்தலில் முதல் மூன்று இடங்களில் ஒன்றை பெற்றுக்கொண்டன. மேலும் “அரச, தனியார் உரிமம்” மற்றும் “ஆசிரியக் கொள்கைகள்” ஆகியன அதற்கடுத்த இடத்தைப் பெற்றுக் கொண்டன.

இலங்கையிலுள்ள ஊடகங்களில் இவ்வகையான பெறுமானங்களை எவ்வாறு ஏற்படுத்த முடியுமென வினவப்பட்டபொழுது, “பாரிய பொது மக்கள் விவாதத்தின்” மூலமே இதனை ஏற்படுத்த முடியுமென 52 வீதமானவர்கள் தெரிவித்தனர். மேலும் ஊடகங்களில் பொதுச்சேவைப் பெறுமானங்களுக்கு முன்னுரிமையளிக்கப்படல் வேண்டுமென்ற பிரசாரங்கள் நடைபெறின் அதில் பிராந்திய ஊடகவியலாளர்களும் பங்குபற்றுவதற்கு விருப்பமுடையவர்களா என ஆய்வின்பொழுது வினவப்பட்டது. 91 வீதத்திற்கு அதிகமான பிராந்திய ஊடகவியலாளர்கள் இதில் பங்குபற்றுவதற்கு விருப்பத்தைத் தெரிவித்தனர்.

பிராந்திய ஊடகவியலாளர்களை பாரிய ஊடகச் சமுதாயமாக ஒன்றிணைப்பதே தற்போது எதிர்கொள்கின்ற முக்கிய சவாலாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிட்னி மோர்னிங் ஹெரல்ட் பத்திரிகையின்

**சரியாக மேற்கொள்வதற்குரிய 10 விதிமுறைகள்**

1. **பெயர்களும் தலைப்புகளும்** - சரியான நபரை குறிப்பிட்டுள்ளோம் என்பதை உறுதிசெய்யவேண்டும். சகல பெயர்களும் எழுத்துப் பிழையின்றி எழுதப்பட்டுள்ளனவா, குறிப்பிடப்பட்ட நபரின் தொழில் மற்றும் உறவு முறைகள் (மகன், மருமகள் போன்றன தேவையாயின்) சரியாக குறிப்பிடப்பட்டுள்ளனவா, போன்றவற்றையும் உறுதி செய்ய வேண்டும். ஒருவருடைய சுய விபரங்களை குறிப்பிடுகிறோம் எனில் அவரிடம் உறுதிசெய்துகொள்வது சிறப்பானது. செய்தியாளரின் (நிருபர்) பெயர் சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

2. **நேரம், திகதி, இடம்** - நேரம், திகதி, இடம் என்பன சரியாக குறிப்பிடப்பட்டுள்ளனவா என்பதை உறுதிசெய்ய வேண்டும். மேலும் குறிப்பிட்ட வீதி, இடம், அவை தொடர்பான விளக்கங்கள் போன்றன எழுத்துப் பிழையின்றி சரியாக எழுதப்பட்டுள்ளனவா என்பதை உறுதிசெய்து 'சரி' அடையாளமிடவும். புவியியல் ரீதியான பொதுமைப்படுத்தல்கள் தவிர்க்கப்படல் வேண்டும்.

3. **கணக்கீடுகளும், இலக்கங்களும்** - ஒருவர் குறிப்பிட்டதை அவ்வாறே ஏற்றுக்கொள்ளாமல் சகலவிதமான கணக்கீடுகளையும் புள்ளிவிபரங்களையும் இரண்டு முறையாவது சரிபார்க்கவேண்டும். கணக்கீடுகளுக்கான அடிப்படை விபரங்களை வாய்ப்புள்ள பொழுது குறிப்பிட வேண்டும். இதன் விளைவுகளை பிரதியில் சரி அடையாளமிட்டு, அது எவ்வாறு தோன்றியது என்ற குறிப்புடன் இணைக்கவேண்டும். குறிப்பில் சகல இலக்கங்களையும் அதற்கான நூற்றுவீதத்தையும் குறிப்பிட வேண்டும். சகல இலக்கங்களையும் இரண்டு முறை சரிபார்த்து 'சரி' (✔) அடையாளமிடுவது சிறப்பானது.

4. **ஆதாரப்படுத்தல்** (Substantiation) - சகல செய்திகளையும், மூலங்களையும் நாம் உறுதிப்படுத்த வேண்டும். சில சிறு விடயங்களுக்குத் தேவையான ஆதாரம் இல்லாத பொழுது எமது ஊகத்திற்கான அடிப்படைக் காரணங்களை குறிப்பு மூலமாக தெரிவிக்கிறோம். மூலக் கண்ணோட்டத்தை வாசகர்கள் தெளிவாக புரிந்துக்கொள்வதற்கேற்ற விதத்தில் மூலங்கள் தொடர்பான விளக்கங்கள் திட்டவட்டமாக அமைய வேண்டும். பதிப்பாசிரியரின் ஒப்புதலின்றி அநாமதேய விடயங்களை குறிப்பிடக்கூடாது.

5. **உறுதிப்படுத்தல்** - வாய்ப்புள்ள சந்தர்ப்பங்களில் ஆவணங்களை நாம் உறுதிப்படுத்திக் கொள்கிறோம். அதேவேளை மீண்டும் ஒரு முறை பிரசுரிக்க வேண்டிய தேவையேற்படும் பொழுது ஏனைய ஊடகங்களிலிருந்து அவற்றை உறுதிப்படுத்துவதற்காக இணையத்தையோ அல்லது (Fairfax archives) பயன்படுத்தக் கூடாது. இவற்றினால் மீண்டும், மீண்டும் பிழைகள் ஏற்படலாம்.

6. **மேற்கோள்கள்** - ஒருவர் பிரயோகித்த அதே வார்த்தைகள் ஹெரல்டில் அவ்விதமே நேரடியாக பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை நாம் உறுதிசெய்கிறோம். திட்டவட்டமாக சில சொற்கள் மீது சந்தேகம் எழுகின்ற பொழுது அவற்றின் மூலக் கருத்து மாற்றமேற்படாத வகையில் வேறு சொற்களை பாவிக்கலாம். பூரணமான அர்த்தத்தின் நிமித்தம் சில வார்த்தைகளை அகற்ற வேண்டியேற்படலாம், இது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு முறை என்ற பொழுதிலும் மிக அரிதாகவே இதனை பயன்படுத்தவும்.

7. **புகைப்படங்கள்** - ஒரு குற்றவாளி அல்லது சாட்சியாளரின் புகைப்படத்தை பிரசுரிப்பதற்கு முன்பு அதனை நீதிமன்ற செய்தியாளர் சரியாக அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். இவ்வகையான புகைப்படங்களை பிரசுரிப்பதற்கு முன்பு அவை சுயாதீனமாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும். பொதுப் பெயர்களையுடைய நபர்களது புகைப்படங்களை பிரசுரிக்க வேண்டியேற்படின், அவற்றை இருமுறை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏதாவது சந்தேகங்கள் இருப்பின் அவற்றை பிரசுரிக்க வேண்டாம்.

8. **நெறிப்படுத்தல்** - பிரசுரிப்பதற்கு முன்பு பிழைகள் இருப்பின் அவற்றை செய்தியாளர் முறையாக திருத்திக்கொள்ள வேண்டும். செய்தியாளர்கள் அதிகமாக எழுதக்கூடாது. ஏனெனில் சில விடயங்களை தவிர்க்கின்ற பொழுது பிழைகள் ஏற்படலாம். துணை பதிப்பாசிரியரை செய்தியாளர்கள் சந்திப்பதன் மூலம் மாற்றங்களை இலகுவாக மேற்கொள்ளலாம்.

9. **அதிக அழைப்புகள்** - அறியாமல் விடப்பட்ட பிழைகள், அழுத்தங்கள் போன்றவற்றின் நிமித்தம் சில வேளைகளில் அதிகமானவர்களுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டி ஏற்படலாம். அடிப்படை செய்தியொன்று தொடர்பான அறிவிப்பை மேற்கொள்வதற்கு நான்கு விதமான உறுதிப்பாடுகள் தேவைப்படுகின்றன. கூற்றை தெரிவிப்பவர், இதனால் பாதிக்கப்பட்ட நபர் அல்லது அமைப்பு, குறைகளைக் கூறுபவர், நிபுணர், ஊகத்தின் அடிப்படையில் அமைந்த செய்திகளுக்கு இரண்டு மூலங்களாவது இருக்குமெனில் சிறப்பானதாகும்.

10. தகவல்களை சரியாகவும், நேர்மையாகவும் வழங்குவதில் ஹெரல்ட் (Herald) அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. இதில் ஏதாவது திருத்தங்களை அல்லது மாற்றங்களை மேற்கொள்ள முயற்சிக்கின்ற பொழுது, பிழையான தகவல்களுக்கும் இது இட்டுச் செல்லலாம்.

(The sydney morning Herald , ல் இருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. ஊடக சாசனம் 2005

2005ஆம் ஆண்டு செப்டெம்பரில் நாட்டில் பொது மக்கள் சேவை ஊடகவியலை மேம்படுத்துவதன் நிமித்தம் ஊடகத்துறை கலாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கையைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் பல முன்னெடுப்புகளை மேற்கொண்டனர். ஊடகத்துறை ஊழியர்களின் தொழிற்சங்க சம்மேளனம், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், இலங்கை முஸ்லிம் மீடியா போரம், சுதந்திர ஊடக இயக்கம் ஆகிய ஐந்து அமைப்புகளின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து IFJஇன் உதவியுடன் ஊடக சாசனத்தை வரைவதற்கு முன்வந்தனர்.



பந்தை கீழே போட வேண்டாம் : அனர்த்த சந்தர்ப்பத்திலும், ஏனைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வழங்கப்படுவதனையும் விட பொது மக்கள் சேவை ஊடகவியல் முக்கியத்துவம் வாய்ந்தது. சரியான, நேர்மையான, ஒழுக்க நெறியான, பக்கச்சார்பற்ற மற்றும் நிகழ்கால செய்தியறிக்கையிடலாகும்.

சனநாயகம் மற்றும் பல்லினத்தன்மை வாய்ந்த ஊடகக் கலாசாரம் மற்றும் இலங்கையில் ஊடகம், பத்திரிகைத்துறை ஆகியவற்றிற்கான சமூக தொழில்வாண்மை உரிமைகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்தவதற்கான திட்டம், காலஅளவு போன்றவற்றையும் சாசனம் குறிப்பிடுகிறது. அரசியல் வர்த்தக ரீதியான தலையீடுகள் அற்ற நிலையில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த தராதரத்துடன் ஊடகங்கள் இயங்குகின்றன என ஊடகவியலாளர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட விரிவான உடன்படிக்கையே இச்சாசனம் ஆகும். இப்பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வது என்பதில் ஊடகவியலாளர்களுக்கு மத்தியில் இணக்கப்பாடு காணப்படல் வேண்டும்.

*இலங்கையில் ஊடகங்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பான விழிப்புணர்வை ஆரம்பிப்பதற்கும் ஊடக மறுசீரமைப்பு தொடர்பான கருத்துக்களை மேம்படுத்துவதற்கும் சிறப்பான தருணம் இதுவே.*

**இச்சாசனத்தின் அறிமுகம் இவ்வாறு குறிப்பிடுகிறது :**

நல்லாட்சி, வினைதிறன்மிக்க பொது நிர்வாகம், இலங்கையில் பேச்சுவார்த்தை மூலமான சமாதானத்தீர்வு, சுனாமிக்கு பின்னரான மீள் கட்டமைப்புச் செயற்பாடுகளை வெற்றிகரமாக மாற்றியமைத்தல் போன்றவற்றின் நிமித்தம் நீதியான, சமனிலையுடைய, சுயாதீனமான ஊடகம் அவசியம். பொதுமக்களது நலனில் அக்கறையும், பொறுப்பும் மிக்க தொழில்வாண்மைமிக்க அரச அல்லது ஏனைய தலையீடுகள் அற்ற ஊடகமானது சமத்துவமிக்க சனநாயகத்திற்கு அவசியமாகும்.

இலங்கையில் ஊடகத்துறை இயங்குவதற்கு பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இலங்கை மக்களது நலனுடன் தொடர்புபட்டவையாக இச்சவால்கள் காணப்படுகின்றன. தொழில்வாண்மை மிக்க கூட்டொருமை, சுயாதீனமிக்க ஊடக கலாசாரத்தை கட்டியெழுப்புதல் போன்றவற்றின் நிமித்தம் பணியாற்றும் ஊடகவியலாளர்கள், ஊடக மறுசீரமைப்பின் பொருட்டு பிரசாரப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் முக்கிய பங்களிப்புகளை வழங்க வேண்டியுள்ளது.

உறுதியான சனநாயக ஊடகசேவை கலாசாரத்தை செய்தி ஊடகங்களுக்குள் ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதன் மூலம் சமூகத்தின் செழுமையை பிரதிபலிப்பதுடன் பக்கச்சார்பற்ற, அரசாங்கத்தின் நலனை மாத்திரம் பிரதிபலிக்காத, வர்த்தக ரீதியான செல்வாக்கற்ற முழு சமூகத்திற்கும் சேவையாற்றக்கூடிய ஊடகத்துறையை தோற்றுவிக்க முடியும். மேலும் இலங்கை சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலுள்ள பன்மைத்துவம் நிறைந்த குரல்கள் ஒலிப்பதற்கான வாய்ப்பையும் இது நல்கிறது.

அறிந்துகொள்வதற்கான உரிமையை வலுப்படுத்துவதற்குத் தேவையான ஆகக் குறைந்த தராதரம், கொள்கைகள் போன்றவற்றுடன் சனநாயக சமூகத்தில் சுதந்திர ஊடகத்தின் அவசியம், ஊடக மறுசீரமைப்பிற்குத் துணைபுரியக்கூடிய நடைமுறைசார்ந்த செயல்திட்டம் போன்றவற்றையும் சாசனம் குறிப்பிடுகிறது. (சாசனத்தை முழுமையாக அறிந்துகொள்ள பின்னிணைப்பு II பார்க்க)

இலங்கை ஊடகங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஆரம்பமாக சாசனம் திகழ்கிறது. ஊடகவியலாளர்களின் அமைப்புகள் மூலமாக அவர்களை இயங்கச் செய்வதற்குத் தூண்டுவதுடன், இதனை எமேற்கொள்ளலாம் என்ற விவாதத்திற்கான நிகழ்ச்சி நிரலையும் தொகுத்தளிக்கின்றது.

உண்மையை மதித்தல், அறிந்துகொள்வதற்கான பொதுமக்களது உரிமைகள் உள்ளடங்கலாக பல்வேறு விதமான கொள்கைகளை ஊடகவியலாளர்களின் அடிப்படை கடப்பாடுகள் என்ற முறையில் சாசனம் வரைவிலக்கணப்படுத்துகிறது. மேலும் பல்லினத்தன்மை கொள்கைகள், வேற்றுமைகள், சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் ஆகியவற்றை மதிக்கக்கூடிய ஊடகங்களை பெற்றுக்கொள்வதற்கு பிரஜைகளுக்கு கிடைக்கின்ற சுதந்திரத்தின் அடிப்படையிலேயே பொறுமையான, சமாதானமான, நேர்மையான சமூகம் தங்கியுள்ளது என்பதையும் இது அங்கீகரிக்கிறது.

பாதுகாப்புடன் வேலைசெய்தல், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம், மற்றும் சம்பளம், ஏனைய வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஒன்றிணைந்து குரல் கொடுத்தல் (பேரம் பேசுதல்) உள்ளடங்கலாக ஊடகவியலாளர்களின் வேலையுடன் தொடர்புடைய விடயங்களுக்கு சாசனம் அழுத்தம் கொடுக்கிறது.

தனியார் ஊடகமாக இருந்தால் என்ன அல்லது அரசாங்க ஊடகமாக இருந்தால் என்ன, அவற்றிற்கான ஒழுக்கநெறி உள்ளடங்களாக ஆகக் குறைந்த தராதரத்தை இது குறிப்பிடுகிறதும் "ஊடகமானது வன்முறைகளையும், தீவிரவாதத்தையும் ஆதரிக்கின்ற கருவியாக எப்போதும் பயன்படுத்தக்கூடாது." மேலும் "ஊடகத்துறையின் ஒழுக்கநெறி சார்ந்த செயற்பாடுகளுக்கு, நடத்தைகளுக்கு ஊடகங்களில் பணியாற்றுபவர்களே பொறுப்பாவார். ஒழுக்கநெறிக் கோவையை தோற்றுவிப்பதற்கும், சுய ஒழுங்கமைப்புடனான, நம்பகமான, பொறுப்புக்கூறக் கூடிய முறைகளையும் இவர்களே தோற்றுவிக்க வேண்டும்.

ஊடகவியலாளர்கள் தமது கடமைகளை மேற்கொள்வதில் தடையேற்படக்கூடாது. மேலும் ஊடகக் கொள்கையானது இலங்கையிலுள்ள சகல ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தை பாதுகாக்கக்கூடிய விதத்தில் உள்ளார்ந்த சட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

இச்சாசனத்தின் மூலமாக ஊடகத்துறை அமைப்புகள் அரசாங்கத்திடம் "வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தல், தகவல் சுதந்திரத்தை ஏற்படுத்தல், சகல சமூகங்களுக்கும் மத்தியில் பிணைப்பை வலுப்படுத்தும் வகையில் சனநாயக கலாசாரங்களை விருத்திசெய்யும் நோக்குடன் அனைவரதும் பங்குபற்றுதலை உறுதி செய்தல்" போன்றவற்றைக் கோருகிறது.

முக்கியமாக சமூகம், அரசாங்கம் ஆகியவற்றின் முழுமையான ஒத்துழைப்புடனேயே மாற்றங்கள் நிகழவேண்டுமென்பதை சாசனம் ஏற்றுக்கொள்கிறது. ஊடகவியலாளர்களின் செயற்பாட்டினால் ஏற்கனவே சில மாற்றங்கள் நிகழ ஆரம்பித்துவிட்டன.

இலங்கையில் ஊடகங்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பான விழிப்புணர்வை ஆரம்பிப்பதற்கும் ஊடக மறுசீரமைப்பு தொடர்பான கருத்துக்களை மேம்படுத்துவதற்கும் சிறப்பான தருணம் இதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. ஒழுக்கநெறி, பன்முகத்தன்மை மற்றும் சமூக அக்கறையுள்ள ஊடகத்துறை




*பன்மைத்துவம் : எமது செய்தியறையில் நாம் கூறும் கேட்கும் செய்திகளைப் போல் பன்மைத்துவம் நிலவுதல் பொதுமக்கள் சேவை ஊடகவியலின் முக்கிய அம்சமாகும்.*

## நெறிமுறைத் தராதரங்கள்

ஊடகத்துறையைச் சார்ந்த நெறிமுறைகளை ஊடகவியலாளர் (நிருபர்கள்) கவனமாக பின்பற்றுவதானது பொதுமக்கள் சேவை ஊடகத்துறையை தோற்றுவிப்பதற்கான சிறப்பான அணுகுமுறைகளில் ஒன்று என லொஸ் ஏஞ்ஜல்ஸ் டைம்ஸ் ( The Los Angeles Times) பத்திரிகையைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜெக் நெல்சன் (Jack Nelson) தெரிவித்துள்ளார். (Nelson 2000)

சிறப்பான ஊடகவியல் குறிப்பாக பொதுமக்கள் சேவை ஊடகவியல் செழுமையடைவதாக இவர் நம்புகிறார். மேலும் நெறிமுறை சார்ந்த ஊடகத்துறையை மேம்படுத்துவதற்கும் மக்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வை நாடக்கூடிய விதத்திலான ஊடகத்துறையை தோற்றுவிக்கும் நோக்கில் பல முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இவர் கருதுகிறார்.

ஐக்கிய அமெரிக்க மாநிலமொன்றில் அமைந்துள்ள உளநல மருத்துவமனையொன்றில் இடம்பெற்ற முறைகேடுகள் பற்றிய விசாரணைகளை மேற்கொண்ட பொழுது திரு. நெல்சன் அவர்களுக்கு பொதுமக்கள் சேவை ஊடகவியல் மீது ஈடுபாடு ஏற்பட்டது. இப்பணிகள் நிறைவு பெற்றதன் பின்பு அமெரிக்காவின் மற்றுமொரு மாநிலம் தனது மனநல மருத்துவமனைகளை எவ்வாறு மறுசீரமைப்புச் செய்தது என்பதனை ஆராய்வதற்கான பொறுப்பு இவரது பதிப்பாசிரியரினால் இவரிடம் வழங்கப்பட்டது. “இப்பணி தொடர்பாக நான் அதிகம் மகிழ்ச்சியடையவில்லை. புலனாய்வுப் பத்திரிகையாளர் என்ற முறையில் பிரச்சினைகளை கண்டறிவது எனது பணியாகக் காணப்பட்ட பொழுதிலும், அவற்றிற்கு தீர்வைக் காண்பது எனக்குரிய விடயமல்ல. ஆனால் எனது பதிப்பாசிரியர் சரியாகவே செயற்பட்டுள்ளார். இதன் மூலம் தீர்வுகளைக் காண்பது தொடர்பான முக்கிய விடயங்களை கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது” என திரு. நெல்சன் குறிப்பிட்டார்.

## இலங்கை செய்தி அறைகளில் காணப்படும் இனத்துவ பன்முகத்தன்மை

இலங்கையிலுள்ள பிரதான பதிப்பாசிரியர்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் பொழுது, பத்து சிங்களச் செய்திப்பத்திரிகைகளில் ஐந்து பத்திரிகைகளில் வேறு இனத்தை சேர்ந்த ஊடகவியலாளர்கள் எவரும் காணப்படவில்லையென்றும் அதேபோல் ஏனைய ஐந்து பத்திரிகைகளில் ஒரு பத்திரிகையில் ஒரு தமிழர் மாத்திரம் காணப்பட்டார் எனவும் கண்டறியப்பட்டது. மேலும் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட இரண்டு தமிழ் பத்திரிகைகளில் ஒரு பத்திரிகையில் ஒரு முஸ்லிமும், மற்றையதில் நான்கு முஸ்லிம்களும் காணப்பட்டனர் என கண்டறியப்பட்டது. இவற்றுள் ஒரு சிங்களவர் கூட இல்லை. ஆங்கிலச் செய்தி பத்திரிகைகளுக்கான செய்தி அறைகளைப் பொறுத்தவரையில் சிங்கள ஊடகவியலாளர்கள் அதிகமாகப் பணியாற்றிய பொழுதிலும், தமிழர்கள், முஸ்லீம்கள், பறங்கியர் போன்ற ஏனையவர்களையும் தன்னகத்தே கொண்ட பன்முகத்தன்மையை அவதானிக்க முடிந்தது. ஒரு செய்திப் பத்திரிகையின் குறிப்பிட்ட மொழியைத் தவிர்ந்த ஏனைய இனங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களையும் தொழிலுக்கமர்த்துவதை பல பதிப்பாசிரியர்கள் வரவேற்றனர். இதன்மூலமாக மொழிரீதியான சிக்கல்களைத் தீர்ப்பது மாத்திரமன்றி ஏனைய சமூகங்களைப் பற்றிய தகவல்களையும் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கின்றன. அதேவேளையில் ஊடகங்கள் கட்டமைப்பு ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன. இவை தீர்க்கப்படல் வேண்டும். இலங்கையில் மும்மொழிகள் பேசப்பட்டாலும், ஒரு மொழியை பேசுகிறவர் ஏனைய மொழிகளைக் கற்பதற்கான கலாசார ரீதியான பின்புலங்கள் குறைவாகவே காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்மைத்துவத்தை உறுதிப்படுத்துவது பொதுமக்கள் சேவை ஊடகவியலின் மற்றுமொரு சிறப்பான விடயமாகும். செய்தி அறைகளில் மாத்திரமல்ல தமது செய்திகளில், சம்பவங்களில் ஒலிக்கின்ற குரல்களிலும் இது தொனிக்கவேண்டும். ஊடகத்துறை வினைத்திறன்மிக்கதாகத் திகழவேண்டுமெனில் சமூகத்தில் உள்ள அனைத்து மக்களதும் குரல்களும் அங்கு ஒலிக்கவேண்டும். மேலும் சமூகத்திற்கு பொறுப்புக் கூறக் கூடியதாகவும், சமூகத்தை பிரதிபலிக்கக்கூடியதாகவும் அது அமையவேண்டும். எனவே பால்நிலை, இனம், சமயம், மொழி, பின்புலங்கள் போன்ற பல்வகைமையை உள்ளடக்கியதாக செய்திகள் இலங்கையில் அமைவது முக்கியமானதாகும்.

ஊடகத்துறை மேன்மைகளுக்காக கருத்திட்டம் என்ற ஆவணத்தின் பிரகாரம், செய்தி அறைகளில் பன்மைத்துவம் என்பது வெறுமனே பால்நிலை, இனத்துவம், சமயம் சார்ந்த சமனிலையல்ல அதற்கும் அப்பால் "மிகக் காத்திரமான செய்தி அறையாக" அது பார்க்கப்படல் வேண்டும். (Journalism.org. 2006) அதாவது உண்மையில் பன்மைத்துவம் பொருந்திய ஊடகமானது வெறுமனே இலங்கையிலுள்ள சமூகங்களை மேலோட்டமாக பிரதிபலிக்காமல் அவற்றில் காணப்படுகின்ற பல்வேறு அம்சங்களை வெளிக்கொணரக்கூடிய சிறப்பான ஊடகத்துறையாக அமையவேண்டும்.

"பன்மைத்துவத்தின் நோக்கமானது வெறுமனே சமூகத்தை ஒத்த செய்தியறையை மாத்திரம் தோற்றுவிப்பதல்ல, அது நேர்மையானதாகவும், திறந்த மனதுடனும் செயல்பட வேண்டும், அதனடிப்படையிலேயே பன்மைத்துவம் சிறப்பாக இயங்க முடியும். இது வெறும் இனமல்ல அல்லது பால்நிலைரீதியான பன்மைத்துவமல்ல மேலும் வெறும் தத்துவரீதியான அல்லது எண்ணிக்கையின் அடிப்படையில் அமைந்த பன்மைத்துவம் அல்ல, இது சகல விடயங்களையும் உள்ளடக்கிய, அவற்றுக்கு அர்த்த புஷ்டிகளை வழங்கக்கூடிய புலமைசார் பன்மைத்துவமாகத் திகழவேண்டும்." (Journalism .Org. 2006) இங்கு குறிப்பிடப்படுகின்ற சம்பவங்கள் சமூகத்தின் பல்வேறு மக்களை பிரதிபலிக்கின்ற பொழுது இலங்கையிலுள்ள சமூகங்களின் உண்மையான நிலைப்பாடுகளை வெளியிடுகின்ற பொழுது சிறப்பான ஊடகத்துறையை உருவாக்கு வதற்கு அது துணைபுரிகிறது. வாய்ப்புள்ள சகல சந்தர்ப்பங்களிலும் பல்வேறு விதமான இனம், மொழி, வயது, புவியியல் அமைவிடங்கள், சமயம் போன்றன தொடர்பான செய்திகளை வெளியிட வேண்டும்.

## நெறிமுறைகளும் பண்புத்தரங்களும்

"காத்திரமான, உறுதியான தீர்மானங்களை வெளிக்கொணர்வதாக நெறிமுறைகள் அமையவேண்டும். இது சரி அல்லது பிழைக்கு இடையிலான விடயம் மாத்திரமல்ல சிலவேளைகளில் ஓரளவிற்கு சரியானதாக இருக்கலாம், அல்லது இரண்டு பிழைகளில் ஆகக்குறைந்த பிழையை கொண்டதாக இருக்கலாம்." – பேராசிரியர் ஜே. பிளக் (Prof. Jay Black), Society of Professional American Journalists' Ethics Handbook இன் இணை ஆசிரியர்.

உயர்தரமுடைய ஊடகத்துறையை மேம்படுத்துவதன் நிமித்தம் இலங்கையிலுள்ள ஊடகவியலாளர்கள் நெறிமுறைகளைப் பயன்படுத்த வேண்டிய தேவையுள்ளது. தற்போது ஊடகவியலாளர்கள் தமக்குரிய தொழில்வாண்மைப் பற்றிய நெறிமுறைகள் தொடர்பாக போதியளவு அறியாதவர்களாகவே காணப்படுகிறார்கள். on the road to peace, reporting conflict and ethnic diversity A research report on good Journalism practice in Srilanka (park & Deshapriya 2004) - இவ்வறிக்கையை IFJயும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் 2005ஆம் ஆண்டு தயாரித்தது. இலங்கையைச் சேர்ந்த 100 பத்திரிகையாளர்களை ஆய்வுக்குட்படுத்தியதுடன் இரண்டு வாரகால ஊடகமேற்பார்வைப் பயிற்சி நெறியொன்றை 2004 ஜுன் மாதம் நடத்தியது.

## நெறிமுறைகள்

- இலங்கையைச் சேர்ந்த 50 வீதமான பத்திரிகையாளர்களே நெறிமுறைக் கோவையைப் பற்றி அறிந்திருந்தனர்.
- 11 வீதமான பத்திரிகையாளர்களிடம் மாத்திரமே இக்கோவையின் பிரதிகள் காணப்பட்டன.
- 5 வீதத்திற்கும் குறைவானவர்கள் மாத்திரமே நெறிமுறைகள் தொடர்பான பயிற்சிகளைப் பெற்றிருந்தனர்.

## சமநிலை மற்றும் பக்கச்சார்பு

- இலங்கையிலுள்ள ஊடகங்கள் துல்லியமான, சமனிலையான, நேர்மையான தகவல்களை வழங்கத் தவறிவிட்டன என இலங்கையைச் சேர்ந்த 87% பத்திரிகையாளர்கள் நம்புகின்றனர்.
- தங்களது ஊடகங்கள் ஏதோ ஒரு இனக்குழுவுக்கு பக்கச்சார்புடன் நடந்து கொள்கின்றன என இலங்கையைச் சேர்ந்த 87% பத்திரிகையாளர்கள் நம்புகின்றனர்.

## மூலங்கள்

- இலங்கை ஊடகங்களில் குறிப்பிடப்படுகின்ற 50% வீதத்திற்கு மேற்பட்ட சம்பவங்கள் ஒரு மூலத்தை மாத்திரமே கொண்டுள்ளது.
- சிங்கள - தமிழ் பத்திரிகைகள் தெரிவுசெய்யப்பட்ட மூலங்களை மாத்திரமே பயன்படுத்துகின்றன.
- தமது மூலங்கள் துல்லியமற்றதாகவும், நம்பகத்தன்மையற்றதாகவும் காணப்படுவதாக 80% பத்திரிகையாளர்கள் நம்புகின்றனர். (அப்படியெனில், அதை நாம் ஏன் பயன்படுத்துகிறோம்.)

## சமநிலைச் சரிபார்த்தல் பட்டியல்

- பல்வேறு வகையான கருத்துக்களுக்கு வாய்ப்பளித்ததுடன் அவை முறையாகவும், அவற்றுக்கேயுரிய மரியாதையுடன், (தத்துவங்களுடன்) சரியாக சமர்ப்பிக்கப்பட்டது என்பதை உறுதி செய்து கொள்ளவும்.
- இக்கருத்துக்கள் எந்த மூலத்திலிருந்து அல்லது ஆக்கத்திலிருந்து பெறப்பட்டது என்பதை கருத்திற் கொள்ளவும் பெரும்பாலானவர்கள் வேறு கருத்துக்களை கொண்டிருக்கிறார்களா?
- மற்றவர்களுடைய கருத்துக்களை பொழிப்புரை செய்வதற்குப் பதிலாக வாய்ப்புள்ள சகல சந்தர்ப்பங்களிலும் அதனை நேரடியாக அப்படியே குறிப்பிடவும்.
- குறிப்பிட்ட சம்பவம் எழுதப்பட்டதன் பிரகாரம் இன, மத, சாதி ரீதியான கூறுணர்வுகளை ஏற்படுத்துமா?
- பிழையான சமனிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும், சமனிலை என்பது சகலரதும் சிறப்புக்கூறுகளை சமமாக உரைப்பதல்ல.

முழுச் சமூகத்திற்கும் நீங்கள் அறிக்கையிடுகிறீர்கள், குறிப்பிட்ட ஒரு இனக்குழுவிற்கு மாத்திரமல்ல என்பதை நினைவிற் கொள்ளவும்.

## நெறிமுறைக் கோவைகள்

நெறிமுறைக் கோவை பல்வேறு நோக்கங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. தொழில்வாண்மை மிக்கவர்கள் என்ற முறையில் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்ற அபிலாசைக் கூற்றுக்களைக் கொண்டதாக இது காணப்படுகின்றது. (வைத்தியர்களுக்கும், சட்டத்தரணிகளுக்கும் நெறிமுறைக் கோவைகள் உள்ளது போல்) இது எமக்கும் எமது வாசகர்கள் அல்லது நேயர்களுக்கிடையிலும் அதேபோல் எம்மை ஒழுங்குபடுத்த முயற்சிக்கின்ற அதிகாரிகளுக்குமிடையில் நல்லுறவை கட்டியெழுப்புவதை நோக்கமாகவும் கொண்டுள்ளது. எங்கள் மீது சட்டங்கள் அல்லது விதிகள் திணிக்கப்படுவதிலும் பார்க்க நெறிமுறைக் கோவைகள் மூலமாக எம்மை நாமே ஒழுங்குப்படுத்திக் கொள்ள முடியும். ஊடகத்துறையின் சிறப்பான பெறுமானங்களை பேணுவதற்காக எம்மால் இயன்ற சகல விடயங்களையும் நாம் மேற்கொள்வோம் என்ற உறுதியுடன், ஊடகத்துறையின் தராதரத்தையும் மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு நெறிமுறைக் கோவை உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஊடகத்துறை பதிப்பாசிரியர்களின் ஒழுக்கநெறிக் கோவை மற்றும் IFJ ஒழுக்கநெறிக் கோவை போன்றன பற்றி இலங்கையிலுள்ள ஊடகவியலாளர்கள் அறிந்திருக்க வேண்டும். இவற்றுடன் இவர்கள் பற்றுறுதியுடன் காணப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. தனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களது அந்தரங்கம் அதேவேளை அறிந்துகொள்வதற்கான பொதுமக்களது உரிமை ஆகியவற்றை பேணுவதை இலக்காகக் கொண்டு நெறிமுறைக்கோவை அமைந்துள்ளது. திருத்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டுமெனவும், பதிலளிப்பதற்கான உரிமை வழங்கப்பட வேண்டுமெனவும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊடகத்துறைக்கான IFJஇன் தொழில்சார் நடத்தைக் கோவையானது, ஊடகவியலாளர்கள் எவ்வாறு தமது பொறுப்புக்களையும், வகிபாகங்களையும் சிறப்பாக நிறைவேற்ற வேண்டுமென்பதை தெரிவிக்கின்ற பாரிய கொள்கைகளின் தொகுப்பாகும். (முழு விபரங்களுக்கு www.ifj.org for the full code)

இலங்கையின் சுயாதீன செய்தி பத்திரிகையான 'ராவய' பதிப்பாசிரியர்களுக்குரிய நடைமுறைகள் என்ற பிரகடனத்தை உருவாக்கியது. இது உள்ளார்ந்த நெறிமுறைக் கோவையாக செயற்படுகிறது. இதில் ஊடகவியலாளர்கள் பின்பற்ற வேண்டிய விதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இது சிறப்பான ஓர் ஆவணமாகும். இதில் நிருபர்களும், வாசகர்களும் ஒரேவிதமானவர்கள் எனவும், நெறிமுறை சார்ந்த நடத்தைக்கு ஊடகவியலாளர்களின் அர்ப்பணிப்பு தொடர்பான விடயங்களும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

## நம்பகத்தன்மை மற்றும் அநாமதேய மூலங்கள் - வெகுமானத்துடன் அபாய நேர்வை மதிப்பிடல்

அநாமதேய மூலங்களைப் பயன்படுத்துவதன் விளைவாக ஒரு செய்தியமைப்பின் அல்லது ஊடகவியலாளரின் நம்பகத்தன்மை பாதிக்கப்படலாம். பொயின்டர் நிறுவனத்தைச் (Pointer institute ) சேர்ந்த ரியான் பிட்ஸ் (Ryan pitts) இன் பிரகாரம் (Pitts 2005) அநாமதேய மூலங்களை அடிப்படையாகக் கொண்டு அறிக்கையிடுவதினால் ஏற்படுகின்ற அபாய நேர்வுகளை விட வெகுமானம் மூலம் அதிக பலாபலன்கள் கிடைப்பதாக பெரும்பாலான வாசகர்களும் ஊடகவியலாளர்களும் நம்புகின்றனர். ஆனால், இவற்றை பயன்படுத்தாவிட்டால் ஊடகங்கள் சிறப்பாக இருக்கும் என குறிப்பிடக்கூடியளவு வாசகர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர். எசோசியேட் பிரஸ் மற்றும் எசோசியேட் பிரஸ் முகாமைத்துவ பதிப்பாசிரியர் (Associated Press and Associated Press Managing Editors) (APME) 419 ஊடக நிலையங்களில் மேற்கொண்ட ஆய்வின் பொழுது ஆகக்குறைந்தது ஒரு சம்பவத்தின் பொழுதாவது தகவல் மூலத்தின் அடையாளத்தை பாதுகாப்பதற்கான வாய்ப்புகள் நிருபர்களுக்கு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால், இவ்விதமான நடைமுறைகளை தாங்கள் முழுமையாக தடைசெய்து விட்டதாக 25% வீதமான பதிப்பாசிரியர்கள் தெரிவித்தனர்.

ஒரு முக்கியமான விடயத்தை பெயரை வெளியிடாமலேயே தெரிவிக்க வேண்டும், அதற்கு வேறு மாற்றீடுகள் இல்லையென்ற நிலையில் மூலத்தை தெரிவிக்காமல் இருக்கலாம். இதற்கு சில வரையறைகள் உண்டு. (David Boardman, Managing Editor of *The Seattle Times in Crary – 2005)* .

அநாமதேயத்தின் முக்கியத்துவத்தை சில விசேட சம்பவங்களின் பொழுது தாங்கள் நன்கு உணருகின்ற பொழுது அதற்கு அனுமதி அளிக்கிறார்கள் என பதிப்பாசிரியர்கள் தெரிவித்தனர். உதாரணமாக இதை வெளியிடுவதன் மூலம் ஒருவரின் தொழிலுக்குப் பாதகம் ஏற்படுமெனில் அல்லது பாலியல் வல்லுறவினால் பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தை பாதுகாப்பதற்கான அல்லது சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் சென்ற வர்கள் அல்லது போதைக்கு அடிமையானவர்கள் போன்றவர்களுடைய அடையாளத்தை பாதுகாப்பதற்காக இவை மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டனர்.

அநாமதேய மூலத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை வேறொரு மூலத்துடன் தொடர்புகொண்டு பல பத்திரிகைகள் உறுதிசெய்து கொள்வதாக ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் மூலத்தின் பெயர் குறைந்தபட்சம் ஒரு சிரேஷ்ட அதிகாரிக்காவது அறிவிக்கப்படும். சில வேளைகளில் சம்பந்தப்பட்ட மூலத்துடன் நேரடியாக தொடர்பு கொள்வதற்கான தேவைகள் பதிப்பாசிரியருக்கு ஏற்படலாம்.

"த ஸ்டேட் இன் கொலம்பியா" வின் (The State in Colombia) முகாமைத்துவப் பதிப்பாசிரியர் டொன்யா கெனடி (Tonnya Kenedy) குறிப்பிட்டதாவது "வாசகர்கள் அடையாளம் காணக்கூடிய விதத்தில் மூலங்கள் தொடர்பாக தேவையான அளவு தகவல்களை வழங்க நாம் முயற்சிக்கின்றோம், உதாரணமாக ஒருவருடைய அடையாளத்தை குறிப்பிடாமல், உண்மைச் சம்பவங்களை குறிப்பிடுதல் போன்றன"

(க்ரெரி 2005)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலங்கள் சரிபார்த்தல் பட்டியல் சிட்னி மோர்னிங் ஹெரல்ட்

### மூலங்கள் தொடர்பான பொதுவான விதிமுறைகள்

1. ஒவ்வொரு பிரதான சம்பவம் தொடர்பாகவும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மூலங்கள் எமக்கு அவசியப்படுகின்றன. நேரடியாக சம்பந்தப்பட்டவரிடம் இருந்து கிடைக்குமாயின் ஒரு மூலம் ஏற்றுக்கொள்ளக்கூடியது. அடிப்படை ஆவணங்களை குறிப்பிட்டு அதனை உறுதிப்படுத்திக்கொள்ள விரும்புகின்றோம்.
2. வாய்ப்புள்ள சகல சந்தர்ப்பங்களிலும் மூலத்தை பதிவு செய்துகொள்ள நாம் விரும்புகின்றோம். அதற்கென பின்வருவனவற்றை மேற்கொள்ளலாம்.
   - சம்பவம் தொடர்பான உத்தியோகபூர்வ உறுதிப்படுத்தல் கிடைக்கும் பொழுது அவை பொதுமக்களை சென்றடையுமா?
   - சம்பவம் தொடர்பாக வேறொருவரிடம் இருந்து அல்லது வேறொரு ஆவணம் மூலமாக உறுதிப்படுத்தும் பொழுது பொதுமக்களை இலகுவாக சென்றடையுமா?
   - வேறு யாராவது செய்திருந்தால் பொதுமக்களை சென்றடையுமா?
   - விடயங்கள் தொடர்பாக மற்றவர்கள் நன்கு அறிந்து கொள்வதற்கும், பதிவினை மேற்கொள்வதற்குமென அவர்களுடைய தகவல்களை பயன்படுத்துதல்.
3. மேற்கோள்களை சரிபார்த்து கொள்வதற்கும் அவற்றிற்கும் மூலத்திற்கும் இடையிலான பின்புலன்களை அறிந்துகொள்வதற்கும் நாம் உடன்படுகிறோம். அவற்றை வாசிக்கவோ அல்லது சம்பவத்தில் குறிப்பிடவோ நாம் விரும்பவில்லை.
4. நிருபர்கள் தகவல்களை சேகரிக்கின்ற பொழுது அவை பற்றிய மூலங்களின் தன்மை, நோக்கம் போன்றன பற்றிய கேள்விகளை தமக்குத்தாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.
5. நாம் தகவல்களை சேகரிக்கின்றபோது மூலங்கள் தெரிவிக்கின்ற விடயங்கள் பிழையானது என்பதை நிருபிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றோமா?
6. பொறுப்புக்கூறல் தன்மையை அதிகரிப்பதற்காக பேச்சாளரை குறிப்பிட நாம் விரும்புகிறோம்.
7. கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட இடத்தை நாம் அறிவிக்கின்றோம். உதாரணமாக (கூற்றில் குறிப்பிடப்பட்டது), 'கூட்டத்தில் குறிப்பிடப்பட்டது', "ஹெரால்டில் குறிப்பிடப்பட்டது" போன்றன.
8. ஒருவரைப்பற்றி வேறொரு ஊடகத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விடயத்தை அப்படியே குறிப்பிடாமல், சம்பந்தப்பட்ட நபரின் கருத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அவரிடம் தொடர்புகளை ஏற்படுத்துகின்றோம். சம்பந்தப்பட்டவரிடம் தொடர்புகளை ஏற்படுத்த முடியாத பொழுது குறிப்பிட்ட கருத்துக்கள் அதன் பின்புலம் போன்றவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக குறிப்புகள், ஒலிநாடா அல்லது பொருத்தமான வேறு முறைகளை பயன்படுத்துகின்றோம்.
9. ஒரு கருத்தினை சுயாதீனமாக உறுதிசெய்துகொள்ள முடியாதவிடத்து நிருபர்கள் தமது பதிப்பாசிரியடமிருந்து வழிகாட்டுதல்களை பெற்றுக்கொள்ளவேண்டும். ஏனைய அச்சு ஊடகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களை மிகக் கவனமாக பாவிக்க வேண்டும். அவை நம்பகமான தகவல்கள் என கருதும் பொழுது அவற்றை பயன்படுத்தலாம். அவ்விதமான சந்தர்ப்பங்களில் எங்கிருந்து பெறப்பட்டது என்பதை குறிப்பிட வேண்டும். (உ+ம்) AAP அறிவித்தது".
10. தமது சுயவிபரங்களை அதிகரித்துக் கொள்வதன் பொருட்டு சில மூலங்கள் எமது பத்திரிகையை பயன்படுத்திக் கொள்வதை, அதற்கு நிபந்தனைகள் விதிப்பதை நாம் அனுமதிப்பதில்லை.
11. குறிப்பிடப்படுகின்ற ஒவ்வொரு உரிமைக் கோரல்களை அல்லது குற்றச்சாட்டுகளை நாம் அவ்வாறே ஏற்றுக்கொள்வதில்லை. அவை முறையாக ஆராயப்படல் வேண்டும். விமர்சகர்கள், நிபுணர்கள், அல்லது பகுப்பாய்வாளர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக அவற்றை நாம் ஏற்றுக்கொள்வதில்லை.

### அநாமதேய மூலங்கள் தொடர்பான விதிகள்

1. முக்கியமான உரிமைக்கோரலை அல்லது விடயத்தை உறுதிப்படுத்துவதற்கு அநாமதேய மூலங்கள் அவசியப்படலாம். அவ்விதமான சந்தர்ப்பங்களில் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட வரையறைக்குள் அவை பயன்படுத்தப்படல் வேண்டும்.
2. சிலரிடம் தொடர்பு கொண்டு முக்கிய விடயங்களை உறுதிப்படுத்த முடியாத சந்தர்ப்பங்களில், எமது பதிப்பாசிரியரை அல்லது சிரேஷ்ட ஆசிரியரை தொடர்பு கொண்டு அவர்களது ஆலோசனை பெறப்படும். இவ்விடயத்தை பிரசுரிப்பது தொடர்பான முடிவை பதிப்பாசிரியர் எடுப்பார்.
3. செய்திகளை உறுதிப்படுத்துவதற்கான அநாமதேய மூலங்களில் இருந்து பெறப்பட்ட விடயங்களை நேரடியாக மேற்கோள் காட்டுவதில்லை.
4. இணங்குகின்ற சந்தர்ப்பங்களில் அநாமதேய மூலங்களை நாம் பயன்படுத்தலாம். இச்சந்தர்ப்பங்களில் மூலம் தொடர்பான விளக்கங்கள் திட்டவட்டமானதாகவும் பாதுகாப்பானதாகவும் இருக்க வேண்டும்.
   - வெறுமனே 'ஒரு மூலம் என்றோ' அல்லது அரசாங்க மூலம் என்றோ குறிப்பிடக்கூடாது.
   - மூலம் தொடர்பாக பொய் கூறக்கூடாது.
   - எத்தனை மூலங்கள் என்பதை மேலோட்டமாக குறிப்பிடுவதில்லை. அவை திட்டவட்டமாக தெரிவிக்கப்படும்.
   - அவற்றை அவற்றின் தன்மைக்கு அதிகமாக முக்கியத்துவம் மிக்கதாகவோ அல்லது நம்பகத்தன்மைகள் கொண்டதாகவோ காட்டுவதில்லை.
   - அச்செயற்பாட்டுடன் நெருங்கிய தொடர்புள்ள மூலங்களை இயலுமானவரை காட்ட முயற்சிப்போம். (உ+ம்) அவ் ஆவணத்தை கண்டவர், பேச்சுவார்த்தையில் ஈடுபட்டவர், அவ்விடயங்களுடன் பரீட்சயமுள்ளவர் போன்றன.
   - குறிப்பிட்ட சம்பவத்தின் மூலத்தின் நலன் எங்குள்ளது என்பதை வாய்ப்புள்ளபோது கண்டறிய வேண்டும். (உ+ம்) இதனால் யாருக்கு நன்மை கிடைக்கிறது. பக்கச்சார்பற்ற அவதானிப்பாளர், எதிர்தரப்பில் உள்ளவர் போன்றன.
   - அவற்றை ஏன் பதிவு செய்யமுடியவில்லை என்ற காரணத்தை வாய்ப்புள்ளபோது தெளிவுபடுத்த வேண்டும்.
5. அந்தரங்கத்தைப் பேணுவது எமது கொள்கையென அநாமதேய மூலங்களுக்கு தெரிவிக்க வேண்டும். அதேவேளையில் இவ்விதமான சம்பவங்களை பிரசுரிப்பதன் பொருட்டு அவை பற்றிய அடையாளங்கள் பதிப்பாசிரியருக்கு தெரிவிக்கப்படல் வேண்டும்.
6. குறிப்பிட்ட தகவல்களை சம்பந்தப்பட்டவர்கள் உண்மையாகவும், நேர்மையாகவும் தெரிவிக்கும் பட்சத்தில் அவர்களைப் பற்றிய (அநாமதேய மூலங்கள்) விபரங்கள் இரகசியமாக பேணப்படும் என்பதை தெரிவிக்க வேண்டும்.
7. அநாமதேய மேற்கோள்கள் மூலம் சிறப்பான விளக்கம், நகைச்சுவை, அவதானம் போன்றன அதிகரிக்கப்படுமெனில் அவற்றை பத்திரிகை நிரலணி, குறிப்புகள், சிறப்புப்பக்கம் போன்றவற்றில் குறிப்பிடலாம். ஆனால், செய்திகளுடன் தொடர்புடைய விடயங்களில் இதனை குறிப்பிடக்கூடாது. மூலம் தொடர்பான விளக்கம் திட்டவட்டமானதாக இருக்கவேண்டும். தனிப்பட்ட தாக்குதல்கள், குரோதங்கள், குற்றச்சாட்டுகள் போன்றவற்றை அநாமதேய மூலங்கள் கொண்டிருப்பின் எந்த சந்தர்ப்பத்திலும் நேரடியாக அவற்றை மேற்கோள் காட்டக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலங்களை குறிப்பிடுவதற்கு முன் கேட்கப்பட வேண்டிய வினாக்கள்

**கெலி மக்பிறைட்டின் மூலம்**

1. இச்செய்தி பொதுசனத்திற்கு மிக முக்கியமானதா? இந்த ஜனநாயகத்தில் பொறுப்புள்ள தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வாசகர்களுக்கும் நோக்கர்களுக்கும் மேலும் உதவியாக இது அமைகிறதா? அல்லது மற்றவர்களை முந்திக்கொண்டு வந்த வெறுமனே ஒரு சூடான செய்தியா?
2. இந்த மூலத்திலிருந்து வந்த தகவல் செய்திக்கு முக்கியமானதா?
3. அவனோ அவளோ விபரிக்கின்ற விடயம் குறித்த நேரடியான புரிதலை இம்மூலவிடயம் கொண்டுள்ளதா? இம்மூலத்தின் நம்பகத்தன்மையைப் பொதுமக்கள் தீர்மானிப்பதற்கு உதவியாக, அப்புரிதலின் தன்மையை உம்மால் அறிக்கையிட முடியுமா? பதிவில் உள்ள அதே தகவலை வழங்கக்கூடிய வேறு யாரேனும் உள்ளனரா?
4. இம்மூலத் தகவலானது ஒரு தனிநபரையோ அல்லது குழுவொன்றையோ இலக்காகக் கொண்டுள்ளதா? அப்படியாயின், அம் மூலச் செய்திக்கு ஏதும் நன்மை கிடைக்கின்றதா? எவ்வாறு? வேறு எவர் நன்மையடைகின்றனர்? எவ்வாறு?
5. அவனது அல்லது அவளது பெயரை வெளியிடுவதால் செய்தி மூலம் எவ்வாறு பாதிப்படையும்? அவர்களுக்கு அவ்விடயத்தை உம்மால் தெளிவுபடுத்த முடியுமா? வேறு எவருக்குத் தீங்கேற்படக்கூடும்

இவ்வினாக்களைக் கேட்டுப் பதிலும் அளித்ததன்பின் மூலத்துடனான உரையாடலைத் தொடர்வது நன்மையானதாயின் கருத்திற் கொள்ளக்கூடிய சில மூலோபாயங்கள் இங்கு தரப்படுகின்றன.

- பதிவிற்கப்பால் செல்ல விரும்புவது ஏனென மூலச் செய்திக்குரியவரை கேளுங்கள்.
- இத்தகவல் வெளியிடப்பட்டால் செய்தி அறையில் உள்ள குறைந்த பட்சம் ஒரு செய்தியாசிரியருக்காவது அவரது பெயர் வெளியிடப்படும் என்று மூலச் செய்தியாளரை எச்சரியுங்கள். நீதிமன்றில் தோன்ற ஆணை அனுப்பப்பட்டால் அவர் முன்வருவாரா என அவரைக் கேளுங்கள்
- அவர் அளித்த தகவலைக் குறைந்த பட்சம் உறுதிப்படுத்தியாவது பதிவுசெய்யக்கூடிய வேறு சிலரின் பெயர்களை முன் மொழியுமாறு மூலச் செய்தியாளரைக் கேளுங்கள்.
- பதிவில் உள்ள ஒவ்வொரு உரையாடலையும் நிறைவு செய்க. ஒவ்வொரு தகவலையும் மீள் பரிசீலனை செய்க. "இது பதிவில் இருக்கலாமா? இது எப்படி?"
- இவையனைத்தையும், மேற்கோள்காட்டப்படுவதற்கு மூலச் செய்தியாளர் காட்டும் எதிர்ப்பு இல்லாமற் செய்துவிடும்.

(மெக் பிறைட், 2004)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர்கள் கேட்கும் கேள்விகளது நம்பகத்தன்மை




செய்திகளில் இடம்பெறும் அநாமதேயம் தொடர்பாக வாசகர்களது மனப்பாங்கினை அறிந்துகொள்வதற்காக எசோசியேட் பிரஸ் மற்றும் எசோசியேட் பிரஸ் முகாமைத்துவ பதிப்பாசிரியர்கள் அமைப்பு ஆகியன ஆய்வொன்றினை மேற்கொண்டன. செய்திகளில் அநாமதேயம் தொனிக்கின்ற பொழுது குறைவான நம்பகத்தன்மையையே அது ஏற்படுத்துவதாக 44 வீதமானவர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்காவில் உள்ள 42 மாநிலங்களைச் சேர்ந்த 1611 வாசகர்களை கருத்துக்கள் APME மூலமாக தொகுத்தாராயப்பட்டது. செய்திகள் இடம்பெறும் அநாமதேயம் எவ்வாறு நம்பகத்தன்மையை பாதிக்கிறது என இவர்களிடம் கேட்கப்பட்டது. ஒரு விடயத்தை சரியாக உறுதிப்படுத்துவதே ஒரு நிருபர் மேற்கொள்ளக்கூடிய மிக முக்கியமான விடயம் எனவும், எனவே சரியான நம்பகமான அறிக்கையின் நிமித்தம் பொதுமக்கள் காத்திருக்கத் தயாராக இருக்கிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

"வழங்கப்பட்ட தகவல்கள் சுயேச்சையாக ஊர்ஜிதப்படுத்தப்பட முடியாவிட்டால் அவற்றைப் பயன்படுத்த முடியாது. பயன்படுத்தவும் கூடாது. அநாமதேய மூலங்கள் தரும் செய்திகளை ஊர்ஜிதப்படுத்தப் பயன்படுத்தப்படும் கட்டளைத் தரங்கள் திறந்த மூலச் செய்திகளுக்கும் பயன்படுத்தப்படும் கட்டளைத் தரங்களை விட உயர்வானதாக இருக்க வேண்டும். ஏனெனில் இதனுடன் தொடர்புடைய இடராபமும் அதிகம்" (பிட்ஸ், 2005) என ஒரு வாசகர் குறிப்பிட்டார்.

ஊடகங்களின் நம்பகத்தன்மைதான் ஆபத்துச் சூழ்ந்ததாயுள்ளது என வாசகர்கள் எச்சரிக்கை செய்தனர். கடந்த காலத்தில் எவ்வளவு நம்பத்தகுந்ததாக ஒரு பத்திரிகை இருந்ததோ அந்த அளவுக்கு அநாமதேயம் குறித்த அப்பத்திரிகையின் தீர்ப்பை வாசகர் ஏற்பர். ஆனால், தவறான மூலத்தை நீங்கள் நம்பினீர்களானால் பொதுமக்கள் உங்களை நம்புவதை நிறுத்திக் கொள்வார்கள். (பிட்ஸ், 2005)

மேலும் வழிகாட்டலுக்கு பிரிவு 10இல் தரப்பட்ட "சிட்னி மோர்னிங் ஹெரல்ட்" வழங்கும் மூலங்களைப் பயன்படுத்துவதற்கான விதிகளைப் பார்க்க.

***ஒவ்வொரு அநாமதேய மூலமும் செய்தித்துறையின் நம்பகத் தன்மையைப் பலவீனப்படுத்துகின்றன. இறுதியில், பொது மக்களின் நன்மைக்காகப் பொதுமக்களின் நம்பிக்கையை இழப்பது மேலானதா என உங்களை நீங்களே கேட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்.***

## முரண்பாடு மற்றும் மன அதிர்ச்சி பற்றி அறிக்கையிடல்

சுனாமி போன்றதொரு பேரனர்த்தம் பற்றிய தரமான செய்தியானது நல்ல அறிக்கையாளர் ஒருவரை அல்லது புகைப்படக்காரரைச் சம்பவ இடத்திற்கு வரவழைப்பதை விடவும் மேலானது.

செய்தித் துறைக்கும் மன வடுவிற்குமான "டார்ட்" நிலையமானது உங்கள் சமூகத்தின் மன வடு நிகழ்வுகளை உள்ளடக்கிய உதவிக் குறிப்புகளை இவ்வாறு தருகிறது :

"மனவதிர்ச்சி தரும் நிகழ்வொன்று பற்றிய உமது செய்திச் செயலெல்லை மற்றும் நீர் பயன்படுத்தும் தொனி என்பன உமது வாசகர் எல்லை, பார்ப்போர் மற்றும் கேட்போர் ஆகியோர் மீது ஒரு தாக்கத்தைக் கொண்டிருக்கும் என்பதை உணர்ந்துகொள்ளும்.

பாதிக்கப்பட்டோரின் வாழ்வு மற்றும் அவை உமது சமூகத்தில் ஏற்படுத்தும் விளைவு என்பன பற்றிய கதைகளை எழுதும்

மக்கள் என்ன நினைக்கின்றார்கள்; குறிப்பாகத் தைரியமூட்டும் வார்த்தைகள் என்பவை குறித்துப் பேசும் அரங்குகளை அமைத்து வழங்குக. மக்கள் எவ்வாறு உதவலாம்; எவ்வாறு அவர்கள் உதவியுள்ளனர் என்ற வழிவகைகளை நிரற்படுத்துக.

செயல்கள் உள்ளிட்டதாக மக்களுக்கு உதவும் வழிகள் எவையெனக் கண்டு மீட்டெழு செயன்முறைக் காலம் முழுவதும் அவை பற்றி அறிக்கை செய்க. இது சமூகத்திற்கு நம்பிக்கையை ஏற்படுத்தலாம்.

இக்கேள்விகளை எப்போதும் கேட்டுக் கொள்க; பொதுமக்கள் அறிய வேண்டியவை என்ன? செய்திச் சேகரிப்பை எந்த அளவிற்குச் செய்தால் அது அதிகமானது? பொதுமக்கள் அக்கறை கொள்ளாதபோது ஓர் ஊடகமானது எப்போது சம்பவம் ஒன்றைப் பற்றி அதீத அக்கறை காட்டுகிறது? கூட்டுக்கொலை அல்லது பேரழிவு ஒன்றை விட ஒரு சமூகம் அதிகம் மேலானது. ஊடகச் செயலெல்லை அதனைப் பிரதிபலித்தல் வேண்டும்.

(ஹைற் மற்றும் ஸ்மித், 2004)

### சூழமைவுச் சோதனைப் பட்டியல்

- முரண்பாட்டின் வரலாற்றை ஆராய்ச்சி செய்க
- தனிநபர் வன்முறைச்செயல்கள் மீது கவனம் செலுத்துவதைத் தவிர்த்துப் பரந்த காட்சிப் பரப்பினைச் சித்திரிக்க முயலுக.
- ஒவ்வொரு தரப்பும் இழக்க வேண்டியதென்ன, பெற்றுக்கொள்ள வேண்டியதென்ன என்பதைப் பரிசோதிக்க.
- பாதிக்கப்பட்ட பொதுமக்களின் கண்ணோட்டத்தை வழங்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. பதிப்பாசிரியர் சுதந்திரம்



*வலை வீசுதல் : பதிப்பாசிரியர் சுதந்திரம் தொடர்பாக தம்மால் கேட்கப்படும், வாசிக்கப்படும் செய்திகள் தொடர்பாக நம்பகத்தன்மையை ஏற்படுத்தும். உரிமையாளரின் கண்ணாடியினூடாக செய்திகளை தேர்ந்தெடுத்துக் கொள்ளாதிருப்பதற்கான நெறிமுறை செய்தி ஊடகத்திற்குள்ளது.*

தமது பணியில் தலையீடுகள் ஏற்பட்டமை குறித்துப் பெரும்பாலான இலங்கை ஊடகவியலாளர்கள் பல சந்தர்ப்பங்களைக் காட்ட இயலும். ஒன்றில் தாம் எழுதிய சம்பவம் வெளிவரவில்லை அல்லது அது மாற்றங்களோடு வந்தது. அல்லது குறித்த செய்தி வெளிவரும் பட்சத்தில் அவர்கள் அச்சுறுத்தலுக்குள்ளாகினர். பெரும்பாலும் இத் தலையீடுகள் நிகழ்வதற்குக் காரணம் (அரசியல்வாதிகள் மற்றும் ஆர்வமுள்ள குழுக்கள் போன்ற) வெளிநபர்கள் ஊடகவியலாளரை அல்லது பதிப்பாசிரியரை அணுகுவதால், அல்லது உரிமையாளர் / வெளியீட்டாளர் பதிப்பாசிரியர் பணியில் தலையிடுவதால் ஆகும்.

பதிப்பாசிரியர் சுதந்திரம் குறித்து சாசனமொன்று இருப்பது இப்பிரச்சினைக்கொரு தீர்வாகும். ஆனால், பதிப்பாசிரியர் சுதந்திரத்திற்கெதிரான எந்தவொரு சவால் ஏற்பட்டாலும், தமது பணியில் ஏற்படும் தலையீட்டுச் சம்பவங்களுக்கெதிராக ஊடகவியலாளர்கள் ஒன்று திரண்டு போராடுவது அவசியமாகிறது. ஊடகவியலாளர்கள் ஒன்று திரண்டு பணியாற்றினால் மட்டுமே தலையீடுகளுக்கெதிரான எந்தவொரு நிலைப் பாட்டையும் எடுக்க முடியும்.

பதிப்பாசிரியர் சுதந்திரத்தின் சாசனம் என்பது ஊடகமொன்றின் பதிப்பாசிரியர் பணியாட்தொகுதிக்கும் அதன் உரிமையாளருக்கு-மிடையேயான ஓர் எழுத்து மூல உடன்படிக்கையாகும். செய்தி மற்றும் அபிப்பிராயம் என்பவற்றின் மீதான அதிகாரத்திலிருந்து உரிமையாளர் அகற்றப்பட்டிருக்கும் வகையில் அவர்கள் தமது உறவு நிலையை இணைந்து வரையறை செய்து கொள்ளுகின்றனர். உரிமையாளரின் தலையீடற்ற பணியாட்தொகுதியினரின் சுதந்திரமானது, ஊடகத்துறையின் உயர்தரத்தினைக் குறியாகக் கொண்டு செயற்படும் பொருட்டு அவர்களுக்கு வழங்கப்பட எதிர்பார்க்கப்படும் சுதந்திரமாகும். சாசனங்கள் என்பன உரிமையாளரின் கருத்துக்கள் அல்லது நலன்கள் மட்டில் ஊடகத்துறை ஒரு சாய்வு நிலையைக் கொண்டுள்ளதோ என்ற தோற்றப்பாட்டினை அல்லது யதார்த்தத்தைத் தவிர்ப்பதை நோக்கமாகக் கொண்டவை.

## சாசனங்களை ஏன் கொண்டிருக்க வேண்டும்?

வெறுமனே ஒரு வியாபாரத்தைக் காட்டிலும் ஊடக ஆதனங்கள் அதிக தனித்துவமானவையாயிருப்பதால் பதிப்பாசிரியர் சுதந்திரத்திற்கான சாசனங்களை நாம் கொண்டிருக்கிறோம். செயற்பாடுடைய ஒரு ஜனநாயகத்தில் ஊடகங்களின் உயிரோட்டமான வகிபாகத்தின் காரணமாக ஆதாய நோக்கங்களின் ஆதிக்கத்திலிருந்து அது விடுபட்டதாக இருத்தல் வேண்டும். ஊடக ஆதனமொன்றின் வர்த்தக நலனுக்கு மெய்யான தோற்றப்பாடுடைய சுதந்திரம் மிக முக்கியமாக இருப்பதால் சாசனங்கள் வர்த்தக ரீதியான அர்த்தத்தையும் தருகின்றன. இறுதியாக, பதிப்பாசிரியர் சுதந்திரம் தேவைப்படுவது ஏனெனில், நம்பிக்கை என்பது போதுமானதல்ல என்பதால்.

தமது அதிகாரம் இன்னதுதான் என ஊடக உரிமையாளர்கள் ஒப்புக்கொண்டிருப்பினும் இவ்வதிகாரத்தை அவர்கள் துஷ்பிரயோகம் செய்யமாட்டார்கள் என எப்போதும் நம்புவதற்கில்லை. எனவே உரிமையாளர்களின் அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கெதிரான பெரும் அக்கறையுடனான பாதுகாப்பு ஏற்பாடுகளின் பிரசுரிக்கப்பட்ட பிரகடனமாக இச்சாசனம் திகழ்கிறது. (செட்விக் 1991)

## சாசனங்கள் செய்வதென்ன

சாசனங்கள் வழமையாக ஏன் சாசனமொன்று முதலிடத்தில் இருக்க வேண்டும் என்பதை விளக்குகின்ற நெறிமுறைசார் கூற்று ஒன்றைக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக "பதிப்பாசிரியர் சுதந்திரத்திற்கான நீண்டகால அடிப்படைக் கோட்பாட்டிற்கான தனது உறுதிப்பாட்டைப் பகிரங்கமாக உரிமையாளர் ஒருவர் பிரகடனம் செய்கிறார். அப்போது அந்த உரிமையாளர், ஊடகவியலாளர்களும், கலைஞர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படப்பிடிப்பாளர்களும் நாடு, நகரம், தேசம், உலகம் ஆகியவற்றின் விவகாரங்களை முழுமையாகவும், நியாயபூர்வமாகவும், எந்த வர்த்தக, அரசியல் அல்லது எந்த உரிமையாளர்களோ, பங்காளர்களோ அல்லது சபை உறுப்பினர்களோ உள்ளிட்ட எந்தத் தனிப்பட்ட நபர்களின் நலன்களையோ பொருட்படுத்தாமலும் பதிவுசெய்யவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றார்கள்."

ஒரு சாசனமானது, உரிமையாளர்களால் அல்லது வேறு நலன்சார் குழுக்களால் அழுத்தத்திற்குள்ளாக்கப்படும் பதிப்பாசிரியர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதில் குறியாயிருக்க வேண்டும். சிலவேளைகளில் பதிப்பாசிரியருக்கும் உரிமையாளர்களுக்குமிடையே மோதல் தவிர்ப்பை வழங்குவதற்காக ஏற்படுத்தப்படும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை இப்பாதுகாப்பை வழங்குகின்றது. பதிப்பாசிரியர் உரிமையாளரின் கைப்பொம்மையாக மாறாதிருப்பதை உறுதிப்படுத்துவதிலும் சாசனம் குறியாயிருக்கின்றது. இம்மாதிரியான பதிப்பாசிரியர்களிடமிருந்து பணியாட்தொகுதியினரும் வாசகர்களும் பாதுகாக்கப்படுவது அவசியம். பதிப்பாசிரியராக யார் நியமிக்கப்பட வேண்டும் என்பதில் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் பணியாட்தொகுதியினருடன் ஆலோசனை கலந்து பிணக்குத் தீர்வுக்கான நடைமுறையொன்றை உருவாக்குதல் மற்றும் பதிப்பாசிரியரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான செயன்முறையொன்றைக் கொண்டிருத்தல் என்பவற்றில் பணியாட்தொகுதியினருக்கு கருத்துரைக்கும் உரிமையை வழங்குவதன் மூலம் இதனை அடையப் பெறலாம்.

ஊடக அலுவலர்களுக்கும் வரவுசெலவுத் திட்டமிடுகையின் தேவைப்பாடு இருப்பதன் காரணத்தால், உரிமையாளர்களே இவ்வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிப்பதோடு அதன் நிதி நெருக்கடியையும் ஏற்க வேண்டியவர்களாவர் என்பதை ஒரு சாசனமானது தெளிவாக இனங்காணல் வேண்டும். ஆனால், வரவுசெலவுத் திட்டம் தயாரானதும் நிதி எவ்வாறு செலவிடப்பட வேண்டும் என்பது பதிப்பாசிரியரைப் பொறுத்தது.

பிணக்குகளைத் தீர்ப்பதற்கான வழிமுறையமைப்பொன்று இருத்தல் வேண்டும். கம்பனியின் அமைப்பு அகவிதிகளுக்கான உசாவுகைகள்; ஒப்பந்தச்சட்டம்; கைத்தொழிற்சட்டம் அல்லது வேண்டுமென்றே ஏற்படுத்திய பிணக்குத்தீர்வு முறைமை என்பவற்றை இது உள்ளடக்கலாம்.

## சாசனங்கள் எதைச் செய்வதில்லை?

பதிப்பாசிரியர் சுதந்திரம் பற்றிய சாசனங்கள் நிறைவானவையல்ல. உரிமையாளர், சாசனத்தில் கைச்சாத்திடலாம் ; ஆனால் அதன் நிபந்தனைகள் அனைத்தையும் அவர் ஏற்றுக்கொள்கிறார் என்பது இதன் அர்த்தமல்ல. ஆயினும், ஒரு சாசனமானது சுதந்திரமான ஊடகத்திற்கு ஆதரவளிக்கின்ற ஒரு வழிமுறையமைப்பாகும். அத்துடன், அவை துல்லியமான, சமநிலையிலான, நியாயமான மற்றும் நேர்மையான அறிக்கையிடலை முன்னேற்றுவதற்கான ஒரு சட்டகத்தை அவை வழங்கவே செய்கின்றன.

## அவுஸ்திரேலிய ஊடகவியலாளர் சங்கத்தின் மாதிரி சாசனம்

### *முகப்புரை*

அவுஸ்திரேலிய ஊடகவியலாளர் சங்கத்தினால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் உரிமையாளரும் பதிப்பாசிரியர் பணியாட்தொகுதியினரும் உடன்படுவதாவது : ஊடகமானது தனித்துவமான ஓர் நடவடிக்கை அது சமூகத்தின் மட்டிலான பொறுப்புக்களை அவர்கள் மீது விதிக்கிறது.

துல்லியமான, நடுநிலையான மற்றும் கூடுமானவரை முழுமையான செய்தியையும் மற்றும் சமூகத்தினுள் காணப்படும் பல்வேறு அபிப்பிராயங்களைப் பிரதிபலிக்கும் கருத்துரையையும் வழங்குவது அவர் தம் பிரதான பொறுப்பாகும். தன்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றினால் மட்டுமே பத்திரிகையொன்றிற்கிருக்கும் கௌரவத்திற்கும் செல்வாக்கிற்கும் உரிமையாளரும் பணியாட்தொகுதியினரும் முறைப்படி உரிமை கோரலாம். பொறுப்புக்களை நிறைவேற்றுபவர்கள் எனப் புகழ்பெற்றிருத்தல் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் முனைப்புடன் ஈடுபட்டிருக்கக் காணப்படல் என்பவற்றிலேயே வர்த்தக ரீதியான வெற்றி தங்கியுள்ளது.

அதன் பிரகாரம், பதிப்பாசிரியர் சுதந்திரத்தின் உண்மைத் தன்மை மற்றும் தோற்றப்பாடு என்பவற்றைப் பாதுகாக்கவெனத் திட்டமிடப்பட்ட இச்சாசனத்திற்கு அமைந்தொழுக உரிமையாளரும் பதிப்பாசிரியப் பணியாட்தொகுதியினரும் ஒப்புக் கொள்கின்றனர். உரிமையாளர் இச் சாசனத்தைக் கம்பனியின் அமைப்பு அக விதிகளுடன் கூட்டிணைக்க இணங்குகின்றார்.

### *ஆசிரியர் பீடத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள்*

கம்பனியின் பணிப்பாளர் சபைக்குப் புறம்பாக ஐந்து ஆசிரியர்பீட நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையொன்றை உரிமையாளர் நிறுவுவார். பேச்சுவார்த்தை மூலமாக உடன்பாடு காணப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் உரிமையாளருக்கும் ஆசிரியர்பீட பணியாட்தொகுதியினரும் ஏற்புடையவர்களாகக் கருதப்படுவர். நம்பிக்கைப் பொறுப்பாளர்களால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் உரிமையாளர், ஆசிரியர்பீட பணியாட்தொகுதியினர் மற்றும் சமூகம் ஆகியோரின் நம்பிக்கையைப் பெற்றிருப்பதை உறுதிப்படுத்தும் முயற்சியாக இவர்களின் தெரிவானது திறமை, அனுபவம் மற்றும் சுயாதீனம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

நியமனங்கள் மூன்று வருடங்களுக்காகும். ஒவ்வொரு நம்பிக்கைப் பொறுப்பாளரது வாக்கும் சமமான வாக்குரிமைகளை கொண்டிருப்பதோடு எடுக்கப்படும் தீர்மானங்களை நிறைவேற்றப்படுதற்கு ஆதரவாகக் குறைந்தபட்சம் மூன்று வாக்குகள் தேவையாகும்.

ஆசிரியர்பீட நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் சபையின் பிரதான செயற்பாடு யாதெனில் உரிமையாளருக்கும் யாரேனும் ஒரு பதிப்பாசிரியருக்குமிடையே எழும் பிணக்கினைத் தீர்த்து வைப்பதாகும். பேச்சுவார்த்தை மூலம் தமது பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள இயலாத இவ்விருவருள் யாரேனும் ஒருவர் நம்பிக்கைப் பொறுப்பாளர்களை அணுகித் தமது பிணக்கினை மத்தியஸ்தம் செய்யக் கோரலாம்.

நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் தீர்மானமே இறுதியானதென்றும், தீர்மானமும் அதற்கான காரணங்களும் உரிய பத்திரத்தில் முழுமையாக வெளியிடப்படும் என்றும் உரிமையாளரும் பதிப்பாசிரியர்களும் உடன்படுகின்றனர்.

### *பதிப்பாசிரியர்கள்*

பதிப்பாசிரியர்களின் நியமனத்திற்கும் பணிநீக்கத்திற்கும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் அங்கீகாரம் தேவை.

பதிப்பாசிரியர் செலவினம், பதிப்பு மற்றும் விளம்பரம், இடப்பரப்பு என்பவற்றுக்கான எந்தவொரு வரவு செலவு ஒதுக்கீட்டைத் தீர்மானிக்கும் போதும் பதிப்பாசிரியருடன் பூரண கலந்தாலோசனை செய்யப்படல் வேண்டும். அத்தகைய வரவு செலவுத்திட்டத்தின் கீழ் மட்டுமே பதிப்பாசிரியர் பதிப்பின் உள்ளடக்கத்தின் மீது தனியே கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பார்.

சம்பந்தப்பட்ட விடயம் அரசியலோ, நிதியோ அல்லது எதுவாயிருப்பினும் உரிமையாளரின் நலன்களுடனோ அல்லது அபிப்பிராயங்களுடனோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ முரண்படக்கூடிய செய்தியை அல்லது அபிப்பிராயத்தை அறிக்கையிடுவதில் எந்தப் பதிப்பாசிரியர் மீதும் கட்டுப்பாடோ அல்லது நெறியாள்கையோ விதிக்கப்பட மாட்டாது.

பதிப்பாசிரியர் அல்லது அவரின் பேராளர்கள் மட்டுமே ஊடகவியலாளர்களை, ஓவியர்களை அல்லது படப்பிடிப்பாளர்களை நியமிக்கலாம், அறிவுறுத்தலாம், பணிக்கலாம் அல்லது பணிநீக்கம் செய்யலாம்.

### *நெறிமுறைகள்*

உரிமையாளர் ஏஜேஏ (AJA) நெறிமுறைக் கோவையை ஏற்றொழுக இசைவிணக்கம் தெரிவிக்கின்றார். AJA நெறிமுறைக் கோவையைத் தவிர வேறெந்த நெறிக்கோவையின் படியும் ஒழுகுமாறு வேலை கொள்வோர் எவரும் உறுப்பினர் ஒருவரைத் தேவைப்படுத்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. பொது மக்களை ஈடுபடுத்தல்

*"ஜனநாயகம் தொடங்குவது பிரஜைகளோடு. உண்மையில் சொல்லப்போனால் போதியளவு நன்கு தகவலூட்டப்பட்ட பிரஜைகளின்றி உண்மையான ஜனநாயகம் இருக்க முடியாது. எனவே, தகவலும் தொடர்பாடலும் ஜனநாயகத்தை முழுமைப்படுத்துகின்றன. அதே சான்றின் அடிப்படையில் தொடர்பாடலானது ஜனநாயகப்படுத்தலுக்கான முன்தேவைப்பாடாக இருக்கிறது." - (ஜோசப், 2005)*

பீயூவில் ஊடகத்துறைக்கான (Pew Centre) (பியூ சென்டர்) இல் நிறைவேற்றுப் பணிப்பாளராக இருக்கும் ஜோன் ஷ்.'.வ்வர் என்பவர் வெகுசன ஊடகத்துறையில் ஈடுபடுத்துவதற்கென விருத்தி செய்யப்பட்டுவரும் புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்காணித்து வருகின்றார். சில கருத்தியல்கள் ஊடக இணையத்தளங்களில் வரும் சில எளிய விளையாட்டுக்கள் ஆகும். இவை தொடர் உரை வடிவற்ற விதத்தில் பொதுமக்களை ஈடுபடுத்தும் ஊடக செய்திகளையும் செய்திப் பயிற்சிகளையும் வழங்கும் எளிய விளையாட்டுக்களாகும். ஏனைய கருத்தியல்கள் 'ஓ மை நியூஸ்' எனும் தென்கொரிய ஊடக இணையத்தளத்தின் உதாரணத்தைப் பின்பற்றுவதுடன் பிரஜைகள் பங்கேற்புடனான ஊடகத்துறையையும் ஊக்குவிக்கின்றன. (ஷ்.'.வ்வர் 2005)

பாரம்பரிய ஊடகத்துறை மரபொழுங்குகள் சிலர் மட்டில் நன்கு ஒத்துப்போவதில்லையென, மே மாதம் 2005இல் உலக ஊடக கழகத்திற்கு ஆற்றிய உரையொன்றில் ஷா.'.வ்வர் கூறினார். நேரடி ஊடக சேவையில் பொதுமக்களின் ஈடுபாட்டைப் பெற்றுக்கொள்வது குறித்து ஷா.'.வ்வர் தரும் ஓர் உதாரணமானது, அமெரிக்காவின் சிஞ்சினாட்டி தொலைக்காட்சி நிலையமொன்றோடு சம்பந்தப்படுகிறது. உள்ளூர் ஆற்றோரமாகவுள்ள ஓர் கண்ணறாவியை நிலையத்தின் இணையத்தளத்தைப் பயன்படுத்திப் பார்வையில் பதிய வைப்பதற்கான வழிகளை ஆலோசனையாகத் தருவதற்குப் பிரஜைகளை அழைக்குமாறு அந்த நிலையம் உள்ளூர்ச் சமூகத்தைக் கேட்டுக்கொண்டது. பொத்தானை அழுத்திப் புதியதொரு மலர்த்தாவரத்திற்கு நீங்கள் பங்களிக்க விரும்புவதாகக் கூறுகிறீர்கள். இதோ 400 டொலர்கள் உங்களுக்குத் தேவை ஒரு பூங்கா வாங்க, எனவே இதோ 750 டொலர்கள் பாலத்திற்கு நாவல் நிறம் பூசுவதற்கு நீங்கள் உதவ விரும்பினால் இங்கே முதலீடு செய்யுங்கள். அதிக எண்ணிக்கையிலான பிரஜைகள் பதிலளித்தார்கள். பிரச்சினையைத் தீர்க்க உதவுவதற்கு இது அவர்களுக்கு வலுவூட்டியது" (ஷா.'.வ்வர் 2005)

தனது செய்திச் சேவையின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகையும் ஒரு தொடரான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. வழுக்களைக் குறைத்து உள்ளதை உள்ளவாறாகக் கூறுவதைப் பின்தொடர்ந்து செய்திக்கும் அபிப்பிராயத்திற்குமிடையே தெளிவான வேறுபாட்டைக் காட்டும் முயற்சியாக அநாமதேயச் செய்தி மூலங்களின் பயன்பாட்டை மட்டுப்படுத்தி வருகிறது. தனது செயற்பாடுகளையும் தீர்மானங்களையும் கூட மேலும் அதிக வெளிப்படைத்தன்மை கொண்டதாக வாசகர்களுக்குக் காட்டி வருவதுடன், நேர்காணல்களின் எழுத்துருவாக்கங்களைத் தனது இணையத்தளத்திலும் வெளியிட்டு வருகின்றது. வாசகர்கள் தமது கருத்துக்களைச் செய்தி அறிக்கையாளர்களுக்கும் பதிப்பாசிரியர்களுக்கும் மின்னஞ்சல் செய்வதையும் அப்பத்திரிகை இலகுவாக்கி வருகின்றது. அதேபோல் 'த வோஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையும் வாசகர்கள் செய்தி அறிக்கையாளர்களைத் தொடர்பு கொள்வதை ஊக்குவிக்கின்றது. பிரித்தானியாவின் "ரைம்ஸ்" செய்திப் பத்திரிகையானது வாசகர்கள் தமது ஆக்கங்களை எவ்வாறு தயாரிப்பது என்பதைத் தெரிந்து கொள்ளத் தமது பிரிவுச் செய்தியறிக்கையாளர்களைத் தொடர்பு கொள்வதை அனுமதிக்கிறது.

## ஈடுபாடு கொள்ளல்

இத்தகைய கருவிகளும் வாசகர்களுக்கு அறிவூட்டுவதில் உதவி புரியலாம் என ஷா.'.வ்வர் கூறுகிறார். சான்பிரான்சிஸ்கோவில் உள்ள ஒரு வானொலி நிலையம் இதைச் செய்துகாட்டியது. "அமெரிக்க ஐக்கிய நாடுகள் பொது சுகாதார சேவையொன்றைக் கொண்டிருக்க வேண்டுமா?" போன்ற பெரிய விடயங்களை நிலையம் எடுத்துக் கொண்டது. நீங்கள் உடன்படுகின்றீர்களா இல்லையா என்ற கேள்விக்கு ஆம் அல்லது இல்லை எனப் பதிலளித்தீர்கள். ஆம் எனப் பதிலளித்திருந்தால் "நிச்சயமாகவா?" எனக் கேட்டு ஓர் எதிர் விவாதமொன்றையும் முன்வைக்கிறது. தொடர்ந்தும் ஆம் என்றே நீங்கள் பதிலளித்தால் "இதை நீங்கள் அறிந்திருந்தால் என்ன?" எனக் கேட்கிறது. 'இல்லை' என்ற பொத்தானை அழுத்தினால் இவ்விடயம் குறித்த எதிரான பார்வையினை வழங்குகிறது (மேற்கோள் காட்டுக) இப்பயிற்சியானது அறிக்கை செய்தலுக்கான புதியதொரு நெறியுதாரணத்தை வழங்கியது. ஒரு பக்கச் செய்தியை சொல்ல வேண்டிய இடத்தில் அச்செய்தியின் மறுபக்கத்தையும் அடுத்ததாகச் சொல்லல். உண்மையில் அச்செய்தியின் எட்டு அல்லது ஒன்பது பக்கத்து தகவல்களைக் கூறியதுடன் தகவலை முழுமையாக அறிக்கையிட்டது. (மேற்கோள் நிறைவு) இவையனைத்தும் பங்கேற்புடனான செய்தி அனுபவங்களாக, உரைநடைக்கதைகளாக அவை இருக்கவேண்டிய அவசியமில்லை.

## நேரில்கண்ட செய்தி

வலை பதிகைகளின (weblogs) (blogs) எழுச்சி என்பது ஊடக இணையத்தளங்களில் குறிப்பாகப் பத்திரிகைகளில் மக்களை ஈடுபாடு கொள்ளச் செய்வதற்கான ஒரு புதிய வழிமுறையாகும். புதினப் பத்திரிகைகள் இப்போது வெவ்வேறு கதைகளையும் பிரச்சினைகளையும் உள்ளடக்குகின்ற பன்னிரண்டிற்கும் மேற்பட்ட வலை பதிகைகளை வழங்கித் தமது கருத்துக்களைத் தெரிவிக்குமாறு வாசகர்களை அழைக்கின்றது. குறிப்பிட்ட வினாக்களுக்கு விடையளிக்க அல்லது பின்புலத் தகவலைச் சேர்த்துக்கொள்ளச் செய்தி அறிக்கையாளர்கள் வாசகர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருக்க முடியும்.

சுனாமி மற்றும் ஏனைய பிரதான நிகழ்வுகள் விடயத்தில் நோக்கப்பட்டவாறு, செய்திக் கதைகளில் பயன்படுத்தவென தமது புகைப்படங்கள், நேரில்கண்ட சாட்சியங்கள், ஏன் - செல்லிடத் தொலைபேசி மூலம் பிடிக்கப்பட்ட வீடியோக் காட்சிகள் என்பவற்றைக் கூடத் தமக்கு அனுப்பிவைக்குமாறு ஊடக அமைப்புகள் தமது நேயர்களுக்கு இப்போது அழைப்பு விடுக்கின்றன. அதேபோல், அமெரிக்காவின் கத்தரீனா சூறாவளியால் ஏற்பட்ட அழிவு மற்றும் லண்டனின் பயங்கரக் குண்டு வெடிப்புக்கள் போன்றவை, தமது சொந்த விவரிப்புக்களை அடிப்படையாகக் கொண்ட செய்தியறிக்கைகள் மற்றும் புகைப்படங்கள் என்பவற்றை வலை பதிகைகள் செய்வதற்கு உந்து சக்திகளாக விளங்கின.

டேவிட் ஹிகின்ஸ் என்பவர், 'வோக்லி மகசின் - இன்சைட் தி ஒஸ்ட்ரேலியன் மீடியா' வில் எழுதுகையில், "வெகுசன ஊடகத்தின் விரிவான பரப்பெல்லைக்குள் பொருந்தி வராத விடயத்தலைப்புக்களையே வலைப்பதிகையாளர்கள் தனிச் செறிவூட்டுகின்றனர். பற்றற்றிருக்க வேண்டுமெனக் கற்பிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் உணர்ச்சி வசப்பட்டு எழுத முனைகின்றனர்; அந்த உணர்ச்சி நம்பிக்கையை அதிகரிக்கின்றது. அவர்கள் தம்மைத்தாமே திருத்திக்கொள்ளும் வலைப் பதிகையாளர்கள்; அத்துடன், அவர்களின் வாசகர்களும் ஒருவர் ஒருவருடைய பிழைகளைத் திருத்திக் கொள்ளத் தகுதி பெறுகின்றனர். தணிக்கை முறையாலோ அல்லது உரிமையாளரின் கருத்துக்களாலோ அவர்கள் கட்டுப்படுத்தப்படுவதில்லை. அத்துடன், தனியொரு ஊடகத்தின் வெளியீடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்க இயலாத அளவு கொண்ட ஒரு பன்மைத்துவத்தை அவை வழங்குகின்றன. (ஹிகன்ஸ், 2005)

இந்தப் பிரஜைகள் ஊடகத்துறை பல கரிசனைகளைக் கொண்டதாயுள்ளது. ஆகவே, ஒரு கலை என்ற வகையில் ஊடகத்துறை மீது பிரஜைகள் ஊடகத்துறையின் தாக்கம் யாது? ஒரு தொழில் என்ற வகையில் அதன் தாக்கம் யாது? முதல் கேள்வி திறந்ததாகவும் மூடியதாகவும் தோன்றுகிறது. பிரஜை ஊடகவியலாளர்களுக்கு நெறிமுறைக் கோவை கிடையாது. பயிற்சி கிடையாது, வகைப் பொறுப்புக் கிடையாது, வரவு செலவுத்திட்டம் கிடையாது, பதிப்பாசிரியத்திற்கான நியமங்கள் கிடையாது, கைத்தொழில்சார் கண்காணிப்புக் கிடையாது. அத்துடன் விளம்பரத்திற்கும் ஆசிரியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*ஓட்டிச் செல்லல் வாசகர்கள் மற்றும் கேட்போர்களை மேலும் மேலும் தொடர்புபடுத்திக் கொள்வதன் மூலம் ஊடகத்திற்குள் பிரவேசித்தல் பொதுமக்களுக்கு இலகுவாக அமைகின்றது. அது பொதுமக்கள் சேவை ஊடகவியலின் முக்கிய அம்சமொன்றாகும். இதனை வாசகர் கருத்துக்களை கேட்டல், சமுதாய விளம்பரங்கள் மூலமோ அல்லது பிரஜைகள் ஊடகவியல் மூலமோ மேற்கொள்ள முடியும். ஆசிரியருடன் கதைப்பதற்கு இலகுவான வழியை அறிமுகப்படுத்துவதனூடாகவோ அது வாசகர்களையும் கேட்போர்களையும் மேலும் தொடர்புபடுத்திக் கொள்வதற்கும் வழி சமைக்கும்.*

தலையங்கத்திற்குமிடையே வேறுபாடும் கிடையாது. சுருக்கமாக, தொழில்சார் ஊடகத்துறையைச் சீரழித்து வலைப்பதிகை வளர்ச்சியுற்றால், பத்திரிகைக் கலையினதும் சமுதாயத்தினதும் நிலை மேலும் மோசமாகும். வரலாற்றின் முதல் வரைவே வழுக்களாலும், உள்ளுணர்வுச் சார்புடைமையாலும் மோசமான எழுத்துக் கூட்டங்களாலும் மற்றும் கருத்துரைப்புப் பண மீட்டல்களாலும் சல்லடை போடப்பட்டு விடும். தர்க்க ரீதியில், இரண்டாவது கேள்வியும் திறந்ததாகவும் மூடியதாகவும் இருத்தல் வேண்டும். இணையத்தில் எவ்வளவுக்கு பிரஜைகள் ஊடகத்துறை மோசமாக உள்ளதோ, அவ்வளவிற்கு தொழில்சார் ஊடகவியல் தேவைப்பாடும் அதிகமாக இருக்கும். (ஹிகின்ஸ், 2005) இருப்பினும், தொழில்சார் ஊடகவியலானது பெரும்போக்கான ஊடகத்தின் செய்தித்துறையானது வலைப்பதிகை மற்றும் ஏனைய புதிய ஊடகங்கள் மீதான விருப்பார்வத்தால் பாரம்பரிய ஊடக வெளியீடுகளைக் கைவிடுகின்ற அல்லது தகவல்சார் கோரிக்கை மீது கொண்ட அதிக விருப்பினால் ஊடக வெளியீடுகைகளை அறவே நாடாத வாசகர்களின் எண்ணிக்கை தொடர்பில் தொடர்ச்சியாக ஒரு வீழ்ச்சியைச் சந்திக்கும்.

ஓ மை நியூஸ். கொம் போன்ற பெரிய அளவிலான வலைப்பின்னல்களுடாக தமது சொந்தச் செய்திகளையும் அபிப்பிராயங்களையும் அஞ்சல் செய்யும் வலைப் பதிகையாளர்களிலிருந்து வரும் பிரஜை ஊடகவியலானது வாசகர்களும் பொது மக்களும் ஊடகங்களில் எவ்வாறு தம்மை ஈடுபடுத்துகின்றனர் என்பதற்கு முக்கிய உதாரணமாகத் திகழ்கின்றது. தென்கொரியாவில், "ஊடகமும் செய்தித்துறையும்" என்ற கருத்தியலை உலகைச் சுற்றி உருமாற்றம் செய்வதற்காக, ஊடகத்துறையில் இச்சமூகம் கொண்ட பங்கேற்பில் அசாதாரணமான பரிசோதனையொன்று நடத்தப்பட்டது. அதன் செயன்முறையின்போது அது சமூக ஈடுபாட்டை அரவணைத்திருந்தது.

ஓ மை நியூஸ் என்பது ஆயிரக்கணக்கான பிரஜைகள் அறிக்கையாளர்களாக மாறுவதை அனுமதிக்கின்ற ஒரு தொடரறா நிலைப் பத்திரிகையாகும். அதன் ஸ்தாபகரான ஓ யியோன் ஹோ கூறுகிறார், தனது நேயர்களுக்கு எதை அறிய வேண்டுமென்ற தேவையிருந்ததோ அந்தந் தகவலையே கொரியப் பத்திரிகை வழங்கியது. ஆனால், ஓ மை நியூஸ் செய்தியாளர்களோ "பணம்" சம்பாதிப்பதற்காக வல்ல, ஆனால் உலகை மாற்றுவதற்காகக் கட்டுரைகளை எழுதுகின்றனர். *(ஓ யியோன் ஹோ, 2004)*

## பிரஜைகள் ஊடகத்துறை

அமெரிக்காவில் 1990களின் ஆரம்பத்தில், பிரஜைகளின் அக்கறைக்குரிய பிரச்சினைகள் எவையெனக் கண்டுபிடிப்பதற்காகப் பத்திரிகைக் குழுக்கள் ஆய்வுகளையும் நேர்காணல்களையும் நடாத்தின - இது "குடிசார் ஊடகத்துறை" யைப் பரப்புவதற்கான முன்னெடுப்புக்களுக்கு இட்டுச்சென்றது. ஆனால் மறுபுறத்தே, ஓ மை நியூஸ் உதாரணமானது, ஊடகத்துறையில் பிரஜைகளை அதிக ஈடுபாடு கொள்ள அனுமதிப்பதை விட ஒருபடி மேலே சென்றது. அதாவது உண்மையில் அவர்களையே செய்தியாளர்களாக மாற அனுமதித்தது. தனி நபர் விபரங்கள் ஓ மை நியூஸினால் பரிசோதிக்கப்பட்டதன் பின், அவர்களும் நெறிமுறைக் கோவையொன்றிற்கு இணக்கம் தெரிவிக்கும் பட்சத்தில் யாரும் ஒரு செய்தியை அறிக்கை செய்யமுடியும்.

தொடரறாப் பத்திரிகையானது தனிப்பட்ட தமது முதனிலைக் கதைகளையும் திரைப்பட விமர்சனங்களையும் மற்றும் புத்தகங்கள் பற்றிய ஆய்வுகளையும் எழுதுகின்ற 36,000இற்கு மேற்பட்ட பிரஜை – செய்தியாளர்களைக் கொண்டுள்ளது. நாளொன்றிற்கு அவர்கள் 150-200 செய்திகளை அல்லது பத்திரிகை உள்ளடக்கத்தின் சுமார் 70 விழுக்காடுகளைக் கோவைப்படுத்துகின்றனர். தொழிற்தகைமை கொண்ட பத்திரிகையாளர்கள் வழமையாக அரசியல் அல்லது சர்வதேச சம்பவங்கள் குறித்து அதிகம் சிக்கலான கட்டுரைகளை எழுதுகின்றனர். பிரஜை - செய்தியாளர்களுக்குச் செய்தியொன்றுக்கு 3 டொலர்கள் முதல் 20 டொலர்கள் வரையான சிறு கட்டணமொன்றே செலுத்தப்படுகின்றது. அத்துடன், அனைத்து ஓ மை நியூஸ் உள்ளடக்கத்தின் மீதும் தமது கருத்துக்களைத் தெரிவிக்குமாறு பிரஜைகள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

பணியாட்தொகுதிப் பதிப்பாசிரியர்கள் பிரஜை – செய்தியாளர்களால் வழங்கப்பட்ட தகவலை மறு ஆய்வு செய்து தொகுத்து அதன் உண்மைத் தன்மையைப் பரிசோதிக்கின்றனர். அவ்வப்போது விடயங்கள் பிழைத்துப் போகின்றன; தவறுகளும் உள் நுழைந்து விடுகின்றன. அப்படியிருந்த போதும், தமது எதிரிணைகளான தொழில்சார் பத்திரிகையாளர்களின் பணியைப் பகுப்பாய்வு செய்வதற்காக மாதமொரு தடவை கூடும் பிரஜை செய்தியாளர்கள், வியாபாரம் எவ்வாறு நடாத்தப்படுகின்றது என்பதில் கருத்துரைப்பதில் பெரும் பங்கினைக் கொண்டுள்ளனர். ஓ மை நியூஸ் நிறுவனமும் பிரஜை – செய்தியாளர்களுக்கு இலவச பயிற்சியளிக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகத்தால உருவாக்கப்படும் செய்திகள்

பெரும்போக்கு ஊடகத்துள் சேர்க்கப் பொதுப்பரவற்தன்மை அதிகமில்லாத சமூக செய்தி வெளியீட்டுச் சபையை உருவாக்குதல் தொடர்பானதாக ஏனைய கருத்துக்கள் அமைந்துள்ளன. ஒரு சமூகச் செய்தி வெளியீட்டுச் சபையானது தொடரறா நிலை கொண்டதாகவோ அல்லது வெளியீட்டுக்கிளையால் தொகுக்கப்படும் பிரதியை எழுதுகின்ற சமூக உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கும் ஆக்கங்களோடு ஊடகக்கிளை யொன்றினால் துணை புரியப்படும் ஓர் உள்ளூர்க்கிராம அறிவித்தல் பலகையாகவோ இருக்க முடியும்.

ஊடக ஈடுபாட்டுணர்வைக் கட்டியெழுப்புவதற்குச் சமூக வானொலி நிலையங்கள் ஒரு மாபெரும் உதாரணமாகத் திகழ்கின்றன. தற்போது யுனெஸ்கோ அனுசரணையுடனான இரண்டு வானொலி நிலையங்கள் இலங்கையிற் செயற்படுகின்றன. இரண்டுமே நெறிமுறை சார்ந்த உறுதியான ஒரு கடப்பாட்டுணர்வைக் கொண்டுள்ளன. நிலையங்களுக்கிடையேயான தொடர்புகளினாலும் உள்ளூர்ச் சமூகத்தினாலும் இக்கடப்பாட்டுணர்வு முடுக்கி விடப்படுகின்றது.

(ஐரோப்பா முழுவதும் BBC நேயர்கள் மற்றும் ஒலிபரப்பாளர்களால் நடாத்தப்படுவது போன்ற அல்லது அதுபோன்ற ஃபிறெண்ட்ஸ் எனப்படும் அவுஸ்திரேலியா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் ஃபிரென்ட்ஸ் கனேடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போன்ற) கேட்போர், பார்ப்போர் கழகங்களூடாகச் சமூக ஈடுபாட்டை ஊக்குவிக்க ஒலிபரப்பாளர்களும் உதவ முடியும். இக்குழுக்கள் நிகழ்ச்சித்திட்டமிடலில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது மட்டுமல்லாமல் சமூகத்தின் சார்பில் அரசுக்கு ஆதரவு திரட்டவும் உதவுகின்றன.

பொதுமக்கள் சேவை செய்தித்துறையில் மற்றுமொரு அபிவிருத்தியாய்த் திகழ்வது உண்மையின் எளிய சோதித்தறிதலாகும். 2004இல் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலானது வேட்பாளர்களின் வாக்குறுதிகளை கூர்ந்து ஆராயும் இணையத்தளமொன்றின் அபிவிருத்தியைக் கண்டது. மற்றுமொரு இணையத்தளம் வேட்பாளர்களுக்குச் செலுத்தப்பட்ட பிரசாரப் பங்களிப்புக்களைப் பரிசோதித்தது.

ஷாஃவ்வர் இவ்வாறு கூறுகிறார். "வெற்றிபெறவுள்ள செய்தித்துறையானது மிகக் குறைந்த அளவான சந்தடியையும் கூடிய அளவிலான அர்த்தமுள்ள ஊடாட்டத்தையும் விநியோகிக்கும். அதைச் செய்வதற்குப் புதிய ஊடகக் கருவிகளை அவர்கள் பயன்படுத்த வேண்டியிருக்கும். (ஷாஃவ்வர் 2005)

எனது செய்தித்துறைக்குப் பொதுமக்கள் சேவையின் விழுமியங்களைக் கொண்டுவரவும், முழுமையாகப் பொதுமக்களுக்குச் சேவை புரியவும், எமது நடத்தையிலும் எமது அறிக்கை செய்தலிலும் மேலும் அதிகம் செய்யக்கூடியதாய் இருக்கும் அதேவேளை பொதுமக்களை எமது ஊடகங்களில் ஈடுபடுத்தி, பொதுமக்களினதும் அதிகாரிகளினதும் நம்பிக்கையைப் பெறவேண்டும். பொதுமக்களுக்குச் சேவை புரியும் செய்தித்துறையின் சில விழுமியங்கள் பின்வரும் பண்புகளையுடைய ஊடகங்களில் காணப்பட வேண்டும்.

- பிரஜைகளுக்கு முக்கியமானதாகக் காணப்படும் விடயங்களை முன்னேற்றுபவை.
- பிரஜைகளின் தேவைகள் மட்டில் பதிற் செயற்பாடு புரிபவை
- வாசகர்கள் / நேயர்கள் மட்டில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புபவை

## பொதுமக்கள் பதிப்பாசிரியரின் வகிபாகம்

ஊடக அமைப்பாளர்கள் தமது கேட்போருடன் பல வழிகளில் தொடர்பு கொண்டு செய்திப்பத்திரிகை/வானொலி அல்லது தொலைக்காட்சி என்பனவற்றில் பங்கேற்குமாறு கேட்கின்றனர்.

இரண்டு முன்னிலை வகிக்கும் புதினப் பத்திரிகைகளான 'த வோஷிங்டன் போஸ்ட்' 'த நியூ யோர்க் ரைம்ஸ்' என்பன வாசகர்கள் சார்பாகப் பிணக்குகளுக்குத் தீர்வுகாணும் ஒரேயொரு பொறுப்பின் நிமித்தம் ஓர் ஊடகவியலாளரைக் கொண்டுள்ளன. 'போஸ்ட்' பத்திரிகையில் இது குறைகேள் அதிகாரியின் பொறுப்பாகும். 'ரைம்ஸ்' பத்திரிகையில் இப்பொறுப்பைக் கவனிப்பது பொதுமக்கள் பதிப்பாசிரியராகும். பத்திரிகை மீதான இப்பதவியானது வாசகர்களின் கேள்விகளையும் முறைப்பாடுகளையும் கையாள்வதையும் பத்திரிகை எவ்வாறு செயற்படுகிறது என்பதை விளக்குவதையும் குறிக்கோளாகக் கொண்டிருப்பதுடன், பத்திரிகையோ அல்லது பணியாட்தொகுதியோ நெறிமுறைகளில் தவறுமிடத்து அதைச் சுட்டிக்காட்டும் கண்காணிப்பாளனாகவும் விளங்குகின்றது. அத்துடன், பத்திரிகையின் அனைத்து நடவடிக்கைகளும் திறந்தனவாகவும் வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும் இருப்பதையும் உறுதிப்படுத்துகின்றது.

### உங்களுடைய நேயர் உங்களுடைய நண்பன்

உங்களது நேயரை உங்கள் ஊடகத்தில் ஈடுபடுத்துவதென்பது வெறுமனே பொதுமக்கள் சேவை செய்தித்துறையின் ஓர் அம்சம் அல்ல. வர்த்தக அடிப்படையில் இருந்தும் அது ஒரு நல்ல அர்த்தத்தைக் கொடுக்கின்றது. பொதுசன சேவை செய்தித்துறையென்பது உங்கள் நேயருடனான பரஸ்பர நம்பிக்கை மற்றும் மதிப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஓர் உறவுநிலையைக் கட்டியெழுப்புதல் பற்றியதாகும்.

அதனால்தான் நெறிமுறைசார் நன்னடத்தையும் உயர்தரம் வாய்ந்த செய்தித் துறையும் முக்கியமானவையாக இருக்கின்றன. ஆனால், உங்கள் கேட்போரை ஈடுபடுத்துவதிலிருந்து கிடைக்கும் வர்த்தக ரீதியான நன்மையும் உண்டு. உங்கள் போட்டியாளர்களுக்கு ஓர் அனுகூலத்தை வழங்குவதுடன், ஊடகங்களைத் தமது சொந்த உடைமைகளாகக் கருதும் ஓர் உணர்வைப் பெற உங்கள் நேயரை அது அனுமதிக்கிறது.

அவுஸ்திரேலியாவில், "த சிட்னி மோர்னிங் ஹெரல்ட்" பத்திரிகையானது 'நீடர் லிங்க்' எனப்படும் ஒரு வாசகர் சேவைகள் திணைக்களம் ஒன்றை நிறுவியுள்ளது. இந்த நீடர் லிங் கேள்விகளுக்குப் பதில் தருகிறது எழக்கூடிய தவறுகள் குறித்து விசாரணை செய்கிறது மற்றும் பத்திரிகையின் பதிப்பாசிரியர் உள்ளடக்கம் தொடர்பான முறைப்பாடுகள் மீது நடவடிக்கை எடுக்கிறது. அத்துடன், அப்பத்திரிகையின் வாசகர்களுக்கும் செய்தியாசிரியர்களுக்குமிடையேயான தொடர்பாடலிலும் உதவுகின்றது.

## பொதுமக்களை ஈடுபடுத்தல்

ஊடகத்துறையில் பொதுமக்களை ஈடுபடுத்துவதற்குச் சில எளியவழிகள் பின்வருமாறு

- செய்தியாளர்களை / பதிப்பாசிரியரைத் தொடர்புகொள்ள இலகுவான வழிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் (மின்னஞ்சல் முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் என்பவற்றின் பட்டியலை வழங்கல்)
- முறைப்பாடுகள் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுப்பதற்கான ஒரு கொள்கையைச் செயற்படுத்தல்.
- முறைப்பாடுகள் மீது தீவிரகவனம் செலுத்தி அதன்மீது செயற்படுதல்.
- கடிதப் பக்கங்களுக்குப் பெரிதாய் இலக்கமிடல் அல்லது தொலைபேசி இலக்கங்களை உட்சேர்த்து மீண்டும் அழைத்தல்.
- தொனிப்பொருள் விடயங்கள் பற்றிய கருத்துக் கணிப்பை இணையத் தளத்தில் உருவாக்கல்.
- வலைப்பதிகைகளை உருவாக்கல் (blogs).
- 'சமூக அறிவிப்புப் பலகையை' அறிமுகஞ் செய்தல்'.
- பொதுமக்களுக்கு தேவைப்படுவது என்ன, அவர்கள் ஆர்வம் காட்டும் விடயம் யாது என்பது பற்றி ஆய்வுகள் மற்றும் கருத்துக் கணிப்புக்களை நடத்தல்.
- குறைகேளதிகாரி அல்லது பொதுமக்கள் பதிப்பாசிரியர் போன்ற வாசகரை/பார்ப்பவரைப் பிரதிநிதித்துவம் செய்ய அர்ப்பணிப்புடனான ஒரு பதவியை அறிமுகம் செய்க.

## அணுகு தன்மையை எளியமுறையில் முன்னேற்றுதல்

2006இன் ஆரம்பத்தில் 'த வோஷிங்டன் போஸ்ட்' செய்திப் பத்திரிகையானது இணையத்தளத்தைப் பயன்படுத்தும் வாசகர்கள் செய்தியாளர்களுக்கு நேரடியாக மின்னஞ்சல் செய்வதை அனுமதிப்பதற்காகத் தனது இணையத்தளத்தை மீளுயிர்ப் பூட்டியது.

washigton post.com இணையத்தளப் பத்திரிகையின் நிறைவேற்றுப் பதிப்பாசிரியர் ஜிம் பிறடி என்பவர் புதிய அம்சத்தைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார்: "washington post.com" இன் ஊடாட்டகரமான பல விடயங்கள் எழுத்தாளர்களுக்கும் பதிப்பாசிரியர்களுக்கும் மற்றும் வாசகர்களுக்குமிடையேயான உரையாடலில் அவர்களுக்குப் பரஸ்பரம் நன்மையளிப்பதாக இருக்கிறது. சம்பாஷணைக்காக மட்டுமல்ல. ஆனால் கண்ணோட்டம், வளப் பொருட்கள் மற்றும் கதைக்கருத்து என்பவற்றுக்காகவுந்தான். மின்னஞ்சலுக்கான இப்புதிய இணைப்புகள் எழுத்தாளர்களுக்கும் அவர் பணியாற்றும் கேட்போருக்குமிடையே நல்லுறவைக் கட்டியெழுப்ப மேலதிக வாய்ப்பையும் வழங்குகின்றது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. பயிற்சிகள்

ஊடகத்துறையைப் பயிற்சி செய்வதற்கும் முன்னேற்றுவதற்கும் உங்களுக்கு உதவுவதற்கு நீங்கள் செய்யக்கூடிய சில பயிற்சிகள் இங்கே தரப்பட்டுள்ளன.

## சம்பவக்கற்கை 1 - பல குரல்கள்

சுனாமி தாக்கியபோது அவ்வாறான மாபெரும் அனர்த்தத்தினால் பெரும் குழப்பமும், இடப்பெயர்வும் ஏற்பட்டது. அவ்விடயத்திலே நீங்கள் இருந்திருந்தால் யாரை நீங்கள் நேர் கண்டிருப்பீர்கள்?

- அலைகளைக் கண்ணால் கண்டவர்கள்?
- தப்பியோர்?
- அனர்த்த நிவாரண அமைப்புக்கள்?
- அரசாங்கத்தின் பதிற்செயற்பாடு பற்றி அரசியல்வாதிகள்?
- சமுதாயத் தலைவர்கள்?
- சிவில் சமூக அமைப்புக்கள்?
- பொலிஸ் மற்றும் ஏனைய அவசரசேவைகள்?
- மருத்துவ ஆளணியினர்?
- பெண்களும் சிறுவர்களும்?
- உட்கட்டமைப்புகளுக்குப் பொறுப்பான அமைப்புக்கள்?
- உதவிப் பணியாளர்கள்?
- தேடலும் மீட்பும்?

வேறு யாரை நீங்கள் நேர்காண வேண்டும்? வேறு என்ன குரல்கள் கேட்கப்படல் வேண்டும்? வேறு என்ன கருத்துக்கள், அபிப்பிராயங்கள், மற்றும் அனுபவங்களை உங்கள் செய்தியுடன் நீங்கள் சேர்க்கலாம்?

## ஓர் அனர்த்தத்தினை உள்ளடக்குவதற்கான 5 படிகள்

ஜோ ஹைட், முகாமைத்துவ ஆசிரியர், "த ஓக்லஹோமன்"

### 1. உங்கள் திட்டம்

முதல் நாளின் உள்ளடக்கத்தின்போது வருகின்ற நாட்களுக்குத் திட்டமிடுவதற்காகச் சில நிமிடங்களை எடுத்துக் கொள்ளுங்கள். முதல் நாளினைத் தாண்டி பின்தொடரல் உள்ளடக்கம் முக்கியமானதாகும். அனர்த்தம் நிகழ்வதற்கு முன்பு உள்ளடக்கம் பற்றிச் சிந்தியுங்கள். ஓர் அனர்த்தத்தினைச் செய்தியில் உள்ளடக்குவதற்கு உங்களது செய்தியறை போதியளவு வளங்களைக் கொண்டுள்ளதா? உங்களுக்கு ஒரு பூரண திட்டம் தேவையா?

### 2. உங்களது கருத்துக்குவிப்பு

பல்வேறு பரப்புகளுக்கு குறிப்பிட்ட மக்களை/ இலக்கண பொறுப்பாக அமர்த்தவும். 1995இல் ஒச்லஹோமாவில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு மற்றும் 1999இல் நிகழ்ந்த சூறாவளி ஆகியவற்றிலே செயற்பட்ட குழுக்களின் விரிவான விபரம் இங்கே தரப்பட்டுள்ளது.

குண்டுவெடிப்பு – சட்ட அமுலாக்கம் (நிகழ்ச்சி, துப்பறிதல், எவ்வாறு நன்கொடைகள் செலவழிக்கப்படுகின்றன என்பதைக் கண்டறிதல்) காயமுற்றோர் (இறந்தோர் மற்றும் காயமுற்றோர் எண்ணிக்கையின் துல்லியத்திற்கும் பெயர்களினை அறிவிப்பதற்கும் பொறுப்பான ஒரு நபரினை இது உள்ளடக்குகின்றது) உதவியும் மீளலும் (எவ்வாறு சமுதாயம் உதவ முடியும் மற்றும் எவ்வாறு பாதிப்புற்றோர் உதவி பெற முடியும்) வியாபாரம் (காப்புறுதி போன்றவற்றில் ஏற்படுத்திய விளைவு)

சூறாவளி – சூறாவளியினால் தாக்கப்பட்ட பிரதேசங்கள் (மூன்று குழுக்கள், மிட்வெஸ்ட் சிடி, டெல் சிடி மற்றும் பிரிஜ் கிரிக், மூர் மற்றும் ஏனைய மாநிலப் பிரதேசங்களில் கவனம் செலுத்தின) "வாழ்வின் தோற்றப்பாடு" (பாதிக்கப்பட்டோரின் வாழ்க்கை பற்றிய செய்திகள், எண்ணிக்கையின் துல்லியத்திற்கும் பெயர்களினை அறிவிப்பதற்கும் பொறுப்பான நபர்) வியாபாரம் மற்றும் உதவி மற்றும் மீளல், உள்ளடக்கத்தின் ஆரம்ப நாட்களில் குழுக்களின் பிரதிநிதிகளை, பிரதி தயாரிக்கும் பிரிவினை, புகைப்படம் மற்றும் கலைத்திணைக்களங்களை ஆகக்குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது உள்ளடக்கத்தின் பரப்பெல்லையைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காகச் சந்தித்தல்.

### 3. உங்கள் செய்தி மக்களைப் பாதிக்கின்றது

பாதிக்கப்பட்டவர்களை எவ்வாறு அணுகி நேர்காண்பது என்பதை உங்களது செய்தியாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கற்பியுங்கள். உள்ளடக்கத்தின்போது அவர்களுக்குப் பின்வருவனவற்றை ஞாபகமூட்டுங்கள்.

- பாதிப்புற்றோர் கௌரவத்துடனும் மதிப்புடனும் நடத்தப்பட வேண்டு மென்பதை வலியுறுத்துங்கள்.
- பாதிப்புற்றோர் அணுகப்படல் வேண்டும். ஆனால் "வேண்டாம்" என்று சொல்ல அனுமதிக்கப்படல் வேண்டும். "வேண்டாம்" என்பது தான் பதிலானால் பாதிப்புற்றோர் பின்னர் தொடர்பு கொள்வதற்கு வசதியாக ஓர் அட்டையை அல்லது இலக்கத்தைச் செய்தியாளர் விட்டுச் செல்ல வேண்டும். நல்ல செய்திகள் இவ்வழியில்தான் கிடைக்கின்றன.
- பாதிப்புற்ற ஒவ்வொருவரும் ஒரு தனிநபர். ஒட்டுமொத்தத் தொகையினரின் ஒருவர் என்றில்லாமல் ஒரு தனிநபராக அவர் நடத்தப்படல் வேண்டும்.
- சிறு விடயங்களும் முக்கியத்துவம் வாய்ந்தவை. பாதிப்புற்றவர்களை மீண்டும் அழைத்து உண்மைகளையும் கூற்றுக்களையும் ஊர்ஜிதம் செய்யுங்கள். புகைப்படங்களைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள். (முடியுமானால் இதற்கென ஒருவரைக் கூலிக்கமர்த்தலாம்) அவர்கள் எப்படி இறந்தார்கள் என்பது பற்றி வழமையான செய்திகளை எழுதுவதற்குப் பதிலாகப் பாதிப்புற்றவரின் வாழ்க்கைச் சரிதையைப் பற்றி எழுதுமாறு அழுத்தங் கொடுங்கள்.
- முதலில் குடும்ப உறுப்பினர் ஒருவரைத் தொடர்புபடுத்துவதற்கு அந்திம சேவை இல்லங்களை அழைக்க முயற்சியுங்கள் அல்லது பிரதிநிதிகளைத் தொடர்பு கொள்ளுங்கள். அநேகமான சந்தர்ப்பங்களில், செய்தியாளர் வாழ்க்கைச் சரிதையை எழுதுகிறார் என உணர்கையில் பாதிப்புற்றவரின் உறவினர்கள் ஏதும் கூறவேண்டுமென விரும்புவர். இவற்றுள் சில நீண்ட கதைகளுக்கும் இட்டுச் சென்றுள்ளன. உங்கள் உள்ளடக்கத்தைப் பாதிக்கின்ற கொள்கைகளை ஏற்படுத்துங்கள்.
- த ஒக்லோஹோமன் செய்தியாளர்கள் குண்டுத் தாக்குதலாலும் சூறாவளியிலும் பலியானோரின் நினைவஞ்சலிச் சேவைகளைத் தம் செய்தியில் உள்ளடக்கியிருந்தனர். ஆனால், தனியார் ஈமச்சடங்குகளைச் சேர்த்துக் கொள்ளவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வருடாந்த நினைவுகளின்போதும் முக்கியமான நாட்களின் போதும் குருதி தோய்ந்த கோரக் காட்சிகளை மீளப் பிரசுரிக்காதீர். ஆயினும், மீட்டெடுப்பின் வெற்றி குறித்த நடப்பு நிகழ்வுகளுடன் ஒப்பிடக்கூடிய அழிவுகள் பற்றிய படங்களைக் காண்பிப்பது குறித்துச் சிந்தியுங்கள்.

### 4. உங்கள் சமூகம் முக்கியமானது

உதவிகள் வழங்குகின்ற நிலையங்கள் வாசகர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் தேவை. தம் உணர்வுகளை வெளிக்காட்ட அவர்களுக்கு அரங்குகள் தேவை.

- மக்கள் என்ன நினைக்கின்றார்கள் மற்றும் ஊக்குவிப்பு வார்த்தைகள் என்பது குறித்த அரங்குகளை வழங்க பத்திரிகையையும் (அல்லது நிலையத்தையும்) இணையத் தளத்தையும் பயன்படுத்துக. அத்துடன், மக்கள் உதவக்கூடிய வழிகளையும், எவ்வாறு அவர்கள் உதவி புரிந்தார்கள் (அன்புச் செயல்கள்) என்பதையும் காட்டும் பட்டியல்களை வழங்குக.
- மக்கள் உதவிபுரியும் வழிகளைக் கண்டு முழு மீட்டெடுப்புச் செயன்முறையின் போதும் அது பற்றி அறிக்கை செய்க. (இது சமூகத்திற்கு ஒரு நம்பிக்கையை வழங்குகிறது) அந்த உள்ளடக்கலானது, ஏதோ ஒரு கட்டத்தில் சமூகத்தின் ஏனைய பகுதிகளில் கருத்துக் குவிப்புச் செய்யத் தொடங்க வேண்டும். எவ்வளவு உள்ளடக்கம் அதிகமாகும்? எப்போது செய்தியாளர் செய்தியில் கட்டுமீறிய ஈர்ப்புக் கொள்கிறார்? ஆனால் பொது மக்கள் அப்படி இல்லாது போகின்றனர்? கட்டுக்கொலைகள் அல்லது பேரனர்த்தத்தைவிட ஒரு சமூகம் மிக மேலானது உங்கள் பத்திரிகை அல்லது ஊடகம் அது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

### 5. உங்கள் செய்தியறையின் □சுவர்விளைவு□

சுவரை நோக்கி அடிக்கப்படும் ரெனிஸ் பந்தொன்று அடித்த நபரிடமே திரும்பி வருவது போல் பாதிப்புற்றோரால் அனுபவிக்கப்படும் உணர்வுபூர்வ அதிர்ச்சியானது மீண்டும் புறப்பட்டு பாதிப்புற்றோரை நேர்காணல் செய்யும் செய்தியாளரையே தாக்குகிறது.

- தனிநபருக்கு உளவளத்துணையை ஏன் குழுக் கலந்துரையாடலையும் வழங்குங்கள். (பொலிஸ் மற்றும் தீயணைப்புப் படையினர் போன்றோருக்கு இப்போது பலரிடமிருந்தும் தகவல் திரட்டல் தேவைப்படுகிறது. "த ஒக்லஹோமன்" பத்திரிகைக்கு 1999 சூறாவளிக்குப் பலியானோர் பற்றி உள்ளடக்கம் செய்த செய்தியாளர்களின் தகவற் சேகரிப்பு தேவைப்பட்டது.)
- தகவற் சேகரிப்புக்கு வரும் செய்தியாளர்களுக்கு முதல் நாட்களில் அல்லது முதல் வாரங்களில் உணவளியுங்கள். பின்னர் படிப்படியாக அதை முடிவுக்குக் கொண்டு வாருங்கள். இதனால், உணவுக்காக வேறிடத்திற்குச் செல்ல அவர்கள் ஊக்குவிக்கப்படுவர். இவ்வாறு அவர்கள் வழமைக்குத் திரும்புவர்.
- உற்சாகத்தை வழங்கும் மின்னஞ்சல்களை அல்லது நினைவூட்டல்களை அனுப்புங்கள். இன்று என்ன நாள், என்ன கிழமை போன்ற மன அழுத்தங்களை அகற்றும் சிறு குறிப்புக்கள் மற்றும் வாசகர்களிடமிருந்து வரும் குறிப்புக்கள், கடிதங்கள் என்பவற்றைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

(ஹைட் மற்றும் ஸ்மித், 2004)

## சம்பவக் கற்கை 2 - சமநிலையை உறுதி செய்தல்

இச்செய்தியை வாசித்து, பொதுமக்களுக்கு சேவை புரியும் ஊடகத்துறையின் விழுமியங்களைப் பயன்படுத்தி இந்நிகழ்வை எவ்வாறு அறிக்கை செய்வீர்கள் எனச் சிந்தியுங்கள்.

## முகாம் படுகொலை

எழுதியவர் - திலக் ஜயரத்ன

பயங்கரவாதச் சந்தேக நபர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட பிந்துனுவெவ முகாமில் 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் 25ஆம் திகதி படுகொலைச் சம்பவமொன்று இடம்பெற்றது. முகாமிலிருந்த 24 பேர் கொல்லப்பட்டார்கள்.

ஒக்டோபர் 24ஆம் திகதி மாலை வழமைபோன்று ஒரு கூட்டம் நடைபெற்றது. தமது விடுதலை தாமதமாவதையிட்டு தடுத்து வைக்கப்பட்டோரில் சிலர் கூட்டத்தின்போது ஆத்திரமூட்டும் செயலில் இறங்கினர். பின் மாலைப் பொழுதில் களஞ்சியசாலையொன்றினுள்ளும் அதனையடுத்துப் பொலிஸாரின் சோதனைச் சாவடியினுள்ளும் அவர்கள் அடாத்தாகப் புகுத்து இரும்புத் தடிகளாலும் மற்றும் ஆயுதங்களாலும் கட்டடத்தைச் சேதப்படுத்தினார்கள்.

அடுத்த நாட்காலை தடிகளுடனும் வாள்களுடனும், கோடரிகளுடனும் கிராமத்தவர்கள் சுமார் 700 பேர் முகாமிற்கு வெளியே திரண்டனர். போலிஸாரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளையும் புறக்கணித்து முகாமிற்குள் நுழைந்த அக்கூட்டத்தினர் அங்கிருந்த 24 பேரைக் கொன்று அவர்கள் உடல்களைத் தூங்கும் மாடங்களில் வீசியெறிந்து அவற்றிற்கு எரியூட்டினர். (பார்க் மற்றும் தேஷப்பிரியா, 2005)

இச்செய்தியை அறிக்கை செய்யும் போது மக்களுக்குச் சேவை செய்யும் ஊடகத்துறையின் விழுமியங்களைப் பயன்படுத்தும் செய்தியாளர்கள் செய்திச் சமநிலையை உறுதிப்படுத்தப் பல்வேறு மூலங்களையும் நேர்காணல் செய்யவேண்டும். இனப் பன்மைத்துவத்தைக் காட்டும் பல குரல்களையும், கண்கண்ட சாட்சிகளையும், பொலிஸ், முகாம் கட்டளையிடும் அதிகாரி, ஆரம்பக் குழப்பத்தை ஏற்படுத்தியவர்களின் தலைவர்கள், கிராமத் தலைவர்கள், மருத்துவ அலுவலர்கள், பிரதேச மற்றும் மாகாண அரசியல்வாதிகள் மற்றும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள், சட்டத்துறைப் பிரதிநிதிகள், இராணுவத்தினர், பயங்கரவாத அமைப்பு, காயப்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டிருந்தோரின் குடும்பத்தினர் போன்ற பலரும் இதில் உள்ளடங்க வேண்டும்.

**கேட்கவேண்டிய கேள்விகள்**

- தடுத்து வைக்கப்பட்டவர்கள் ஏன் நீண்டகாலமாக அங்கு வைக்கப்பட்டிருந்தனர்? தாமதத்திற்கான காரணம் யாது?
- முகாம் அதிகாரிகள் ஏன் அவர்களைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்தவில்லை? தடுத்து வைக்கப்பட்டவர்கள் சரியான தகவலைப் பெற்றுக் கொண்டார்களா?
- கிராமவாசிகளுக்கு அறிவித்து முகாமைத் தாக்கும்படி தூண்டிவிட்டது யார்?
- ஆயுதந் தரித்திருந்த பொலிஸார் ஏன் நிலைமையை நல்ல விதமாகக் கட்டுப்பாட்டில் வைத்திருந்து தாக்குதலை முன்னின்று நடத்தியவர்களைக் கைது செய்யவில்லை?
- கிராமவாசிகள் எப்படி முகாமுக்குள் நுழைந்தார்கள்?
- எத்தனைபேர் காயமடைந்தார்கள்; எவ்வாறு அவர்களுக்கு சிகிச்சை தரப்பட்டது?
- பாதிக்கப்பட்டவர்கள் இப்போது என்ன சட்டரீதியான பரிகாரத்தைக் கண்டனர்?
- முதல்நாள் மாலை நிகழ்ந்த ஆரம்ப வன்செயலையடுத்துப் பதில் நடவடிக்கை எடுக்க ஏன் அதிகாரிகள் தாமதித்தனர்?
- இதுபோன்ற நிகழ்வு மீள ஏற்படாது தடுக்க அரசாங்கம் செய்யவிருப்பது என்ன?
- வேறு என்ன தீர்வுகள் இருக்கின்றன?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பவக் கற்கை 3 - கோர மரணத் தாக்குதலின் பின்னர்

ஜுன் 18, 2006

சுனந்த தேசப்பிரிய

கெபித்திகொல்லாவைக்குச் செல்லும் பாதையானது சைக்கிளிற் செல்லும் ஒரு சிலரைத் தவிர்த்து வழமையான ஆள் நடமாட்டமற்றதாகவே காணப்படும். ஆனால், மூன்று நாட்களின் முன்னர், 2006 ஜுன் 15ஆம் திகதி அவ்விடத்தில் வெடித்த கிளேமோர் கண்ணிவெடியினால் கெபித்திகொல்லாவையிலிருந்து வவுனியா வரையான பல்வேறு கிராமங்களையும் சேர்ந்த சிவிலியன்கள் பயணித்த பஸ்ஸொன்று முற்றாகச் சேதமாகியதில் 15 சிறுவர்கள் உட்பட 64 பேர் கொல்லப்பட்டனர். அவர்களுள் இருவர் கர்ப்பிணித் தாய்மார். இத்தாக்குதலுக்கு அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) மீது குற்றம் சுமத்தியது. இதற்குப் பொறுப்பு தாமல்லவென LTTE மறுத்த போதிலும், பாதுகாப்பு நிலவரங்கள் குறித்த ஊடகவியலாளர் நாமல் பெரேராவின் கூற்றுப்படி முதனிலைச் சந்தேகம் அவர்கள் மீதே உள்ளது.

பஸ் மிதமிஞ்சிய சனத்திரளைக் கொண்டிருந்தது. "எமக்குத் தேவை அதிக பஸ் வண்டிகள். அரச போக்குவரத்தே இங்கு வழங்கப்படுகிறது. இது பணம் சம்பாதிக்கும் ஒரு வியாபாரமாக இருப்பதால் இது ஒரு அரச சேவையல்ல" என்று கூறுகிறார் உள்ளூர் ஆசிரியரான சுனில்பண்டார,

இடம்பெயர்ந்த சமூகத்தினிற் பெரும்பாலோருக்குப் புகலிடம் வழங்கும் ஒரு முகமாக விளங்கும் கெபித்திகொல்லாவை மத்திய மகாவித்தியாலயமானது பாடசாலையொன்றின் மைதானத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது. பெருந்தொகையினரான பொலிஸார் அதன் நுழைவாயிலில் நிலைகொண்டுள்ளனர்.

குண்டுக்குப் பலியானோரின் இறுதிக் கிரியைகளுக்கு அடுத்த நாளான ஜுன் 17ஆம் திகதி அந்த முகாமில் 297 குடும்பங்கள் உள்ளிட்ட 1013 இடம்பெயர்ந்த மக்கள் இருந்தனர். வழமையாக 1800 மாணவர்கள் அமர்ந்து கற்கக்கூடிய பாடசாலைக் கட்டடங்கள் 1000 இற்கு மேற்பட்ட வளர்ந்தோருக்குத் தங்குமிட வசதி வழங்க முடியாது போயிருந்தது.

ஜுன் 17ஆம் திகதியன்று கழிப்பறைகள் ஐந்து மட்டுமே அங்கிருந்தன. அவற்றின் மலசலக்கிடங்குகள் நிரம்பி வழிந்தன. அவற்றைத் துப்புரவு செய்யும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. (உள்ளூராட்சி சபையான) பிரதேச சபையின் பிரதித் தவிசாளரின் கூற்றுப்படி அப்பிரதேசத்தின் பிரதான நீர்வழங்கு மூலம் அசுத்தமாகிவிட்டிருந்தது. இந்நெருக்கடி நிலையைச் சமாளிக்கப் பிரதேச சபையால் இருபது தற்காலிக கழிப்பறைகள் அமைக்கப்பட்டபோதும் அவையும் போதாதென அநேக அகதிகள் கூறினர். நீர்த்தாங்கிகளைக் குளோரினிட்டுச் சுத்திகரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

முகாமில் உள்ள மிதமிஞ்சிய சனத்தொகையும் துப்புரவேற்பாட்டுக் குறைபாடும் தொற்றுநோய்க்கு இட்டுச் செல்வதற்கான விளைவாந்தன்மையைக் கொண்டிருப்பதாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார். குண்டுவெடிப்பினால் ஏற்பட்ட உயிரிழப்போடு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டவர்கள் உளவியல் ரீதியான பிரச்சினைகளால் துன்புற வேண்டியிருந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களுக்குப் பாடசாலை பொருத்தமான ஒரு இடமாக இல்லையென்பதிலும் அவர்களுக்கென்று ஒரு முகாம் தாமதமின்றி அமைக்கப்பட வேண்டும் என்பதிலும் அங்கு கருத்தொருமைப்பாடு காணப்பட்டது.

நாட்டின் அனைத்துப் பாடசாலைகளும் ஜுன் 19ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் கெபித்திகொல்லாவையின் பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டிருந்தல் வேண்டுமெனவும் அறிவித்தல் விடுக்கப்பட்டது.

கெபித்திக்கொல்லாவையில் உள்ள மருத்துவ சுகாதார நிலையத்திற்குச் சொந்தமான வாகனவசதி கிடையாது. இதனால், வவுனியாவில் தமது தடுப்பூசி மருந்துகளைக் கிரமமாக ஏற்றிக் கொள்ளுமுகமாகப் பயணித்த குழந்தைகளுடனான தாய்மார் கப்பிணித்தாய்மார் என்போரால் அந்தப் பஸ் வண்டி நிறைந்திருந்தது.

வாகனமொன்று இருந்திருந்தால் தடுப்பூசி மருந்துகள், சிலவகை மருந்துகள் விலை உயர்ந்தவை வவுனியாவில் இருந்து கொண்டு வந்திருக்கலாம். கெபித்திக்கொல்லாவையிலேயே வைத்து ஊசி ஏற்றப்பட்டிருக்கலாம். கிராமத்திலுள்ள சமூகச்செயற்படுனரான கல்யாணி என்பவர் கேற்கிறார். "அடிப்படைச் சுகாதார உரிமைகள் எங்கே?"

கெபித்திக்கொல்லாவையின் நெருக்கடி நிலைக்குறித்த ஆர்வம் எவ்வளவு காலத்திற்குத்தான் தொடர்ந்து இருக்கப் போகிறது என்று அநேகமானவர்களுக்குச் சந்தேகம் இருக்கின்றது.

பிரதேச வாழ் மக்களுக்கு வழங்கப்படும் உதவியின் நிலைபேற்றுத் தன்மை குறித்த கேள்வியும் இதிலிருந்தே எழுகின்றது.

"கெபித்திக்கொல்லாவை மிகவும் பிரதிகூலமான ஒரு பிரதேசமாகும். அங்கு வாழும் சிவிலியன்கள் எந்தவொரு நேரத்திலும் நேரடித் தாக்குதலுக்கு இலக்காகலாம்." - இவ்வாறு கூறுகிறார் "inform" என அழைக்கப்படும் ஒரு மனித உரிமைகள் ஆவணப்படுத்துகை நிலையத்தின் பணிப்பாளர் சுனிலா அபேசேகர. மோதலின்போது பயன்படுத்தப்படும் வெறும் மனித கேடயங்களுக்கு மேலாக வேறொன்றுமல்ல அங்குள்ள மக்கள் என்றே கருத வேண்டியுள்ளது. குண்டுத்தாக்குதலுக்கு இலக்கான பஸ்வண்டி குறித்த துன்பியல் நிகழ்வானது இம்மாதிரியான ஓர் உயர்த்துணர்வு ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தையே வழங்குகின்றது என்று அவர் கூறினார்.

இச்சம்பவ ஆய்வானது 'INFORM'இனால் கெபித்திக்கொல்லாவை நிலைமைகள் குறித்து 2006 ஜுன் 10ஆம் திகதி எழுதப்பட்ட உண்மை - கண்டறியும் அறிக்கைகள் அடிப்படையாகக் கொண்டிருந்தன.

தாக்குதலின் பின்னர் கெபித்திக்கொல்லாவை நிலைமை பற்றி முழுமையான ஒரு தகவலைப் பெறக் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய இயலுமான மூலங்களும் கேள்விகளும் :

- பாதுகாப்பு நிலை குறித்து - பொலிஸாரும் சட்ட ஒழுங்கை நிலைநாட்டும் ஏனைய முகவர் நிறுவனங்களும்
- கிராமங்கள், காயப்பட்டோர் மற்றும் சமூகப் பணியாளர்கள் - போக்குவரத்து வசதிகள் - பஸ்ஸில் அவ்வளவு தொகையானோர் ஏனிருக்க வேண்டும். சுகாதார சிகிச்சைகளுக்குரிய வாகனங்கள் இல்லாமை, பாதுகாப்புக்காகக் கிராமவாசிகளின் வேண்டுகோள்கள் அவர்களின் சீவனோபாயம் போன்றவை.
- மருத்துவ கிளினிக்குகள் குறித்துச் சுகாதார அதிகாரிகள், தடுப்பூசி போட்டுக் கொள்வதற்காகத் தாய்மாரும் குழந்தைகளும் ஏன் இன்னொரு நகரத்திற்குச் செல்ல வேண்டும்? இறந்தோர் காயமுற்றோரின் எண்ணிக்கை மற்றும் ஆளடையாளங்களை உறுதி செய்தல். அகதிகளுக்கான சுகாதார வசதிகளை உறுதிசெய்தல்.
- மேலதிக பஸ் வண்டிகளைக் கொண்டிருத்தல் பற்றிப் போக்குவரத்து அதிகாரிகள் கூறுவதென்ன? கிளினிக் நடைபெறும் நாட்களில் பஸ்களுக்கு விசேட ஏற்பாடுகள் உள்ளனவா?
- அகதிகளுக்கு வழங்கப்படும் வசதிகள் குறித்துச் சமூக சேவைகள் அதிகாரிகள் வேறு நல்ல இடத்திற்கு அவர்களை மாற்றுவதற்கான திட்டமுள்ளதா? இறுதிக்கிரியைகள் எங்கு?
- பிரதேசச் சிறுவர்களின் கல்வியை எவ்வாறு தொடங்குவது? போன்ற விடயங்கள் குறித்துக் கல்வி அதிகாரிகள் கூறுவதென்ன?
- இவ்வாறான சம்பவங்களின்போது கண்காணிப்புக் குழுவின் வகிபாகம் யாது? குற்றம் சுமத்தப்பட வேண்டிய தரப்பினர் யாது?
- கிராமத்தவர்களின் அடிப்படை உரிமைமீறல்கள், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், வாழ்வதற்கான உரிமை, மனித உரிமை ஆணைக்குழுவின் நிலைப்பாடு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுபந்தம் I

**பதிப்பாசிரியர் நடைமுறை குறித்து "ராவய" வின் பிரகடனம்**

நெறிமுறைக் கோவையொன்றும் வேலைத்தளத்தில் பிரயோகம் செய்யப்படலாம். பத்திரிகைத்துறையினரின் தொழிலுக்கென்று உருவாக்கப்பட்ட நெறிமுறைக்கோவையாக அது இருக்க வேண்டியதில்லை.

உதாரணமாக : தனது பதிப்பாசிரிய நடைமுறை குறித்த பிரகடனம் ஒன்றை 'ராவய' என்னும் வாராந்த பத்திரிகை பின்பற்றி வருகிறது. புதினப்பத்திரிகை செய்தியாளர் எவ்வாறு செயற்படுகிறார்கள். பத்திரிகையின் பணிநோக்கென்ன விழுமியங்கள் என்ன என்பது பற்றிய கூற்றினை பொதுமக்கள் நுணுகி ஆராய்வதற்காக அது பொதுமக்களுக்கு கிடைக்குமாறு செய்யப்பட்டது. இப்பிரகடனமானது உள்ளக நெறிமுறைக் கோவையொன்றைப் போன்று விளங்குவதுடன் அதில் வரும் ஒவ்வொரு கதைக்கும் கட்டுரைக்கும் ஒரு சோதனைப் பட்டியலாகவும் திகழ்கிறது. அத்துடன், பொதுமக்களுக்கு சேவை செய்ய பத்திரிகைத்துறை எவ்வாறு செயற்படலாம் என்பதையும் அது அங்கீகரிக்கின்றது.

மற்றைய நாடுகளில் அநேக ஊடக அமைப்புகள் "நெறிமுறைக் கோவையொன்றை" அல்லது நெறிமுறைக்கோட்பாடுகளின் ஒரு கையேட்டை" அல்லது "ஊடகவியலாளர்களுக்கான வழிகாட்டல்களை" ஏற்று அதன்படி ஒழுகுகின்றன. (மேலும் தகவல்கள் என்ற பகுதியில் இதனோடிணைந்த விடயங்களைக் காணலாம்) இவை ஒரு நிறுவனத் தால் வேலைக்கமர்த்தப்படும் ஊடகவியலாளர்களுக்கான ஓர் உள்ளக நெறிமுறைக் கோவையொன்றைப் பிரயோகம் செய்கின்றன.

**விழுமியங்கள்**

ராவயவின் செய்தியாளர்களாகிய நாங்கள் நீதிக்காகப் பாரபட்சமின்றிச் செயற்படுதல், எமது செயற்பாடுகளில் ஊழல் மற்றும் முற்சாய்வு என்பனவற்றிலிருந்து விடுபட்டிருத்தல், எமது அறிவை எப்போதும் வளர்த்தல் ஆகிய நோக்கங்களுக்காக நேர்மையாகப் பணியாற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

**நெறிமுறைகள்**

அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ராவயவின் செய்தியாளர்களாகிய நாம் எமது தொழிலின் பின்வரும் அடிப்படை நெறிமுறைகளுக்கு அமைந்தொழுக எம்மை இத்தால் அர்ப்பணிக்கின்றோம் :

1. **உண்மையாயிருத்தல்** - உண்மையை அறிக்கையிட உறுதி கூறுகிறோம்.
2. **நேர்மை** - தகவலை நேர்மையான விதத்தில் பெறுவோம்
3. **பக்கச் சார்பின்மை** - அனைவரின் அபிப்பிராயங்களையும் முற்சாய்வின்றி அறிக்கை செய்வோம்
4. **பதில் பெறுவதற்கான உரிமை** - பதில் பெறுவதற்கான உரிமைக்கு எமது அதியுயர் மதிப்பினை வழங்குவோம்.
5. **தகவல் மூலம்** - எமது தகவல் மூலங்களின் நம்பகத்தன்மையைப் பாதுகாப்பதுடன் பிரசுரமாவதற்கு முன் தகவலின் உண்மை நிலையை உறுதிப்படுத்துவோம்.
6. **அந்தரங்கம்** - அந்தரங்கத்தை நாம் மதிக்கிறோம். அதிகாரத்தை நாடுவோர் அல்லது அதிகாரத்தைக் கொண்டிருப்போர், செல்வாக்கை அல்லது அவதானத்தை கொண்டிருப்போரை விடத் தனிநபர்களுக்குப் பெரிய அந்தரங்கமுண்டு என்பதை நாம் அங்கீகரிக்கின்றோம்.
7. **பன்மைத்துவம்** - மனிதப் பன்முகத்தன்மையை நாம் ஒரு அடிப்படைத் தத்துவமாக மதிக்கின்றோம்.
8. **முரண்பாடுகள் மட்டில் கூருணர்வோடிருத்தல்** - முரண்பாடுகள் குறித்துச் செய்தியறிக்கை செய்யும்போது கூருணர்வு கொண்டிருக்க வேண்டிய அவசியத்தை நாம் அங்கீகரிக்கின்றோம்.
9. **இலஞ்சம் மற்றும் ஊழல்** - இலஞ்சம் ஊழல் என்பவற்றிலிருந்து நாமும் விடுபட்டவர்களாயிருப்பதோடு மற்றவர்களையும் அவ்வாறே இருக்கக் கோருகின்றோம்.
10. **புலமைச்சொத்து** - புலமைச் சொத்துரிமைகளை நாம் மதிக்கின்றோம்.

**ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய பயிற்சி**

ஒவ்வொரு செய்தியாளரும் தமது பணியில் பின்வருவனவற்றைக் கடைப்பிடிப்பர் :

1. பிரசுரிக்கப்படும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் எழுத்துருவாக்கங்கள், அனைத்தும் ராவயவின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறிமுறைகளுடன் ஒத்துப்போதல் வேண்டும்.
2. செய்தியாளருக்கோ அல்லது செய்தியாளருடன் தொடர்புடையவர்களுக்கோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நன்மையளிக்கின்ற அறிக்கைகள் அல்லது கட்டுரைகளைப் பிரசுரிப்பது தவிர்க்கப்படல் வேண்டும்.
3. இன்னொரு நபரைப் பற்றிய அல்லது நபர்களின் ஒரு குழு பற்றி அல்லது ஒரு நிறுவனம் பற்றி எழுதுகையில் நலன்களுக்கிடையே முரண்பாடுகள் ஏதுமிருப்பின் செய்தியாளர்கள் அவற்றை வெளிப்படுத்த வேண்டும்.
4. பிழைகள் இடம்பெறுகையில் அதற்கான திருத்தங்களும் விளக்கங்களும் எவ்வளவு விரைவாகச் சாத்தியமாகின்றதோ அவ்வளவு விரைவாகப் பிரசுரிக்கப்படல் வேண்டும்.
5. முறைப்பாடுகள் பெறப்படுமிடத்து அது தொடர்பான நடவடிக்கைகள் நேரகாலத்தோடு எடுக்கப்படல் வேண்டும்.
6. தனிநபரொருவர் தன் பெயரை வெளியிடாது தகவலொன்றை வழங்க விரும்புவாராயின், குறைந்தபட்சம் வேறு இரண்டு மூலங்களால் அத்தகவல் ஊர்ஜிதம் செய்யப்பட்ட பின்னரே பிரசுரிக்கப்படும்.
7. பிரசுரிக்கப்பட்ட தகவல் உண்மையானது என்பதை உறுதிப்படுத்த அனைத்து முயற்சியும் எடுக்கப்படல் வேண்டும்.
8. ராவயவின் அனைத்துச் செய்தியாளர்களும் தமது சொத்துக்கள் பொறுப்புக்களையும் பதிப்பாசிரியரிடம் பிரகடனம் செய்தல் வேண்டும்.
9. செய்திச் சேகரிப்பு முறைமையின் ஒரு பகுதியாகக் கருதப்படக்கூடிய ஏதேனும் நன்கொடை அல்லது நன்மை கிடைக்கப்பெறின் அவை வெளிப்படுத்தப்படும்.
10. பெறப்பட்ட தகவல் சரியானதாகக் காணப்படின் தகுந்த காரணங்களிருந்தாலன்றி அது அறிக்கை செய்யப்படுவது தவிர்க்கப்படலாகாது.
11. செய்தியாளர்கள் செய்தி மூலங்களிடமிருந்து உபசரிப்புப் பெறுவதிலிருந்து விலகியிருத்தல் வேண்டும்.
12. ராவய பதிப்பாசிரியர் சபையின் உறுப்பினர் ஒருவர், கடமையொன்றை நிறைவேற்றியமைக்காக ஏதும் கொடுப்பனவைப் பெறுவாராயின், நிறுவனத் தலைவர் இது குறித்து அறிவிக்கப்பட்டிருப்பதுடன் அதற்கான அனுமதியையும் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.
13. பதிப்பாசிரியர் சபையின் உறுப்பினர்கள் சபையின் ஏனைய உறுப்பினருக்கோ அல்லது ராவய பத்திரிகைக்கோ அல்லது அதன் செய்தியாளருக்கோ அபகீர்த்தியை ஏற்படுத்தும் எதனையும் செய்யாதிருத்தல் வேண்டும்.
14. எதையும் எழுதுவதென்றாலும் அல்லது அறிக்கை செய்வதென்றாலும் செய்தியாளர்கள் ராவயவின் பதிப்பாசிரியத்தின் நினைவூட்டற் சோதனைப்பட்டியலைப் பின்பற்ற வேண்டும்.
15. இறுதிப் பகுப்பாய்வின் போது, ஒவ்வொரு செய்தியும் யாராவதொரு செய்தியாளரின் தனிப்பட்ட நலனைவிடப் பொதுமக்கள் நலன் சார்ந்ததாயிருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுபந்தம் II

## ஜனநாயக பன்மைத்துவ ஊடகக் கலாசாரத்திற்கும் மற்றும் இலங்கையில் ஊடக மற்றும் செய்தித்துறைக்கான சமூக மற்றும் தொழிற்தகைமைசார் உரிமைகளுக்குமான சாசனம்

பேச்சுவார்த்தையூடாக சமாதானத்தீர்வு காணும் திறமையை இலங்கையர்கள் பெற்றுக் கொள்ளவும், சுனாமிக்குப் பின்னரான வெற்றிகரமான மீள் நிர்மாண நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொள்ளவும் நல்லாட்சி மற்றும் விளைபயனுறு பொதுநிர்வாகத்தை ஏற்படுத்தவும் நியாயமான, சமநிலையான சுதந்திரமான ஊடகங்கள் அவசியமானவையாகும்.

பொதுமக்கள் நலனில் பொறுப்புடைய, அரசாங்க மற்றும் கட்சி ஆதிக்கம் மற்றும் தலையீடு என்பவற்றிலிருந்து விடுபட்ட ஒரு தொழிற்தகைமை கொண்ட ஊடகமானது ஜனநாயகத்திற்கு மிகவும் முக்கியமானதாக விளங்கும் சரிபார்த்துச் சமன் செய்தலின் ஒரு முக்கிய பாகமாக விளங்குகின்றது. இலங்கையின் ஊடகத்துறை நடைமுறையானது பல சவால்களுக்கு முகங்கொடுக்கிறது.

இலங்கைப் பிரஜைகளுக்கு இச்சவால்கள் அக்கறைக்குரியவை தான். ஆனால், தொழில்சார் ஒத்துழைப்புடன் ஒன்றிணைந்து பணியாற்றும் ஊடகவியலாளர்கள் செய்தித் துறையின் ஒரு சுதந்திரமான கலாச்சாரததைக் கட்டியெழுப்புவதன் மூலம் ஊடக மறுசீராக்கலுக்கான பிரசாரத்தை முன்னெடுத்துச் செல்வதில் ஒரு முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ளனர்.

ஊடகமானது வர்த்தக ரீதியான, கட்சி ரீதியான அல்லது அரச சார்பான நலன்களில் தங்கியிராது, இலங்கைச் சமுதாயத்தினூடாக பன்மைத்துவம் வாய்ந்த அபிப்பிராயத்திற்கு இடம் வழங்கிச் சமுதாயத்தின் செழுமையைப் பறைசாற்ற வேண்டுமாயின், செய்தி ஊடகத்தினுள் பலம் வாய்ந்த, சனநாயக சேவைக் கலாசாரமொன்றை விருத்திசெய்ய வேண்டியது அவசியமாகிறது.

இச்சாசனமானது அறிவதற்கான பொதுமக்களின் உரிமைக்கு வலுச் சேர்க்கின்ற குறைந்த பட்சத் தராதரங்களையும் கோட்பாடுகளையும் ஏற்படுத்துவதுடன், ஜனநாயக சமுதாயமொன்றின் சுதந்திர ஊடகமொன்றை நிறுவி ஊடக மறுசீராக்கலுக்குத் துணைபுரியும் நடவடிக்கைகளின் நடைமுறை நிகழ்ச்சித்திட்டமொன்றையும் ஏற்படுத்த விழைகிறது.

### 1. அடிப்படைக் கோட்பாடுகள்

1.1 உண்மைக்கும் அறிவதற்கான பொதுமக்களின் உரிமைக்கும் மதிப்பளிப்பதானது ஊடகவியலாளர்களின் முதனிலைக் கடப்பாடாகும்.

1.2 சகிப்புத்தன்மைகொண்ட சமாதானமான மற்றும் நீதியான சமுதாயத்தின் உருவாக்கமானது மனித உரிமைகளுக்கு, பன்மைத்துவம், பல்வகைமை மற்றும் சர்வ வியாபகங்கொண்ட மதிப்பினை வழங்குகின்ற தரம் வாய்ந்த ஊடகத்திற்கான வழியுரிமையைக் கொண்டிருப்பதற்குப் பிரஜைகளுக்கு இருக்கும் சுதந்திரத்திற் தங்கியுள்ளது.

1.3 அனைத்து ஊடகவியலாளர்களும் ஊடகப் பணியாட்தொகுதியினரும் பாதுகாப்பான இடரிலா நிலையின் நிபந்தனைகளின் கீழ் பணியாற்றும் உரிமையைக் கொண்டுள்ளனர்.

1.4 ஊடகவியலாளர்களுக்கான ஏகோபித்த தேசிய குரலை ஏற்படுத்துவதானது இலங்கையில் ஊடகவியலாளர்களின் சமூக மற்றும் தொழில்சார் உரிமைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு மிகவும் முக்கியமானது என்பது அனைத்து ஊடகவியலாளர்களாலும் அங்கீகரிக்கப்படுகிறது.

1.5 இலங்கையின் செய்தித்துறை மற்றும் ஊடகக்கொள்கையானது பின்வரும் கோட்பாடுகளால் வழிநடத்தப்படல் வேண்டும்.

- செய்திப்பரப்பல் முறை எத்தகையதாயிருப்பினும், புவியியல், இனப்பூர்வீகங்கள், மத நம்பிக்கைகள் அல்லது மொழி ஆகிய அடிப்படையைக் கொண்ட எந்த சமூகத்தினுள்ளும் அல்லது சமூகங்கள் மத்தியிலும் முழுமையான சனநாயக பூர்வமான கருத்துப் பரிமாற்றங்களை இயலுமானதாக்கும் வகையில் ஊடகங்கள் சுதந்திரமானவையாகவும்,சகிப்புத்தன்மை கொண்டவையாகவும் பல்வகைமையைப் பிரதிபலிப்பனவாகவும் இருத்தல் வேண்டும்.
- தகவல் சுதந்திரத்திற்கும் அறிந்துகொள்வதற்குமான பிரஜைகளின் உரிமைகளுக்கும் சட்டங்கள் பக்கபலமாகவும் பாதுகாப்பாகவும் இருத்தல் வேண்டும்.
- ஊடக தொழிற்துறையின் சுதந்திரத்தையும் அங்கீகாரத்தையும் உத்தரவாதம் செய்கின்ற சட்டபூர்வமாக அமுல்படுத்தக்கூடிய தொழிலாளர் உரிமைகள் மற்றும் பொருத்தமான ஒழுங்குவிதிகள் என்பவற்றினூடாகக் கண்ணியமான பணியாற்றலுக்கும் தொழில் நிபந்தனைகளுக்கும் கௌரவம் வழங்கப்படல் வேண்டும்.

### 2. பதிப்பாசிரிய சுதந்திரம்

2.1 அரச ஊடகங்களோ அல்லது தனியார் ஊடகங்களோ அனைத்து ஊடகங்களும் ஊடகத்துறையில் நெறிமுறைசார் நடத்தையைப் பேணவேண்டும்; தொழில் சுதந்திரத்தை ஆதரிக்கவேண்டும், சகிப்புத்தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும், அத்துடன் அனைத்துப் பிரஜைகளின் ஜனநாயக உரிமைகளையும் மதிக்க வேண்டும்.

2.2 செய்திகளையும் தகவலையும் சந்தைப்பொருள் அரசியல் நோக்கங்களை அடைவதற்கான வழிமுறை மற்றும் கலாசார மற்றும் மத நோக்கங்களை அடையத் துணைபுரியும் சாதனம் என்பவற்றுள் எந்த ஒன்றைப் போன்று கருதிக்கொண்டாலும் அவை பொதுமக்களுக்கு அறியத்தரல் என்னும் ஊடகவியலாளர் களினதும் ஊடகங்களினதும் கடமையை விஞ்சிநிற்றலோ அல்லது அதிற் தலையிடுவதோ தகாது.

2.3 ஊடகமானது வன்முறைக்கும் தீவிரவாதத்திற்கும் ஆதரவளிக்கும் பிரசார சாதனங்களாக ஒருபோதும் பயன்படுத்தப்படலாகாது.

2.4 ஊடகத்துறையில் நெறிமுறைசார் நடத்தைக்கான பொறுப்பானது நெறிமுறைசார் நடத்தைக் கோவைகளை வரைவதற்கும் நம்பத்தகுந்த வகைப் பொறுப்புடைய சுயகட்டுப்பாட்டு விதிமுறைகளை ஏற்படுத்துவதற்கும் பொறுப்பாயிருக்கும் ஊடகத் தொழிற் தகைமையாளர்கள் மீதே தங்கியுள்ளது.

2.5 பொதுச்சட்டத்திற்கப்பால், உழைக்கும் ஊடகவியலாளர்களுக்குப் பொறுப்பளிக்கப்பட்ட விடயங்களான தகவலைச் சேகரித்தல், தெரிவு செய்தல் மற்றும் ஒலிபரப்பல் ஆகியவற்றில் தலையீடு செய்கின்ற வேறு எந்தச் சட்டவாக்கமும் இருத்தலாகாது. பேச்சுச் சுதந்திரம் ஊடக சுதந்திரம் மற்றும் ஒன்று சேரும் சுதந்திரம் என்பன சர்வதேச தராதரங்களுக்கமைவாகச் சட்டத்தில் உத்தரவாதப் படுத்தப்படல் வேண்டும்.

2.6 அத்துடன், ஊடகக் கொள்கையானது உள்ளகப் பதிப்பாசிரிய நியமச் சட்டங்கள் மற்றும் அனைத்து இலங்கை ஊடகங்களிலும் பணியாற்றும் ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் ஏற்பாடுகள் என்பவற்றைக் கடைப்பிடிக்க ஊக்கம் அளித்தல் வேண்டும்.

2.7 ஊடகவியலாளர்களைத் தேசிய மட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அனைத்து அமைப்புக்களாலும் ஆதரவளிக்கப்படுகின்ற நெறிமுறைகளையும் ஊடகவியலாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்களின் சுய கடைப்பிடித்தலூடாக நெறிமுறைசார் விடயங்கள் குறித்த இலங்கையர்களின் பொதுவான புரிந்துணர்வுக்கான ஓர் அடிப்படையையும் ஊடக நடாத்துகைக்கான கோட்பாடுகளின் IFJ கோவை மற்றும் இலங்கைத் தொழிற்தகைமை நெறிக்கோவை என்பன வழங்குகின்றன.

### 3. ஊடக பன்மைத்துவம், அரச சேவை மற்றும் அரசாங்கம்

3.1 வெளிப்படைத்தன்மையையும் அரசாங்கத்தையும் மற்றும் தகவற் சுதந்திரத்தையும் இலங்கையை முன்னேற்றுவதோடு அனைத்துச் சமூகங்களினதும் ஒத்திசைவை வலுப்படுத்துவதற்கான ஜனநாயகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரம் ஒன்றை உருவாக்குவதில் அனைத்துப் பிரஜைகளின் பங்கேற்பையும் உறுதிப்படுத்தவும் வேண்டும்.

3.2 அனைத்து மட்டங்களிலும் அரசாங்கத்தின் அனைத்து விடயங்கள் குறித்தும் சுதந்திரமான ஒரு விமர்சனக் கண்ணோட்டத்தோடு அறிக்கை செய்யும் ஊடகத்தின் வகிபாகத்தை அரசியற் கட்சிகளும் அதிகாரிகளும் மதித்தல் வேண்டும்.

3.3 இலங்கை ஊடகவியலாளர்கள், பத்திரிகையாளர் அமைப்புகள், அவர்களது பிரதிநிதிகள் போன்றோரை முழுமையாக கலந்தாலோசிக்காமல் ஊடகம் தொடர்பான சட்டங்கள், ஒழுங்குவிதிகள், கொள்கைகள் போன்றவற்றை உருவாக்கக் கூடாது.

3.4 அரசாங்கத்தின் சகல மட்டங்களிலும் இருந்து பிரஜைகள் தகவல்களை பெற்றுக் கொள்வதற்கும், தகவல் சுதந்திரத்திற்குமான உரிமையை சட்டம் உறுதிப்படுத்த வேண்டும்.

3.5 ஊடகங்கள் மீது நேரடியாகவோ மறைமுகமாகவோ தகாத அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக் கூடாது. ஊடகவியலாளர்களது செயற்பாட்டில் தேவையற்ற தலையீடுகள் காணப்படக்கூடாது. இவ்வகையான அழுத்தங்கள் அடையாளம் காணப்படும் பொழுது அவை தொடர்பாக முறையாக விசாரிக்கப்பட்டு பொருத்தமான பரிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும்.

3.6 அரசாங்கத்திற்கு சொந்தமான சகல ஊடகங்களிலும் பொதுமக்கள் சேவைப் பெறுமானங்கள் மதிக்கப்படல் வேண்டும். பின்வரும் நோக்கங்களின் நிமித்தம் அரசாங்க ஊடகங்களில் உடனடியாக மறுசீரமைப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- பொதுமக்கள் சேவை ஊடகத்தின் மீது காணப்படும் நேரடி அரசியல் கட்டுப்பாடுகளை அகற்றுவதற்கு
- நெறிமுறை சார்ந்த, பொறுப்புக்கூறக்கூடிய, நிதி ரீதியான வெளிப்படைத் தன்மைகளைக் கொண்டதும் சர்வதேச தராதரத்திற்கு நிகரானதுமான சட்டகமொன்றினை பொதுமக்கள் சேவை ஊடகத்தை நிர்வகிப்பதற்காக தோற்றுவித்தல்.
- ஆசிரிய தலையங்கச் சுதந்திரம், அதி உயர் துல்லியம், நம்பகத்தன்மை, சிறப்பான தகவல்கள் ஆகியவற்றை மேம்படுத்தக்கூடிய விதத்தில் ஊடகவியலாளர்களும், ஊடகத் தொழிற்துறையைச் சார்ந்தவர்களும் ஆசிரிய சுய ஒழுங்கமைப்பிற்கு உதவி செய்தல்

## 4. சமூகக் கலந்துரையாடல், ஊடக மற்றும் பத்திரிகையாளர்களின் உரிமைகள்

4.1 இலங்கை ஊடகங்களுக்கு மத்தியில் தொழில் ரீதியான பேச்சுவார்த்தைகளையும் உறவுகளையும் ஏற்படுத்துவதற்கான அடிப்படையை தோற்றுவிப்பதற்காக ஊடக முகாமைத்துவ பிரதிநிதிகள், பணியாட் பிரதிநிதிகள், தொழிற்சங்கங்கள் ஆகியோரை ஒன்றிணைத்து பேச்சுவார்த்தைக்கான கட்டமைப்புக்களை தோற்றுவித்தல்.

4.2 அரசியல் தொடர்புகள், உரிமம் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கலாக ஊடக தொழிற்துறை, சமூக உறவுகள் தொடர்பான சகலவிதமான தகவல்களும் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக தெரியப்படுத்தப்படல் வேண்டும்.

4.3 இலங்கை ஊடகத்துறையை சார்ந்தவர்களது பொருளாதார, சமூக அபிவிருத்திகளை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்படும் செயற்திட்டமானது ஊடக பிரதிநிதிகள், பணியாட் பிரதிநிதிகள் போன்றவர்களுடைய இணக்கப்பாட்டி னூடே மேற்கொள்ளப்படல் வேண்டும். இதில் மாகாண ஊடகவியலாளர்களும் உள்ளடக்கப்பட்டு கூட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் வேலை நிலைமைகளில் முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும். பின்வருவனவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

- சகல ஊழியர்களதும் சம்பளம், தொழில் நிபந்தனைகள், தொழில் உரிமைகள் போன்றவற்றை உள்ளடக்கிய தொழில் ஒப்பந்தமொன்றை உறுதிப்படுத்தல்.
- ஊடகவியலாளர்களதும், ஊடகத்துறையில் பணியாற்றுகின்ற ஏனையவர்களதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
- சுயாதீன எழுத்தாளர் (free lance) அமையத் தொழில் போன்றவற்றை மட்டுப்படுத்தல். இவை பயன்படுத்தப்படும் பொழுது பொருத்தமான கொடுப்பனவுகள் வழங்கப்படுவதை உறுதிசெய்தல்
- ஊடகத்தின் சகல மட்டங்களிலும் பாரபட்சம் காட்டாமை, பால்நிலை சமத்துவம் போன்றவற்றை உறுதிசெய்தல்
- ஊடகத்துறையில் தொழிற்சங்கங்களை அமைப்பதற்கும், அவர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்குமான (பத்திரிகையாளர்கள், ஊடகத்துறையைச் சார்ந்த ஏனையவர்கள் உள்ளடங்களாக) உரிமையை அங்கீகரித் தல்.
- ஊடகத்துறை வாய்ப்புகளில் பல்வகைமையை உறுதிசெய்தல் மற்றும் பொருத்தமான தொழிற்பயிற்சிகளை வழங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்கள் மற்றும் நூல் பட்டியல்

## வளங்கள்

அவுஸ்திரேலிய ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஒழுக்க நெறி கோவை
http: www.abc.net.au/corp/pubs/codeprac 04.htm
கனேடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஊடகவியலாளர் தரங்கள் மற்றும் பயன்பாடுகள்.
http://www.cbc.radio -canada.ca/accountability/journalistic / index .shtmi
கனேடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஓம்புட்ஸ்மன்
http// www.cbc.radio canada.ca/accountability/ombudsman.shtml
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் http: //www.cpalanka.org/
கொலம்பியா ஊடகவியலாளர் பகுப்பாய்வு http://www.cjr.org/
பிரதம ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்
http://www.editorandpublisher.com/eanp/index.jsp
இலங்கை சுதந்திர ஊடக இயக்கம்
http://www.freemediasrilanka.org/
சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம்
http://www.ifj.org/
சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் ஐ.எவ்.ஜே. ஆசிய பசுபிக்
http://www.ifj-asia .org/
வழங்கப்படும் புதிய வலையமைப்பு
http://newassignment. wordpress. com/2006/08/19 welcome - to - newassignmentnet/
பொயின்டர் நிறுவனம்
http://www.poynter.org/
உலகிற்கு அறிக்கையிடல்
http://www.reportingtheworld.org.uk/index 1.html
த கார்டியன் (பிரித்தானியா) எழுத்தவாண முறையிலான வழிகாட்டல்
http://www.telegraph.co.uk/news/main.jhtml? view = BLOG&grid = P30&blog = yourview & menuld = 5465&menultemld=-1&view=&grid =&targetRule =
த கார்டியனில் ஆசிரியர் வாசகரின் இணைப்பு மற்றும் தொகுப்புக் கொள்கை
http://www.guardian.co.uk/styleguide/O..184913.00html
த நிவ்யோர்க் டைம்ஸின் இரகசிய மூலங்களுக்கான கொள்கை
http://www.nytco.com/company - proprticstimes-sources.html
த நிவ்யோர்க் டைம்ஸின் நெறிமுறை சார்ந்த ஊடகவியலுக்கான வழிகாட்டல்கள்
http://www.nytco.com/company-propertics -timesintegrity.html
த நிவ்யோர்க் டைம்ஸின் சிறப்புத் தன்மைக்கான வழிகாட்டல்கள்
http://www.nytco.com/pdf/NYT Ethical Journalism 042904.pdf
ද නිව් යෝර්ක් ටයිම්ස් හි සුපරීක්ෂිත භාවයට මඟපෙන්වීම .
http://www.nytco.com/company-properties-times - integrity.html
த நிவ்யோர்க் டைம்சின் பொதுமக்கள் ஆசிரியர்
http://www.nytimes.com/top/opinion/thepubliceditor/index.html
த நோர்த் வெஸ்ட் வொயிஸ்
http://www..northwestvoice. com/home/
சமூக ஊடகவியலுக்கான பிட்டி மத்திய நிலையம்
http://www.pewcenter.org/doingcj/
சிட்னி மோர்னிங் ஹெரல்டின் நன்கொடையாளர்களுக்கான கோவை
http://www.smh.com.au/ethicscode/index.html
சிட்னி மோர்னிங் ஹெரல்ட், மூலங்கள்
சிட்னி மோர்னிங் ஹெரல்ட், சரிப்படுத்துவதற்கான 10 சட்டங்கள்
டொரனிட்டோ ஸ்தாரின் தனிப்பட்ட கொள்கை
http://www.thestar.com/NASApp/cs/Content Server? pagename=thestar/Render&c=Page&cid=972514122141
வொஷிங்டன் போஸ்டின் ஓம்புட்ஸ்மன்
http://www.washpost.com/news ed/ombudsman/index.html
ஐக்கிய தன்மை - செய்தி அறையின் பன்மைத்துவத்தை உறுதி செய்தல்
http://www.unityjournalists.org

## பெயர் பட்டியல்


எஸ் போமன் மற்றும் சி வில்ஸ் (2003) தாம் ஊடக செவிமடுப்பாளர்களை எதிர்கால செய்திகளை மற்றும் தகவல்களை எவ்வாறு தயாரித்துக் கொள்வது? அமெரிக்க பத்திரிகை நிறுவனத்தின் ஊடக மத்திய நிலையம் ஜுலை
http://www.hypergene.net/wemedia/download/we media.pdf
பீ சட்விஸ் (1991) ஆசிரியர் பீட சுயாதீனத்துவம் தொடர்பாக சாசன தகவல்கள் ஏடொன்றை தொடர்பாடல் சட்ட மத்திய நிலையம் மெல்போர்ன், ஜே.கிளார்க் (2000) மேல்நிலை 40 பத்திரிகைகளில் பயிற்சி ஆசிரியர்கள் தமது விருப்பமான கருத்துக்கள் மற்றும் பயிற்சிகளை முன்வைக்கின்றனர்.
சுதந்திர பேரவை
http://www.freedomforum.org/publications/newroomtraining/top40.3-16-00.PDF
டி. கெரி (2005) பெயர் குறிப்பிடாத மூலாதாரங்களை பயன்படுத்துவதற்கு பல பத்திரிகைகள் இடமளிப்பதில்லையென ஆய்வொன்றிலிருந்து தெரிய வந்துள்ளது. எசோசியேட்ட் பிரஸ்ஸின் செய்தி முகாமை ஆசிரியர்.
www.apme.com/news/2005/060805 anonymous.html
டி. ஹோகின் (2005) "த வோக்லி" சஞ்சிகையின் ஒக்டோபர் / நவம்பர் 35ஆவது இதழின் "பொதுமக்களுக்கு அதிகாரம்" ஜே ஹயிட் மற்றும் எவ் ஸ்மித் (2004) கோர மற்றும் ஊடகவியலாளர்கள் மேலும் சிறந்த ஆவணப்படுத்தலுக்கு வழிகாட்டல், ஊடகவியலாளர்கள் மேலும் சிறந்த ஆவணப்படுத்தலுக்கான வழிகாட்டல் ஊடகவியல் மற்றும் துக்கம் தொடர்பான டார்ட் மத்திய நிலையம் அனர்த்தமொன்றை சிறப்பாக அறிக்கையிடுவதற்கான ஐந்து வழிமுறைகள்.
http://dartcenter,org/articles/special _ features/covering _disasters.html
ஏ ஜோசப் (2005) பிரஜைகளை கவனிப்பதற்கான ஊடகத்தின் கடமை (பிரஜைகள் மற்றும் ஊடகம் தொடர்பான ஆலோசனைப் புத்தகம்) யுனெஸ்கோ மே 19
http://portal.unesco.org/ci/en/files/19137/11164945435advocacy brochure.pdf/advocacy.broc
ஜர்னலிசம் டொட் ஓர்க் (2006) http://www.unitjournalists.org/
கே. மக்பிரைட் (2004) துக்கம் மற்றும் அனர்த்த ஆவணப்படுத்தல். அதனால் ஏற்படுவதென்ன? ஜனவரி
http://povnter.org/column.asp?id=53&aid=76643
டி. மெக்சி (2000) அமெரிக்க பொதுமக்கள் ஊடகவியல் அது கனேடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கு பிரயோசனமானதா? எம்.ஈ.ஈ.எ (1997) ஊடகவியலின் ஒழுக்கநெறி நெல்சன் (2000) ஊடகவியலாளர் ஒழுக்கநெறி கேள்விகளைப் போன்று தீர்வுகளையும் தேடுதல்.
http://journalism.wlu.edu/knight/institute/neison.htm
வழங்கப்படும் புதிய வலையமைப்பு
http://newassignment.wordptess.com/2006/08/19/welcome-to-newassignmentnet/
ஓ யெமன் அல்லது (2004) ஓ மை நியுஸின் "இருபதாம் நூற்றாண்டில் ஊடகவியலின் முடிவு"
http://english.ohmynews.com/articleview/article.view.asp?no =169396& rel no=1
ஜே. பார்க் மற்றும் எஸ் தேசப்பிரிய (2005)
சமாதானத்திற்கான வழியில் முரண்பாட்டு மற்றும் இனப் பல்வகைத் தன்மையை அறிக்கையிடல்
ஆர்ப்பிட்ஸ் (2005) பொயின்டர் ஒன்லைன் - வாசகர்கள்
http://poynter.org/content/ content view.asp?id=83897
பெயர் குறிப்பிடப்படாத மூலங்கள் பத்திரிகையின் வரவேற்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.
http://www'readrship .org/newreades/data keyexperiences.pdf
வாசகர் நிறுவனங்கள் (2004) பத்திரிகைகளில் முக்கிய அனுபவங்கள் நோர்த் வெஸ்டர்ன் பல்கலைக்கழகம்.
http://igmlnet.uohyd.erne.in.8000/info USA media/iljge 0401/gi02 html
ஜே. சோபர் (2005) உலக ஊடக சம்மேளனத்திற்கு வழங்கிய விரிவுரை "செய்திக்காக புதிய பார்வையொன்று தேவை"
மே 25ல் வாஷிங்டனில்
யுனெஸ்கோ (2003) "அனுமதிக்கப்பட்ட நிகழ்ச்சிக்கு நிதி ஒதுக்குதல்" 2004 - 2005 யுனெஸ்கோ பிரதான மகாநாட்டின் 32ஆவது அமர்வு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் அமைந்துள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பிரதான நோக்கமானது வன்முறைகளற்ற விதத்தில் முரண்பாடுகளை தீர்ப்பதற்கும் ஜனநாயக ஆட்சியொன்றுக்காகவும் மாற்று கொள்கைகள் தொடர்பாக அறிவூட்டுவதற்காகவும் பிரசாரம் செய்வதாக தெரிவிக்கின்றது. பல ஆய்வு நடவடிக்கைகளைக் கொண்டுள்ள அமைப்பின் செயற்பாடுகள் மூலம் உண்மையாக ஏற்றுக்கொள்ளக் கூடிய பக்கச்சார்பற்ற அறிக்கையிடலை வளர்ச்சியடையச் செய்கின்றது.
www.cpalanka.org

கனடாவிலிருந்து செயற்படும் ஊடகம், கொள்கைகள் மற்றும் சிவில் சமூகங்களுக்கான நிறுவனம் அர்ப்பணிப்புத் தன்மைக் கொண்ட நிறுவனமானதுடன் அதன் மூலம் பொறுப்புணர்வுடன் பிரவேசிக்கக் கூடிய ஊடகம் மற்றும் ஜனநாயகமான அபிவிருத்தியை விருத்தியடையச்செய்யும் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு உதவி வழங்கும்.

அரச சார்பற்ற, இலாபம் பெறாத அமைப்பான சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் (ஐ.எவ்.ஜே) செய்தி அறிக்கைகள் மற்றும் சமூக நீதியை பாதுகாக்கும் சர்வதேச செயற்பாடுகளை, தொடர்புகளை விருத்தி செய்வதுடன் ஊடகவியலாளர்களின் சக்திமிக்க, சுதந்திர மற்றும் சுயாதீன தொழிற்சங்க அபிவிருத்தியின் மூலம் ஊடகவியலாளர்களின் பண்புகளை விருத்தி செய்கின்றது. தெற்காசிய பசுபிக் ஐ.எவ்.ஜே. அமைப்பு இவ் வலயத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான தொடர்புகளை மேற்கொள்கிறது. முக்கியமாக யுனெஸ்கோ, ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணைக்குழு டிமோ மற்றும் ஐ.எல்.ஓ. உட்பட ஐக்கிய நாடுகள் சபையுடனும் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஐக்கிய நாடுகள் சபையுடனும் சர்வதேச செஞ்சிலுவை சங்க குழு ஐரோப்பிய ஒன்றியம் ஐரோப்பாவுக்கான சபை மற்றும் சர்வதேச தொழிற்சங்கம் மற்றும் பேச்சு சுதந்திரத்திற்கான பல அமைப்புக்களுடன் ஐ.எவ்.ஜே. நெருங்கி செயற்படுகிறது. ஐ.எவ்.ஜே. செயற்பாடுகளின் மூலம் ஊடகவியலாளர்களின் தொழிலைப் போன்றே உற்பத்தியிலும் ஆர்வம் காட்டுகின்றது.

மேலதிக விபரங்களுக்கு www.ifj_asia.org அல்லது www.ifj.org ஐ பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org